# களத்தில்




திருவள்ளுவர் ஆண்டு 2027 சுறவம் 01 (15.01.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (126) அன்பளிப்பு: 60 p

# சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் ஆயுத இழப்பு

- ✳ பரந்தன்- ஆனையிறவு இராணுவ நிலைகள் அழிக்கப்பட்டன
- ✳ படைக்கல அழிப்பு நோக்கு பெரு வெற்றி
- ✳ 11 நீண்டதூர ஆட்டிலறி பீரங்கிகள் அழிப்பு
- ✳ டாங்கிகள், கவச வாகனங்கள் அழிப்பு
- ✳ ஆயுதக் கிடங்குகள் அழிப்பு
- ✳ இருநூறுக்கும் அதிகமான படையினர் பலி
- ✳ 140 போராளிகள் வீரச்சாவு



தமிழீழத் தேசிய விடுதலை வரலாற்றில் மற்றொரு மகத்தான இராணுவ வெற்றி ஈட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதலாவது வெற்றித் தாக்குதல். பத்துக் கிலோ மீற்றர் நீளமானதும், மிகவும் இறுக்கமான பாதுகாப்பைக் கொண்டதுமான ஆனையிறவுத் தளம் மற்றும் பரந்தன் இராணுவ முகாம்களின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் 09-01-1997 அதிகாலை 4 மணியளவில் கடுந் தாக்குதல்களை ஆரம்பித்தனர். ஒரே நேரத்தில் பல முனைகளில் ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதல், ஒரு மணி நேரச் சண்டையின் பின்னர் காவல் அரண்களை உடைத்தெறிந்து உள்ளரங்கப் பகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



"கிட்டு" ஒரு தனி மனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு. வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது. "கிட்டு" , நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாக பிறந்திருக்கின்றாய்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

## தாக்குதல் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன

ஆட்டிலறி பீரங்கித் தளத்தினை விடுதலைப் புலிகள் கைப்பற்றி நிற்பதையும், அங்கு வரிசையாக ஆட்டிலறிப் பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தமையையும், பின்னர் விடுதலைப் புலிகளின் விசேட பயிற்சி பெற்ற தகர்ப்புப் பிரிவினர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## படையினரின் ஆயுத சக்தியை தகர்த்தல்

சிறிலங்காப் படையினரின் சுடுகலன்களின் சக்தியை தகர்க்க வேண்டும் எனும் நோக்குடன் நடாத்தப்பட்ட இத் தாக்குதல், இக் கால கட்டத்தில் ஓர் அரசியல் - இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து விட்டது.

தாக்குதல் தொடங்கி, 'ஆட்டிலறி' பீரங்கித் தளம் மற்றும் மைய நிலைகள் அழிக்கப்பட்டதுடன் தாக்குதல் நோக்கம் நிறைவேறியதையடுத்து, பிற்பகல் 3 மணியளவில் புலிகளின் படையணிகள் தாக்குதலை முடித்துக் கொண்டு தளம் திரும்பியிருந்தன.

இதேவேளை சமர்க் களத்தில் கைப்பற்றப்பட்ட 29 இராணுவத்தினரின் உடல்களை சர்வதேச போர் விதிகளுக்கமைய - மற்றும் மனித நேய உணர்வுகளுக்கேற்ப, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சிறிலங்காவிடம் கையளித்தனர்.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகள் தாக்குதலை முடித்துத் தளம் திரும்பியதும், தாம் 140க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உடல்களை மீட்டதாகவும், கிட்டத்தட்ட 200 இராணுவத்தினரைக் காணவில்லை என்றும், 400க்கும் அதிகமான படையினர் காயமுற்றுள்ளதாகவும் சிறிலங்காவின் பாதுகாப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. ✷

## தலைமைப்பீட அறிக்கை

இத் தாக்குதல் சம்பவம் பற்றி விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில், "முகாம்கள், நிலைகளைக் கைப்பற்றி அங்கு நிலைகொள்வது விடுதலைப் புலிகளின் திட்டமாக இருக்கவில்லை; எதிரியின் படை வலுவை அழிப்பதும், அவர்களின் மனோநிலையை உடைப்பதுமே தாக்குதல் திட்டமாக இருந்தது; இவ் இலக்குகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இத் துணிச்சல் மிகு வெற்றிகரமான அதிரடித் தாக்குதலில் வீரச்சாவு அடைந்தவர்களில் 78 பேர் பெண் போராளிகள், 62 பேர் ஆண் போராளிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாயக மீட்புக்காய் விதையான இவ் மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். ✷


- ❋ தாயகம் நோக்கிய ...
- ❋ போராட்டத்தை ஆரம்பித்த... (நடுப்பக்கம்).
- ❋ போர்க்களத்தில் வீரன்...
- ❋ கனடா (நீதிமன்ற) வழக்கு....
- ❋ கவிதைக்களம் ...
- ❋ வில்லுக்குளத்துப் பறவை.. (உண்மைக் கதை)
- ❋ எங்கள் நினைவுகளும்...
- ❋ தமிழீழச் செய்திகள்...
- ❋ செச்சினிய மக்கள் யெல்சினுக்கு படிப்பித்த...
- ❋ மண்ணை மறவா மக்களின்...
- ❋ போரும் பொருண்மியமும்...

உள்ளே... ☞


## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# சிறிலங்காப் படைத் தாக்குதலினால் கடும் பாதிப்புற்கு உள்ளானோருக்கு உதவி வழங்க சிறிலங்கா அரசு மறுப்பு

-சர்வதேச சமூகத்திற்கு கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

அண்மைக்கால சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான காலம் முதல், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வீடற்றவர்களாக்கப்பட்டுள்ளார்கள் என்பது, சிறீலங்காவிற்கு நன்கு தெரிந்தும் தமிழ் மக்களைப் பராமரிப்பதற்கான எதுவித நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக, மருந்து விநியோகத்தைக் கூட 1996ல் 75 வீதத்தால் குறைத்துள்ளது. நான் அறிந்தவரையில் பல தமிழ் மக்களின் உயிரிழப்புக்களுக்குப் போதிய முன்னேற்பாடுகள் எடுக்கப்படாமையே காரணமாக உள்ளது. ஆகையினால் இவர்களின் மரணங்களுக்கான பொறுப்பாளியாக சிறீலங்கா அரசே உள்ளது. இந்த மனித அவலங்கள் இங்கு நடப்பதனை சர்வதேச உலகிற்கு எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது."

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சிறீலங்கா அரச அதிபர் எஸ். தில்லைநடராசா, மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றின் பின் தன்னிடம் மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜருக்கு பதிலளித்து உரையாற்றுகையில் தெரிவித்தார். மக்களின் கடுந்துன்பங்கள் தனக்கு நன்கு புரிவதாகவும், இத்தகைய சூழலில் மருந்து விநியோகத்தை 1996ல் 75 வீதத்தால் சிறீலங்கா குறைத்துள்ளதைத் தான் பகிரங்கப்படுத்த விரும்புவதாகவும் கூறிய அவர், சிறீலங்காவின் உணவு, மருந்துத் தடைகளைக் கடுமையாக கண்டித்ததுடன், இந்த உண்மைகளை உலகு நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சிறீலங்கா அரச அதிபரின் பேச்சில், சிறீலங்காவின் அரச அதிகாரிகளே – சிறிலங்காவின் 'இனவொதுக்கல் – இனஅழிப்பு' செயற்பாடுகளினால் சிறீலங்கா அரசின் மேல் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்ட ஒரு நிலையை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

சர்வதேசச் சட்டங்களின் படியும், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்களின் படியும் ஒரு அரசு, தனது பிரஜைகள் எனக்கூறிக் கொள்பவர்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கத் தவறும் பாழுது, அம் மக்கள் இயல்பாகவே தமக்குள்ள வெளியக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி, சர்வதேச சமூகத்திடமும் – சர்வதேச நாடுகளிடமும் முறையிடவும் அதனை ஏற்று, சர்வதேச நாடுகள் – சர்வதேசச் சமூகம், அந்நாட்டு இறைமையை பொருட்படுத்தாது அம்மக்களுக்கு உதவவும் உரிமை உண்டு.

இவ்வகையில், தமிழீழ மக்கள் சிறீலங்கா அரசு மனிதாபிமான–மற்ற போர்த் தந்திரங்களை தம் மேல் திணித்து, தம்மை இன அழிப்புச் செய்து – இராணுவ அதிகாரத்துக்கு பணிய வைப்பதற்கு எடுக்கும் கொடிய செயல்களைக் கண்டித்து – 1996ன் இறுதி இரு தினங்களான மார்கழி 30, 31ம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டம் உட்பட தமிழீழ மாவட்டங்கள் பலவற்றில் கண்டனக் கூட்டங்கள், எதிர்ப்புப் பேரணிகள், மகஜர்கள் கையளித்தல் போன்ற செயற் திட்டங்கள் மூலம் சர்வதேச சமூகத்திற்குத் தம் துயர நிலையை பகிரங்கப் படுத்தினர். ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் உட்பட இப்பகுதிகளில் உள்ள பல சர்வதேச அமைப்புக்களுக்கும் மகஜர்களை – வேண்டு கோள்களைக் கையளித்தனர். ●

## வெளிநாட்டு மருத்துவர்களுக்கு சிறிலங்கா அரசு தடை

முதுபெரும் தமிழ் கிராமமான வாகரையில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரான்சிய மருத்துவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என சிறீலங்காப் படையினரால் பணிக்கப்பட்டுள்ளனர். எல்லைகளற்ற மருத்துவர் (MSF) அமைப்பைச் சேர்ந்த இவ் வைத்தியர்கள், சிறீலங்காவினால் ஆக்கிரமிக் கப்பட முடியாதுள்ள இத் தமிழ்ப் பிரதேசத்தில் மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வந்தனர்.

இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதுடன், இப்பகுதிக்கு உணவு கொண்டு செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசு, தமிழ் மக்கள் தம்மில் தங்கி நிற்கும் நிலையை இராணுவ ஆயுதமாகப் பயன்படுத்துவதினால் இயல்பாகவே சிறீலங்கா தன்னை ஒரு 'அந்நிய அரசாக' மாற்றி விட்டது.

இதற் கிடையில், யேர்மன் அரசின் நிதியுதவியில் மண்டூரில் அமைக்கப் பட்ட அகதிகள் நிலையம் ஒன்றிலிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் அகதிகளை வெளியேற்றிய சிறீலங்காப் படையினர், அந்தக் கட்டிடத்தை முகாமாக மாற்றியமைத்துள்ளனர். ●

## பாப்பாண்டவரின் வத்திக்கான் பிரதிநிதி யாழ்.குடாநாட்டு நிலைகண்டு திகைப்பு

கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை 2வது சின்னப்பர் அருளப்பரின் வத்திக்கான் பிரதிநிதி, யாழ். குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டு குடாநாட்டு நிலைகளைக் கண்டறிந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

80 வீதமான கட்டிடங்கள் இடிந்துள்ள யாழ். குடாநாட்டில் புனர் நிர்மாண வேலைகள் எதுவும், எதுவித அக் கறையுடனும் செயற் படுத்தப்படாத நிலையில் உள்ளது.

யாழ். குடாநாட்டின் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடு மிகவும் மோசமாக உள்ளது.

மலசல கூடங்கள் கூட திருத்தப்படாத நிலையில் உள்ளதால், தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாய நிலையில் மக்கள் வாழ்கின்றனர்.

மக்களில் பலருடைய வீடுகள், குண்டு வீச்சுக்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளதினால் மக்கள் தங்கள் இருப்பிடங்களில் வெய்யிலாலும் மழையினாலும் பாதிப்புற்ற வண்ணம் வாழ் கின்றனர்.

வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களில் இருந்து பெருந்தொகையான பணம்,

யாழ். குடாநாட்டின் புனரமைப்புக்கென வழங்கப் பட்ட போதிலும், இது வரை மக்களின் அடிப்படை வசதிகள் கூட சீர் செய்யப்படாத நிலையில் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இந் நிகழ்வுகளை நேரில் பார்த்த அப் பிரதிநிதி திகைப் படைந்ததிற்கு,

இதைவிட வேறு காரணங்கள் இருக்க முடியாது. ●

## குழந்தை பிறந்தவுடன் தாய் மரணம் படையினரின் கொடுமை

மாங்குளத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளின் தாயான முப்பத்தி மூன்று வயதுடைய கந்தசாமி விஜயகுமாரி எனும் தமிழ்ப்பெண் மகப்பேற்றினை எதிர்பார்த்து கொழும்பு செல்ல முயன்றார். அவரைக் கொழும்பு செல்லவிடாது வவுனியாவில் உள்ள தடுப்பு முகாமில் சிறீலங்கா இராணுவம் வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்தது.

அவர் பலமுறை மருத்துவ வசதிகளைப் பெறுவதற்காக கொழும்பு செல்ல அனுமதிகேட்டும் மறுக்கப்பட்ட நிலையில், மார்கழி 26 இரவு பிரசவ வேதனை ஆரம்பித்ததும் வேதனை மிகுதியில் தெருவில் இறங்கிய இப்பெண், கொட்டும் மழையில் மரத்தடியில் குழந்தையைப் பிரசவித்துவிட்டு மரணமடைந்துள்ளார். குற்றுயிராய் வீறிட்டு அழுதபடியிருந்த குழந்தையை அவ் வழியே சென்ற ஒருவர் கொடுத்த தகவலின் பின்னர், குழந்தை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ●

## கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, காணாமல் போதல் இதுதான் வாழ்வா?

மீசாலை தென்மராட்சியில் தனது ஆறுகுழந்தைகளுடனும் மனைவியுடனும் இரவு சாப்பிட்டுக்கொண்டிருந்த நாகலிங்கம் வரப்பிரகாசம் எனும் பொதுமகன் சிறீலங்கா இராணுவத்தினால் வீட்டுக்கு எதிரே இழுத்து வரப்பட்டு மனைவி, குழந்தைகளின் கண்ணெதிரே துப்பாக்கியால் சல்லடைபோட்டு சுடப்பட்டு தூக்கி வீசப்பட்டார். இந்தக் கொடிய படுகொலையைத் தடுக்கவென ஓடிய அவரின் அவரின் மனைவியும் சூட்டுக்காயத்துக்கு உள்ளானார்.

மட்டக்களப்பில் மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலையில் முகாமிட்டுள்ள சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர், வயலில் நின்ற தன் கணவனுக்கு உணவு எடுத்துச் சென்ற தமிழ்ப் பெண் ஒருவரை, துப்பாக்கிகளால் அடித்து வதைத்து பின்னர் மிருகத்தனமான முறையில் பாலியல் பலாத்காரத்துக்கு பலியாக்கியுள்ளனர்.

சம்மாந்துறையில், கடந்த ஆண்டில் திருமணம் செய்து ஒரு குழந்தையுடன் வாழ்ந்த இளம் குடும்பம் ஒன்று, வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான எறிகணை வீச்சினால் குடும்பத்துடன் பலியாகியுள்ளனர். கிருஸ்ணபிள்ளை பவளசிங்கம் (27), பாமா (25) ஜீவிதா (1) ஆகியோரே சிறீலங்காவின் கொடிய இனக் கொலைக்கு இலக்காகியுள்ளனர்.

வடமராட்சி நாகர்கோவில் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 75 வயது தமிழ் மூதாட்டியான தியாகராசா செல்லம்மா என்பவரை சுட்டுக் காயப்படுத்திவிட்டு, அவரது வீட்டுப் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். மூதாட்டியின் வீட்டில் மட்டுமல்லாது, அந்தச் சுற்றாடலில் உள்ள ஏனைய வீடுகளிலும் கொள்ளையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவத்தினர், வானொலிப் பெட்டிகள், மின்கல விளக்குகளை அடித்து உடைத்துள்ளனர்.

பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடிப்பதிலேயே படையினர் தீவிரமாக ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் பகுதியில் 10 தமிழ் பொதுமக்கள், சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது கடத்திச் சொல்லப் பட்டுள்ளனர். இவர்களின் நிலை என்ன, என்ன ஆனார்கள் என்பது குறித்த எதுவித தகவலும் கிடைக்காததினால், *'காணாமல் போனவர்கள்'* வரிசையில் இவர்களையும் சிறீலங்கா இராணுவம் சேர்த்து விட்டதோ என இவர்களின் குடும்பத்தவர்கள் கலங்கித் தவிக்கின்றனர்.

இவ்வாறாக, சிறிலங்காப் படை–களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் தினம் தினம் அட்டூழியச் செய்திகள் பல வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வெளிவரும் இந்த அதிர்ச்சிச் செய்திகளை விட வெளிவராமல் இருப்பவை இன்னும் ஏராளம். அவை சிலவேளை, ஆக்கிரமிப்பு இராணுவம் விரட்டியடிக்கப்பட்ட பின்பே வெளியுலகிற்குத் தெரிய வரலாம். ❑

## வன்னியில் கால்நடை வளர்ப்பு நிலையங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் பல கால்நடை வளர்ப்பு நிலையங்கள் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் திறந்து வைக்கப் பட்டன.

ஸ்கந்தபுரம், விஸ்வமடு, ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு நிலையங்கள் – பூநகரி, வட்டக்கச்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் இராணுவ அழுத்தங்களால் வன்னிப் பகுதி மக்களின் பொருண்மிய வாழ்வுக்கு ஏற்படுத்த ப்பட்டுவரும் தற்காலிகத் தடங் கல்களை முறியடிக்கும் முகமாக, இப்பகுதி மக்களின் பொருண்மிய வாழ்வை உறுதிபடுத்தக்கூடிய திட்டங்கள் விரைவு படுத்தப்பட்டு, சிறிலங்காவின் தமிழ் மக்கள் மீதான பொருண்மியத் தடைகள் முறியடிக் கப்படுவதற்கான ஆயத்த வேலை கள் வேகப்படுத்தப்பட்டு வருகி ன்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ●

## மட்டக்களப்பில் ஐந்து ஆண்டில் 2500 தமிழர்களை காணவில்லை

கடந்த 5 ஆண்டுகாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் 2500 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர் என்ற தகவலை அமெரிக்க திருச்சபையைச் சேர்ந்த அமெரிக்கரான மில்லர் என்பவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்து விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நீண்ட காலமாக வசித்து, மிக ஆழமான ஆய்வுகளுடனான தரவுகளை எடுத்த பின்னரே இத்தகவலை அவர் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கைகளினால் தென் தமிழீழத்தில் பொது மக்களுக்கும், சிறிலங்காப் படையினருக்கும் இடையேயுள்ள உறவு நிலை மோசமடைந்து கொண்டு செல்லும் இக் கால கட்டத்தில் வெளியாகியுள்ள அமெரிக்க மறையியாளரின் தகவல், சர்வதேச உலகுக்கு இப் பகுதி மக்களின் அவல வாழ்வை மேலும் தெளிவ படுத்துவதாக அமைந்து உள்ளது. ●

## படுதோல்வி அடையும் இராணுவ குறிக்கோள்

"கெரில்லாப் போர் முறையைக் கையாளும் ஒரு விடுதலை இயக்கம், பெரும் உயிர்ச்சேதத்தைத் தவிர்க்கும் நோக்கில், படையணிகளைப் பின்னகர்த்திவரும் சில நிலப்பகுதிகளில் தனது கட்டுப்பாட்டை இழப்பது தோல்வியைக் குறிக்காது. இதனை, ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே கொள்ளலாம். படைவலுவையும் போராட்ட உறுதியையும் தக்க வைத்துக்கொண்டால், எமக்குச் சாதகமான புறநிலச்சூழலில் நாம் தெரிவு செய்யும் நேரத்தில் தாக்குதல்களை நடாத்தி, எதிரியின் படைவலுவை எம்மால் அழிக்க முடியும். இதனால், இழந்த பிரதேசங்களையும் நாம் மீட்டெடுப்பது சாத்தியமாகும். முல்லைத்தீவில் நாம் ஈட்டிய மகத்தான இராணுவச்சாதனை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இத்தாக்குதலில், சிங்களப் படைகளுக்குப் பாரிய உயிர்ச்சேதத்தை விளைவித்து, எதிரியின் படைவலுவைப் பலவீனப்படுத்தியதோடு, இழந்த பிரதேசத்தையும் நாம் மீட்டெடுக்க முடிந்தது. எமது படைவலுவை நாம் தக்கவைத்துக் கொண்டதால் தான் இந்த வெற்றியை எம்மால் ஈட்ட முடிந்தது. அத்தோடு, எமது படைவலுவையும் நாம் மேலும் பலப்படுத்த முடிந்தது"

தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 1996ம் ஆண்டு தமிழீழத் தேசிய நாளான மாவீரர் நாளன்று தேசமக்களுக்கு ஆற்றிய இவ்வுரையின் நடைமுறைச்சாத்தியம், 1997ம் ஆண்டு தைமாதம் 9ம் திகதி பரந்தன் – ஆனையிறவுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தளத்தின் மையநிலைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்றி, ஆட்டிலறி பீரங்கித் தளத்தையும் நீண்டதூர ஆட்டிலறி பீரங்கிகளையும் நொருக்கி, சிறிலங்கா இராணுவத்தின் சுடுசக்தியை அழித்ததன் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் துணிச்சல்மிகு இத்தாக்குதல் நடவடிக்கை, சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ மூலோபாயத்தையே தகர்த்தெறிந்துள்ளது. தேசத்தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் உரையில் இதையும் அழகாக எடுத்து விளக்கினார். "எமது வரலாற்றுப் பகைச்சக்தியான சிங்கள பௌத்த பேரினவாதம், சந்திரிகா அரசு என்ற நிறுவனவடிவம் கொண்டு தமிழினத்துக்கு எதிராக இனஅழிப்புப் போர் ஒன்றை நடாத்தி வருகிறது. சிங்களத்தின் முழுப்படை பலத்தையும் ஒன்றுதிரட்டி வடபுலத்தில் தமிழரின் வரலாற்று நிலங்களை ஆக்கிரமித்து நிற்கிறது. பெருந்தொகையில் படையணிகளையும், பெரியளவில் வெடிபொருள் சக்தியையும் பயன்படுத்தி, புலிகளின் படைவலுவை அழிப்பதுதான், இந்த ஆக்கிரமிப்புப் போரின் முக்கிய மூலோபாயமாக அமைந்தது. ஆயினும், இந்தக்குறிக்கோளை அடைவதில், சிங்கள இராணுவம் படுதோல்வியையே சந்தித்திருக்கிறது. நான்கு புறமும் கடல்சூழ்ந்த குடாநாட்டுப் பகுதியில், புவியியல் ரீதியாக எமக்குப்பாதகமான நிலப்பரப்பில், பெரும் மரபுவழிச்சமர்களைத் தொடுத்து எமது படைவலுவை அழிக்க இராணுவம் திட்டமிட்டது. இந்தச் சூழ்ச்சித்திட்டத்தை நாம் நன்கறிவோம். ஆகவே, எதிரியின் இராணுவப் பொறிக்குள் சிக்கிவிடாது, மிகவும் சாதுரியமாகப் போரிட்டு, தந்திரோபாயமான படைநகர்வுகளை மேற்கொண்டு, எமது படைவலுவைச் சீர்குலைக்காது நாம் பாதுகாத்தோம். இதன்காரணமாக, யாழ்ப்பாணச்சமரில் இராணுவத்தின் முக்கிய மூலோபாயம் கைகூடவில்லை என உறுதியாகச் சொல்லலாம்" என்பது தலைவன் பிரபாகரனின் நுணுக்கமான விளக்கம்.

அவரது வார்த்தைகளின் உண்மை, பரந்தன் – ஆனையிறவுப்பகுதியில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நடைமுறைப் பாடமாக உணர்த்தப்பட்டுள்ளது.

"சிறிலங்காப் படைகளின் சுடுசக்தியை அழித்தல்" எனும் இராணுவ இலக்கோடு வீறுகொண்டு பாய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள், சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு இருப்பிற்கு மரணஅடி கொடுத்து, சிறிலங்காப் படையின் உயிர் நிலையையே உலுக்கி எடுத்துள்ளனர். இதனால், கதிகலங்கியுள்ள சந்திரிகா அரசாங்கத்திற்கு, தேசத்தலைவர் பிரபாகரனின் பெறுமதிமிகு வார்த்தைகள் சிலவற்றை மீண்டும் நினைவூட்டுதல் பொருத்தமானதே.

"தமிழர் மண்ணை இராணுவம் ஆக்கிரமித்து, அந்த ஆக்கிரமிப்பை இராணுவ மேலாதிக்கநிலையாகக் கருதி அதனைத் தனக்கு அனுகூலமான அழுத்தமாகப் பாவித்து, பேச்சுக்களை நடாத்த சிங்கள அரசு எண்ணலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரையில், இவ்விதமான பேச்சுவார்த்தை சுதந்திரமானதாக, சமத்துவமானதாக அமையாது. ஏனெனில், இராணுவப் பலத்தை துரும்புச் சீட்டாக வைத்து எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேரம்பேச முயலும் ஒரு அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. அதனால்தான், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தம் நீங்கிய சுமூகமான இயல்பு நிலையில், பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம். படைகளை விலக்குதல், நெருக்கடியைத் தணித்தல், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் ஆகியன அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிகழ்வாக அமைதல் அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும். இப்பிரச்சினைகள் பற்றிப்பேசி ஓர் உடன்பாட்டைக் காணவும் நாம் தயாராக இருக்கின்றோம்" என்பதே தமிழீழத் தேசத்தலைவர் பிரபாகரனின் அர்த்தமுள்ள வார்த்தைகள். இதனைப்புரிந்து ஆவன செய்தல் மூலமே, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு எய்தப்படலாம். இது தவிர்ந்த இராணுவத்தீர்வு அணுகு முறைகள் படுதோல்வியைக் கொடுக்கும் என்பதையே முல்லைப் பெருஞ்சமர் மட்டுமல்ல, பரந்தன்–ஆனையிறவு சுடுசக்தி அழிப்பு நடவடிக்கைகளும் உணர்த்துகின்றன. ✷

## மனங்களை வெல்லுதல்

"அதிகாரப் பரவலாக்கல் பிரேரணையைக் கொண்டு தமிழ்ச் சமூகத்தின் மனத்தை வென்றெடுத்து, விடுதலைப் புலிகளை உதாசீனப் படுத்தலாம் என்ற கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" என்ற 'இன்டர் நாசனல் அலேட்' என்ற அமைப்பின் பொதுச் செயலாளர் அஜித் ரூபசிங்காவின் கூற்றுக்கள் – இலங்கை இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு குறித்து பேசுபவர்கள் – முயற்சிளை மேற்கொள்பவர்களுக்கு நல்லதொரு அறிவுரையாகும். ஏனெனில், இன்றைய யதார்த்தம் அவ்வாறே உள்ளது.

இதன் பிரகாரம், இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண முற்படும் எவரும் – "விடுதலைப் புலிகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்; முடிவேடுக்க வேண்டும்" என்பது இன்றைய அரசியல் சூழ்நிலை ஆகும். ஏனெனில், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். அவர்களே உரி மைக்காகப் போராடும் சக்தியா கவும் உள்ளனர்.

இனப் பிரச்சனைக்கு 'அதிகாரப் பரவலாக்கல்' என்பது ஒரு தீர்வாக அமையக்கூடியது தான். ஆனால், இந்த அதிகாரப் பரவலாக்கல் எத்தைகைய சூழ்நிலையில் மேற்கொள்ளப் படுகிறது; எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதைப் பொறுத்தே, அது தீர்வாக அமைய முடியும். இலங்கையின் இனப்பிரச்சனைக்கு இன்றைய நிலையில், அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதென்பது - மிக உயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் – அவர்களின் விடுதலையை உறுதிப்படுத்தக்கூடிய ஓர் கட்டத்திலும் – அதே சமயம், சிறிலங்கா ஆட்சியாளரினால் தமது விருப்பிற்கு ஏற்ற வகையிலும் தீர்வு காணமுடியாத ஒரு நிலையையும் அடைந்துள்ளது.

இந்த நிலையில், சிறிலங்கா அரசு இனப் பிரச்சனைத் தீர்வுக்கென முன்வைத்துள்ள ஒரு 'அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம்', "யானைப் பசிக்கு, சோளன் பொரி போன்றது". அதில் கூட ஆளும் கட்சிக்குள்ளேயும், எதிர்க் கட்சியிடமும் முரண்பாடுகள் பல உள்ளது. ஆளும் கட்சிக்கள் ஒரு தரப்பு, இந்த அதிகாரப் பரவலாக்கலுக்கு தனது எதிர்ப்பைப் பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றது. எதிர்க் கட்சியோ, இனப்பிரச்னைக்கு ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட தீர்வு யோசனைகளை ஏற்கப் போவதில்லை எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

ஆட்சியாளர்கள் தற்பொழுது முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகள், ஒற்றை யாட்சி வரம்பிற்கு அப்பாற்பட்ட வையா? என்பதைத் தீர்மானிக்க முடியாத நிலையிலும் கூட, எதிர்க் கட்சியினரின் இந்த எதிர்பார்ப்பானது, அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நிறைவேற்றல் குறித்துப் பலத்த கேள்வி எழுப்புவதாகவே உள்ளது.

இவ்வாறாக, வேள்விக்குறிகளுடன் அதிகாரப் பரவலாக்கல்

திட்டங்கள் ஒரு புறம் இருக்கையில், இதனைக் கொண்டு "தமிழ் மக்களின் மனங்களை வெல்லுதல்" என்பதும், விடுதலைப் புலிகளை ஓரம் தட்டி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் என்பதும் எவ்வாறு சாத்தியமானதாகும்?

மக்களின் மனங்களை வெல்வதென்பது, சந்திரிகா அரசு நினைப்பது போன்று இலகுவான ஒன்றல்ல. அதே போன்று மக்களின் உணர்வுடன் கலந்துள்ளவர்களைப் பிரிப்பதென்பதும் சாத்தியமானது அல்ல.

மக்களின் மனங்களை வெல்வதென்பது – அவர்களின் எதிர்பார்ப்புக்கு மீறியதான – ஆச்சரியம் அளிக்கக்கூடிய – அவர்களின் விருப்பிற்கு ஏற்றவை நிகழும் போதே சாத்தியமானதாகும். ஆனால், மக்களின் உணர்வுடன் கலந்தவர்களைப் பிரிப்பதென்பது அந்த நிலையிலும் சாத்தியமானதாகமாட்டாது.

இந்த நிலையில் சந்திரிகா அரசானது, மக்களின் எதிர்பார்ப்புகளை சிறிதேனும் நிறைவேற்ற முடியாத அதிகாரப் பரவலாக்கல் முறை மூலம் – தமிழ் மக்களின் மனங்களை வென்று விடலாம் என எண்ணுவதும் – இராணுவ ஆக்கிரமிப்புக்குள் மக்களைக் கொண்டு வந்தால், அந்த மக்களின் மனங்களை வெல்லுவதாகக் கருதுவதும் – இதன் மூலம் புலிகளை ஓரந்தட்டி ஒழித்து விடலாம் எனச் சிந்திப்பதும் மடமைத்தனமாகும். இது அஜித் ரூபசிங்காவினால் மட்டுமல்ல, சிந்திக்கத் தெரிந்த எவருடைய சிந்தனையிலுமே சரியான விடயமாகவே அமையும். ✷

### 'களத்தில்' வாசகர் கவனத்திற்கு !

தமிழீழத் தாயகத்தைத் தாகமாகக் கொண்டு, தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி திங்கள் தோறும் ஏற்று இரு இதழ்களாகி வெளிவரும் 'களத்தில்' செய்தித்தாள் தமிழீழ விடுதலையை நேசிக்கும் வாசகப் பெருமக்களாகிய உங்கள் சொத்தாகும். இவ்விதழின் வளர்ச்சியும் உங்கள் கையிலேயே தங்கியுள்ளது. இதைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் இதழ்களில் 'வாசகர் களம்' என்ற பகுதி ஒன்றினை அறிமுகம் செய்ய உள்ளோம். இதற்கு வாசகர்களிடமிருந்து ஆக்கபூரவமான ஆலோசனைகளும், ஆக்கங்களும் உடன் வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்களை, ஆக்கங்களை, விமர்சனங்களை எழுத்து மூலம் ,

**'Kalathil', Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

களத்தில் ஆசிரியர் குழு

# ஆயுதங்களை வைத்திருக்க புலிகளுக்கு உரிமை இருக்கிறது

## -தேசிய சமாதான சபை அமைப்பாளர் செவ்வி

''அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படாதவிடத்து – சமூகத்திலுள்ள எந்தவொரு குழுவுக்கும் அரசுக்கெதிராக ஆயுதமேந்த தார்மீக உரிமையுண்டு." இவ்வாறு தேசிய சமாதான சபையின் அமைப்பாளரான அஜித் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழொன்றுக்கு அளித்த செவ்வியில் – புலிகள் ஆயுதமேந்திப் போராடுவது தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணக்கப்பாட்டிற்கு வருவதென்பது ஒருபோதும் தரப்பொன்று சரணடைவதை குறிக்க மாட்டாது. அது அத்தரப்பு ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்பதும் அர்த்தப்படாது.

தமிழருக்கு எதிரான வன்முறைகள் யாவும் அரசாலேயே தூண்டிவிடப்பட்டன. 58இலும், 83இலும் இதுதான் நடந்தது.

ஓர் அரசு, அரச பயங்கரவாதத்தை மக்கள் மீது கட்டவிழ்த்து விடும்போது – அந்த மக்களுக்கு ஆயுதமேந்தும் உரிமை இருக்கிறது. இவ்வாறே புலிகளும் ஆயுதமேந்தினர். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் எதுவும் செய்ய முடியாது தோல்வி கண்டபோதே இந்நிலை ஏற்பட்டது. தமிழ் பாராளுமன்றவாதிகள் – ஐக்கிய தேசியக் கட்சியினாலும் பொதுஜன ஐக் ' முன்னணியினாலும் தத்தமது அரசியல் லாபத்துக்காக படைக் காய்களாக்கப்பட்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன், விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பை நிறுத்தியது நியாயமானதுதானா, இல்லையா என்பது பற்றி நான் கூறவரவில்லை. ஆனால், புலிகளின் பார்வையின்படி பொருளாதாரத் தடையை நீக்குவதும், பாதுகாப்புக் கெடுபிடிகளை தளர்த்துவதும் மிகவும் அடிப்படையான நிபந்தனைகளாகும். ஏனெனில், வடக்கிலுள்ள மக்கள் பன்னிரண்டு ஆண்டுகளாக இவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இன்று, அரசு முதலில் வடக்கிலுள்ள மக்களுக்கு நான்கு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க வேண்டும். தாண்டிக்குளத்திலுள்ள கெடுபிடிகள் நீக்கப்பட வேண்டும்.

இன்று, மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். என சகலருமே ஆயுதமேந்தியுள்ளனர். இந்த நிலையில் புலிகளை மட்டும் ஆயுதங்களைத் தருமாறு எப்படிக் கேட்க முடியும்? இது இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கான வழியல்லவே. ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு புலிகளுக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் காரணத்துடனேயே ஆயுதமேந்தினர் என்றும் அவர் தனது செவ்வியில் தெரிவித்தார். ✷

# தாக்குதல் புகைப்படங்கள்...

அவற்றை தகர்த்தெறிந்ததன் பின்னர் அவை சின்னாபின்னமாகச் சிதறிக் கிடக்கும் காட்சியையும் உள்ளடக்கிய புகைப்படங்கள் தாயகத்தில் வெளிவரும் தினசரிப் பத்திரிகை 'ஈழநாதம்' மூலம் வெளியுலகிற்கு, தாக்குதலில் என்ன நடந்ததென்பதை தெளிவாக விளக்கக் கூடிய வகையில் இப்புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தனது படைகள் தொடர்ந்தும் படை நிலைகளையும், ஆயுத தளபாடங்களையும் தக்க வைத்துக் கொண்டிருந்ததாகவும், பின்னர் விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் அவைகளைச் சிக்காது தடுப்பதற்காகவே தனது படைகள் அவற்றை அழித்ததாகவும் கதையளந்த சிறிலங்கா அரச – இராணுவத் தலைமைக்கு, ஈழநாதம் பத்திரிகை வெளியிட்ட புகைப்படங்களே மறுப்புச் சான்றுகளாக உள்ளன. ✷

# சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும்...

விசேட அதிரடிப் படையணி, சகல தடைகளையும் உடைத்துக் கொண்டு மத்திய பகுதி நோக்கி வெற்றிகரமாக முன்னேறியது. பரந்தன் – ஆனையிறவுப் பகுதியில் உள்ள இராணுவத்தின் சகல காவல் நிலைகளும், புலி வீரர்களினால் கைப்பற்றப்பட்டு அவர்களின் திட்டம் நிறைவேறும் வரை அவர்களது கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளது.

மிகவும் உயர் பாதுகாப்பைக் கொண்ட சிறிலங்கா இர்ராணுவத்தின் 'ஆட்டிலறி' பீரங்கித் தளம், மற்றும் ஆயுதக் கிடங்கு என்பன விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணியினரின் கைவசமாகின. அள்ளி எடுத்துச் செல்லக்கூடிய ஆயுதங்கள் பெருந்தொகையில் அப்புறப்படுத்தப்பட்டன. ஆயினும் அந்தச் தளச் சூழ்நிலையில் கொண்டு செல்ல முடியாத நிலையில் இருந்த 'கொவிட்சர்' ரக 122 மி.மீ ஆட்டிலறி பீரங்கிகள் ஒன்பது,

130 மி.மீ ஆட்டிலறி பீரங்கிகள் இரண்டு,

மற்றும் ஆயுதக் கிடங்கில் இருந்த எடுத்துச் செல்ல முடியாத ஆயுதங்கள் என்பனவுடன் டாங்கிகள், கவச வாகனங்கள் என்பன புலி வீரர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இவை போக, 120 மி.மீ மோட்டார்கள்,

50 கலிபர் கனரக துப்பாக்கிகள் மூன்று மற்றும் நூற்றுக்கணக்கான தன்னியக்கத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான மோட்டார் எறிகணைகளும், துப்பாக்கி ரவைகளும் புலி வீரர்களால் அள்ளிச் செல்லப்பட்டன.

இதேவேளை, வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட ஆயுதக் கிடங்குகள், ஆயுதத் தளபாடங்கள் கொழுந்து விட்டெரியத் தொடங்கிய தீச்சுவாலை கரும் புகையுடன் மறுநாள் பிற்பகல் வரை தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததனை சில மைல்களுக்கு அப்பாலும் காணக்கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக, ஆனையிறவு – பரந்தன் பகுதியில் 10 கிலோ மீற்றருக்கு அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிகள் – காவலரண்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளதினாலும், இப்பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கவச வாகனங்கள், டாங்கிகள் அனைத்தும் சிதைக்கப்பட்டதினால் சிறிலங்கா இராணுவத்திற்கு பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இத் துணிகர – வெற்றிகரமான தாக்குதலானது, பல ஆண்டுகளாக இடம்பெறும் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்படும் 'சிறிலங்கா அரசுக்கு ஓர் சாட்டை அடி' என்பதுடன், இந்த இராணுவத் தீர்வு அணுகுமுறை என்றுமே சாத்தியமற்றது என்பதைத் தெட்டத் தெளிவுபடுத்தியுள்ளதாக, சர்வதேசச் செய்தியாளர்கள் உட்பட பல அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ✷

# சர்வதேச-உள்ளூர் தொடர்பு சாதனங்கள் வியப்பு

சிறிலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி, கொழும்புப் பத்திரிகைகள், கொழும்பிலுள்ள சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் சிறிலங்கா இராணுவத்திற்கு ஓர் பெரும் ஆயுத இழப்பு இத் தாக்குதலால் விளைவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளன. முல்லைத்தீவில் அதிக உயிரிழப்பு மூலம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஆளணிச் சேதமும், பரந்தனில் அதிக ஆயுத இழப்பு மூலம் பலத்த படைக்கல சக்தி இழப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அவதானிகள் கருதுகின்றனர்.

பி.பி.சி. செய்தி நிறுவனம், "சிறிலங்கா அரச படைகளின் பலவீன நிலையையும், தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தச் சூழ்நிலையிலும் போராடக்கூடிய சக்தியாக உள்ளனர் என்ற உண்மையையும், இத் தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளதால், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் இந்தச் சமர் மிக முக்கியமான ஒன்று" எனக் கூறியுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் வெரித்தாஸ் வானொலியின் விமர்சகர், "பரந்தன் – கிளிநொச்சியில் இராணுவத்தை முன்னேறவிட்ட விடுதலைப் புலிகள், தாம் இராணுவ முட்டாள்கள் அல்ல என்பதனை இத் தாக்குதலால் மீண்டும் நிரூபித்துள்ளனர்" என விமர்சித்தார். ✷

# தேச விடுதலைக்காய் மாவீரராகியோர் விபரத் திரட்டு



தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமான காலம் முதல் 30, கார்த்திகை 1996 வரை தேச விடுதலைக்காய் மாவீரராகியவர்களின் விபரத் திரட்டு ஒன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இதுவரை மாவீரராகிய விடுதலைப் புலிகள் | - 9301 |
| ஆண் மாவீரர் | - 8222 |
| பெண் மாவீரர் | - 1079 |
| கரும்புலிகளின் மாவீரர் எண்ணிக்கை | - 94 |
| ஆண் கரும்புலிகள் | - 33 |
| பெண் கடற்கரும்புலிகள் | - 45 |
| ஆண் கடற்கரும்புலிகள் | - 16 |

பெரும் போர்க்களமொன்றிலும் மாவீரராகியோர்:

| | |
|---|---|
| ஆகாய கடல் வெளிச் சமர் | - 602 |
| மணலாறு | - 233 |
| தவளைப் பாய்ச்சல் | - 459 |
| கொக்குத் தொடுவாய் | - 175 |
| இடி முழக்கம் | - 181 |
| சூரியக் கதிர் | - 438 |
| ஓயாத அலைகள் | - 314 |
| சத் ஜெய 2 | - 115 |
| சத் ஜெய 3 | - 126 |

# பழிவாங்கல் தாக்குதல்கள்

தமக்கு ஏற்பட்ட இந்த எதிர்பாராத அதிர்ச்சிகரமான தோல்வியை அடுத்து சிறிலங்காப் படையினர் தமது வழமையான பழிவாங்கல் தாக்குதல்களை அப்பாவித் தமிழ் மக்கள் மேல் தொடர்ந்தனர். பரந்தன் பகுதி முழுவதும் கடுமையான விமானக் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தன.

மக்கள் செறிவுகூடிய விசுவமடுப் பகுதி மீது, சிறிலங்கா அரச பயங்கரவாதிகள் புக்காரா விமான மூலம், கொடூரமான குண்டு வீச்சை நிகழ்த்தியுள்ளனர். இதனால் 49 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான பசுபதி திருச்செல்வம், 4 பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய சரவணன் குஞ்சி, 10 வயதுடைய சரவணன் ரமேஸ் ஆகிய தமிழ்ப் பொதுமக்கள் அநியாயமாக உயிரிழந்தனர். 14 பொதுமக்கள் காயமுற்றுள்ளனர்.

இதேவேளை சுண்டிக்குளத்திலும் கிபீர் விமானத் தாக்குதலுக்கு 17 வயதுடைய யோசப் ஆனந்தன், 12 வயதுடைய துரைராசா ராஜன்போல் ஆகிய பொதுமக்கள் சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்குப் பலியாகியுள்ளனர். அத்துடன் 4 பொதுமக்களும் படுகாயமுற்றுள்ளனர். ✷

# லண்டன் வாழ் தமிழ் மக்கள் தாமாகவே முன்வந்து நிதிப்பங்களிப்பு

லண்டனில் 12-01-97 இல் நடைபெற்ற, கேணல் கிட்டு வினதும் அவருடன் வீரச்சா வைத் தழுவிக்கொண்ட தோழர்களினதும் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள், தாமாகவே முன்வந்து நீண்ட வரிசையில் நின்று, தமிழீழத்தின் விடுதலைக்காய் உணர்வுடன் நிதிப் பங்களிப்புச் செய்தனர்.



தனது பங்களிப்பை வழங்கிக்கொண்டிருக்கும் சிறுமி

பகிரங்கமாகவே, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நிதிப் பங்களிப்புச் செய்தல், பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுக்கு இது முதல் அனுபவமாகும். இருப்பினும், எந்தவிதத் தயக்கமுமின்றி சிறுவர், இளைஞர், இளம் பெண்கள், வயோதிபர் என்ற வேறுபாடில்லாது தமக்கென்றொரு தாயகம் அமைந்திட, அதற்காகவே தம்மை ஈகம் செய்துவரும் விடுதலைப் புலிகளின் போராட்டப் பலத்தைப் பெருக்கிட பணமாகவும், காசோலையாகவும், தங்க நகைகளாகவும் பங்களிப்புச் செய்து தமது விடுதலை உணர்வை வெளிப்படுத்திக் கொண்டனர். சிலர் தமது திருமண மோதிரம், பெற்றோர் தமது நினைவாக அன்பளிப்புச் செய்த தங்க வளையல்கள், தங்கச் சங்கிலிகள் ஆகியவற்றையும் பங்களிப்பாக வழங்கினர். இனிமேல் விடுதலைப் புலிகளால் நடாத்தப்படும் ஒவ்வொரு நிகழ்விலும் இத்தகைய பங்களிப்பைச் செய்வதாகச் சிலர் மண்டப அரங்கத்திலேயே சபதமெடுத்துக் கொண்டனர்.



பங்களிப்புச் செய்வதற்கு வரிசையில் காத்திருக்கும் மக்களில் ஒரு பகுதியினர்

பங்களிப்புச் செய்யப்பட்ட பணம் -காசோலைகள் எண்ணப்பட்டும், தங்க நகைகள் நிறுக்கப்பட்டும் எந்தளவு என உடனடியாகவே அறிவிக்கப்பட்டது. ✷

# தீகவாவியிலிருந்து விரட்டப்பட்டோருக்கு மாற்றுக்காணி வழங்கும் திட்டம்

✷ சிங்களவர் எதிர்ப்பால் நிறுத்தம்! ✷ 40 ஆண்டுப் போராட்டம் பயனளிக்கவில்லை

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தமது காணிகளைச் சிங்களவர்களிடம் பறிகொடுத்துவிட்டு மீண்டும் பெற்றுக் கொள்ளத் தொடர்ந்து போராடி வருகின்ற ஒலுவில் பொன்னம் வெளிக்கண்டல் தமிழ் பேசும் விவசாயிகளுக்கு பள்ளக்காடு - பாற்கேணி பகுதியில் மாற்றுக் காணி வழங்கும் திட்டமும் தற்போது சிங்களவர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அம்பாறையின் ஒலுவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 1940களில் பொன்னம் வெளிக்கண்டத்தை காடு திருத்தி கழனியாக்கி விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர்.

1979 ஆம் ஆண்டு அரச அதிபரினால் காணிக் கச்சேரி நடத்தப்பட்டு ஏறக்குறைய 200 விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கர் வீதம் 'எல்.டி.ஓ' உத்தரவுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

1950 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரை எவரின் எந்தவித தலையீடுமின்றி அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர்.

1982 ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்டிருந்த 'தீகவாவி' கிராமம் சிறிலங்கா அரசால் திட்டமிட்ட குடியேற்றத்திற்காக புனித பிரதேசமாக்கப்பட்டது. அதற்காக சுவீகரிக்கப்பட்ட அல்லது பறித்துக் கொள்ளப்பட்ட தமிழ் பேசும் மக்களின் காணிகளுக்குக் கூட மாற்றுக் காணிகள் வழங்கப்படாத நிலையில் அதன் பக்கத்திலிருந்த பொன்னம் வெளிக்கண்டமும் வந்தேறு குடிகளான சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டது. அதற்கு அரசும், அரசுப்படைகளும் பக்கபலமாக செயற்பட்டன. புனித பிரதேசம் என சுவீகரிக்கப்பட்டு சிங்களவர்கள் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டனர்.

1982-1986 ஆம் ஆண்டு வரை இவற்றை மீட்டுக் கொள்வதற்காக காணிச் சொந்தக்காரர்களினால் பல முயற்சிகளும் எடுக்கப்பட்டு தோல்வியில் முடிவடைந்தன. சட்டரீதியாக நீதிமன்றம் சென்றபோது, "பொன்னம் வெளிக்கண்டல் விவசாயிகளை அந்த நிலங்களிலிருந்து, பலாத்காரமாக வெளியேற்ற முடியாது" என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியபோதும், அந்த விவசாயிகள் பலாத்காரமாக தொடர்ந்தும் வெளியேற்றப்பட்டனர். அவர்களின் உத்தரவுப் பத்திரங்கள் இரத்து செய்யப்படாமலேயே அந்தக் காணிகள் சிங்களவருக்கு வழங்கப்பட்டன.

விவசாயிகளின் தொடர்ச்சியான முயற்சியினால் - அரசின் எந்தத் தேவைக்கும் ஒதுக்கப்பட்டிராத, அரச காணிகளை அடையாளம் காட்டும் பட்சத்தில், அதில் அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பள்ளக்காடு - பாற்சேனைப் பகுதியில் காணி இனங்காணப்பட்டு, மாற்றுக்காணி வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டது. இந்தக் காணியின் ஒருபுறமாக குறிப்பிட்ட 180 ஏக்கர் நிலம், ஏற்கனவே சிங்களவரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தீகவாவி பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டு, பின் அதைத் தவிர்த்தே பள்ளக்காடு - பாற்சேனைப் பகுதியை மாற்றுக் காணியாக வழங்க தீர்மானிக்கப்பட்டது.

எந்தத் தேவைக்கும் ஒதுக்கப்பட்டிராத - பிரச்சினைகள் எதுவுமில்லாத அரச காணி என்று திட்டவட்டமாக உறுதி செய்து கொண்ட பின்னரே நில அளவைத் திணைக்களம் தனது பணியைத் தொடங்கியது.

பற்றைக்காடுகளை ஒதுக்கி காணிகளை துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த நில அளவைத் திணைக்களத்தின் 'புல்டோசர்' தற்செயலாக, தவறுதலாக சிங்களவரினால் ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் சென்றமையால் "இதுதான் சந்தர்ப்பம்" என மாற்றுக் காணி வழங்கும் திட்டத்தையும் சிங்களவர்கள் தடுத்து நிறுத்திவிட்டனர். தற்போது இம் முயற்சி கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. ✷

# கச்சாய் முகாம் தாக்கியழிப்பு

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கச்சாய் இராணுவ முகாம், 11-01-96 நள்ளிரவு 12.30 மணியளவில் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இச்சிறிய இராணுவ முகாமில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரில் உயிர் தப்பியவர்கள், காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் தூக்கிக் கொண்டு ஓடித் தப்பித்துக் கொண்டனர். இம்முகாம் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. முகாமில் இருந்த ஆயுதங்களையும் புலிகள் தமதாக்கிக் கொண்டனர். ✷

# கண்ணிவெடியில் சிக்கி பத்து இராணுவத்தினர் பலி

முதல் நாள் நடைபெற்ற முகாம் அழிப்பிலிருந்து மீள்வதற்கிடையில், அடுத்த நாள் (12.01.96) பிற்பகல் 3.35 மணியளவில், கச்சாயில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவம் வந்த வாகனம் முற்றாகச் சேதமடைந்ததுடன், மேலும் பன்னிரண்டு இராணுவத்தினர் கடுங்காயமுற்றனர். ✷

# பூவரசங்குளத்தில் இராணுவ காவலரண்கள் வீழ்ந்தன

வவுனியா, பூவரசங் குளத்தில் சிறிலங்கா இராணுவத்தின் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் 12.01.96 அதிகாலை 3.00 மணியளவில், ஒரே நேரத்தில் தொடராகத் தாக்குதல் நடத்தினர். சில நிமிடங்களில் இக் காவலரண்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்ததாகவும், ஐந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 16 இராணுவத்தினர் காயமுற்றதாகவும் தெரிய வருகிறது. 60மி.மீ மோட்டார் உட்பட பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இத்தாக்குதலின் போது கப்டன் தமிழ்வாணன் (எஸ்.சிவநாதன், ஒட்டிசுட்டான்), வீரவேங்கை மதிவாசன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர். தாயக விடுதலையைத் தாகமாகக் கொண்டு களமாடி வீரச்சாவடைந்த, அத் தேசிய வீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள். ✷

# இலண்டனில் மாவீரர் நாள் ...

தங்கள் வாழ்வைத் துறந்திட்ட தன்னலமற்ற தெய்வங்களைப் பூசிக்கும் புனிதமான நாள். எங்கள் தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் வழிநடத்தலிலும் வழிகாட்டலிலும் எமது தேசம் விடுதலை பெறும் புனித திருநாளுக்கான சகல ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும் வேகமுடன் செயல் படுத்துவோமென இந்நாளில் நாம் அனைவரும் சபதம் எடுப்போம்" என, அவர்மேலும் தெரிவித்தார்.

இம் மாவீரர் நாள் வைபவத்தில் பெரும்திரளாய் மக்கள் கூடி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்ய அனுமதித்ததால், ஒழுங்கு செய்யப்பட்ட பாரிய மண்டபத்தின் கட்டுமீறிய குளிரின் கொடுமையையும் தாங்கிக்கொண்டு, தங்கள் இனிய தேசத்தின் விடிவுக்காய் வித்திட்டுச் சென்ற வீரமறவர்களை - அந்தத் தியாகச் சுடர்களை, மலர் தூவி பின்னர் தங்கள் கரங்களில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலித்தனர். லண்டன் தமிழ் பாடசாலை மாணவமணிகள், மாவீரர் பாடலை இசைத்த வண்ணம் குத்துவிளக்குகளைத் தாங்கிச் சென்று மாவீரர்களை அஞ்சலித்தனர்.

தாய் நிலத்துக்காய் வித்தான மாவீரர் ஒருவரின் தாயாரால் குத்துவிளக்கு ஏற்றப்பட, மாவீரர் வைபவத்தில் கலந்து கொண்ட ஏனைய மாவீரர் குடும்பத்தினரும் குத்துவிளக்கை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.


இந்நிகழ்வில் இடம் பெற்ற மாவீரர்களைப் பற்றிய மழலைகளின் கவிதைகளும், மாவீரர்களால் எழுதப்பட்ட கவிதைகளும் எல்லோர் இதயங்களையும் நெகிழ வைத்தன.

இவற்றுடன் மாவீரர் பாடல்களுக்கான வீணைவாத்திய இசையும், நாட்டிய நடனங்களும், மாபெரும் கலைஞர்களின் வில்லு ப்பாட்டும், வாத்திய இசையும் சிறப்பான அம்சங்களாக இருந்தன.

இம் மாவீரர் நாளில் ஆங்கிலப் பாடகர் Garth Hewitt என்பவர், சிறிலங்கா அரசபடை நவாலித் தேவாலயத்தில் நடாத்திய படுகொலையை நினைவுபடுத்திப் பாடிய 'I want to cry out' என்ற பாடலை நேரில் பங்கேற்றிப் பாடியமை, கலந்து கொண்ட அனைவரினது பாராட்டையும் பெற்றது. ✷

# போரும் பொருண்மியமும்

"தமிழீழம் ஒரு செழிப்பான பூமி வளங்கள் பல நிறைந்த தேசம் தன்னிறைவான பொருண்மியத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்



செல்லக் கூடிய நீர்வளத்தையும் நிலவளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு, அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது, தன்னிறைவான பொருண்மிய வாழ்வுக்கு ஆதாரமானது"

-இது தமிழீழத் தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனம்.

1985 களில் தமிழீழத் தலைவரின் ஆசிர்வாதத்துடனும், மாவீரன் கிட்டு அவர்களின் தளராத முயற்சியாலும் 'தமிழீழ ஆய்வு நிறுவனம்' என்று தொடங்கப்பட்ட பொருண்மிய முயற்சி, 1990 இல் 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' (TEEDOR) ஆக வளர்ச்சி பெற்றது. தமிழீழ மக்கள் பரந்துவாழும் நாடுகளிலெல்லாம் கிளைகளைப் பரப்பியுள்ள இந்நிறுவனம், பல்வேறுபட்ட பொருண்மியத் துறைகளில் தமிழீழம் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு இன்று 11 ஆண்டுகளைக் கடந்துவிட்டது.

தமிழீழத்தின் புதிய தலைநகரம் (திருகோணமலை) முதல் கிராமம் வரையிலான அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவாக்கத் திட்டங்கள் (தமிழீழ உட்கட்டுமானம்) வகுக்கப்பட்டு, தமிழீழத்தை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்வதற்கான திட்டங்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

வட தமிழீழத்தில் இடிமுழக்கம், சூரியக்கதிர்–1, சூரியக்கதிர்–11, சத்ஜெய போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளாலும் தென்தமிழீழத்தில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளாலும் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டு வெளியேறினர். அதனால் அப்பிரதேசங்களில் எம்மக்களால் காலாகாலமாகச் செய்யப்பட்டு வந்த விவசாயம், கடற்தொழில், சுயதொழில் முயற்சிகள் எல்லாமே இடைநடுவிலே கைவிடப்பட்டுவிட்டன. இதனால், ஏற்பாடு செய்யப்பட்ட பொருண்மியத் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும் தாமதம் ஏற்படுகின்றது. இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் திட்டமிட்ட அழிவு நடவடிக்கைகளாலும் தமிழீழ மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, கர்பிணித் தாய்மார்களும் இளம் சிறார்களும், போசாக்கின்மையாலும் தகுந்த பராமரிப்பின்மையாலும் மருத்துவ வசதியீனங்களாலும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இன்றைய சந்ததியினர் திடகாத்திரமானவர்களாக, புத்திசாலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டால் மட்டுமே, நாளைய பொருண்மியம் சிறப்பான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

பூரண சுதந்திரத்திற்காக உறுதியுடன் போராடிவரும் தமிழீழ மக்களது வாழ்வுப் பிரச்சனை மேலும் சிக்கலடைந்திருக்கும் இவ்வேளையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மிகவும் துரிதகதியிலும் திறமையாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இராணுவப் பிடியிலிருந்து மீட்கப்பட்ட வன்னிப் பிரதேசமும் தென் தமிழீழமும் பொன்விளையும் பூமிகள். குறிப்பாக இம்மண்ணில் குடியேறிய மக்கள், தம் உழைப்பை மூலதனமாக இட்டு, அவற்றிலிருந்து பெறும் விளைவுகளை இலாபமாகக் குவிக்கும் வல்லமை வாய்ந்தவர்கள்.

விடுதலைப் புலிகளோ தமிழ் மக்களோ போராட்ட வெறியர்களல்லர். தமிழரை அடிமையாக்காத, சுயமரியாதையோடு வாழக்கூடிய எந்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் தயாராகவே உள்ளனர். கடந்த காலங்களில் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும், தமிழீழ மக்களின் நாளாந்த கஸ்ரங்களை நீக்குதல் குறித்த விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதாவது, தமிழ்ப் பகுதிகளுக்கான உணவு வழங்கல்களைச் சீராக்கல், எமது மக்களின் போக்குவரத்திற்கான பாதைகளைத் திறத்தல், எமது பிரதேசம் மீதான பொருண்மியத் தடைகளை நீக்குதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துமாறே சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்டனர். இவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. அதனாலேயே, இன்றைய அரசுடன் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தமும் தலைவர் பிரபாகரன் அவர்களால் விலக்கப்பட்டது.

சிறிலங்கா அரசாங்கம், தமிழர்களுக்கு எதிரான போருடன் தமிழரின் பொருண்மியத்தையும் அழித்து, அதன்மீதான தடையையும் விதித்து, பொருண்மியத்துக்கு எதிரான போரையும் தொடர்ந்து நடாத்திக்கொண்டிருக்கின்றது.

சிறிலங்காப் படைகளுக்கு, தலைவர் பிரபாகரன் வழிநடத்தலில் விடுதலைப் புலிகள் எவ்வாறு மரணஅடி கொடுத்து இழந்த தாயகத்தை மீட்டெடுத்துக் கொண்டிருக்கின்றார்களோ, அதேபோல அவரின் தலைமையுடனும் ஆசியுடனும் உருவாக்கப்பட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்குத் தமிழீழத்திற்கு வெளியேயுள்ள தமிழீழ மக்களும் தாம் வாழும் நாடுகளிலிருந்து கொண்டே தேவையான அறிவாற்றல், தொழில்நுட்பம், நிதிவளம் என்பவற்றை தாம் வாழும் நாடுகளில் இயங்கும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு, கொடுத்துதவி பொருண்மியப் போரிலும் தமிழீழ மக்கள் வெற்றி பெற உதவவேண்டும்.

- தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (பிரித்தானியாக் கிளை)

### தமிழீழத் தேசாபிமானிகளின் கவனத்திற்கு !

தமிழீழ மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விவசாயம், நன்னீர் மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில், தொழில்நுட்பம், சக்தி போன்ற துறைகளில் ஆலோசனைகளை, அறிவாற்றலை, ஆதரவைத் தந்துதவும் அதேவேளை, இவை சம்பந்தமான கட்டுரைகளும் வேண்டப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்களையும் ஆலோசனைகளையும் தயவுசெய்து,

**Eelam House**
**Teedor (U.K)**
**202 Long Lane, London, SE1 4QB.**

**Tel: +44 181 365 0249.**
**E-mail:eelamhouse.teedor@ukonline.co.uk**

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்
(பிரித்தானிய கிளை) ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச மகாநாட்டிற்கான
அறிவிப்பு 16 பங்குனி 1997

## ஆராய்ச்சிக் கட்டுரைக்கட்கான அழைப்பு

"தமிழீழத்தின் சக்தித்தேவைகளை நிவர்த்தி செய்யும் பாதையை நோக்கி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒரு முழுநாள் அளவிலான மகாநாடு ஒன்று எதிர்வரும் 16 பங்குனி 1997 ஞாயிற்றுக்கிழமை அன்று இலண்டன் பல்கலைக்கழகத்திலுள்ள இம்பீரியல் கல்லூரியில் நடாத்து வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் மகாநாட்டில் தமிழீழப் பகுதிகளின் உடனடித் தேவைகளும், எதிர்காலத்தில் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான சக்தி உற்பத்தி பற்றியும் விஞ்ஞான, பொருளாதார, சமூக, அரசியல் பின்னணிகளுடன் ஆராயப்படும். இதற்காக கட்டுரைகளை அனுப்பவிரும்புவோர், தமது கட்டுரைகளை 14 மாசி 1997 க்கு முன்னதாக மகாநாட்டு காரியதரிசிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப் படுகிறீர்கள்.

*தற்போதையநிலை :*

சிறீலங்கா அரசின் தமிழீழம் மீதான பலத்த தாக்குதலின் (ஐப்பசி 1995) பின்னர் தமிழீழத்தில் பெரும்பாலான பொருளாதார அபிவிருத்திக்கான அடித்தளம் சின்னாபின்னமாக்கப்ட்டுள்ளது. இதனைக் கட்டி எழுப்புவதற்கான உடனடித் தேவைகளையும் .

*எதிர்கால நிலை :*

தமிழீழத்தின் அரசியல் தீர்வு ஏற்பட்டபின் தமிழீழப் பொருளாதார அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கான சக்தி உற்பத்தி பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படும்.

*கீழ்வரும் தலையங்கங்கள் வழிகாட்டியாக அமையும்.*

1) இயற்கைவாயு, பெற்றோலியம், நிலக்கரி என்பவற்றிலிருந்து பெறப்படும் சக்தி:

- தமிழீழ மண்ணிலும் அதனை அண்டிய கடல் பிரதேசத்திலும் இயற்கையான எரிபொருள் உண்டா என்பன பற்றிய கணிப்பு
- எண்ணைக் கிணறுகளுக்குத் தேவையான பணமுதலீடு, உலகரீதியான நிறுவனங்களுடன் தொடர்புகள்.
- இவ்வகை எரிபொருள்கள் கொண்டு இயங்கும் மின்சார நிலையங்களும் அதனை நிறுவுவதற்கான இடங்களும் அதனை அண்டிய பகுதிகளின் நிலைமையும்.

2) மீண்டும் மீண்டும் பெறக்கூடிய சக்தி வகைகள்

- இறைத்தல், அரைத்துக்கான காற்றின் சக்தி உபயோகங்கள்
- மின்சாரத்திற்கான காற்றின் உபயோகம்
- சூரிய சக்தி
- தாவர விலங்கு கழிவுகள்
- செயற்கை எரிபொருள்கள்
- அலை
- நீரியல்

## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் - உணர்வு பூர்வமாக - நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக - நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மாளைக் கும்பிடுறானுகள்.....!" என்ற பெயரிலும், இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப் படை -

'அமைதிப் படை' - ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் - போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் - போராளிகளை நேசித்து, அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் .......

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.

அவற்றில்....... ஓர் நிகழ்வு.

# வில்லுக்குளத்துப் பறவை

*"வெளியே வா .............!"*

*யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்.*

*சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.*

*"ஐயோ எண்ட பிள்ளைகளே!" என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள் ........... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும் .........*

சறோ அக்கா முற்றத்திற்கு வந்தாள் ———

வாசலில் துப்பாக்கியும் கையுமாக இந்தியப்படை வெறியர்கள்.

"நட முகாமுக்கு" என்று கத்தினான் ஒரு முரடன்.

அக்கா நடந்தாள்.

பிள்ளைகள் வாய்விட்டு அழத்தொடங்கியபோது, "ஏன் பிள்ளையள் குழறுறீங்கள் ....... எதையோ கேட்கிறதுக்குத்தானே கூட்டித்துப் போறானுவன். விட்டுவானுகள்" என்று தேற்றினாள் அவள்.

கொஞ்ச நேரத்தில் ஊரே கூடிவிட்டது.

பாவம்....... இவளை எதுக்குத்தான் கொண்டு போறானுவளோ..... என்று படபடத்தார் பக்கத்து வீட்டுக் கிழவர்.

∴ ∴ ∴ ∴ ∴ ∴

சம்பூர் நூல்நிலையத்தை இந்தியப்படை முகாமாக மாற்றியிருந்தார்கள். கிராம மக்களுக்கு அறிவூட்ட ஒரு காலத்தில் ஊர்ப் பெரியவர்களால் அந்த நூல் நிலையம் அமைக்கப்பட்டது. இன்று வல்லாளுமை வெறியர்களின் கொடிய அடக்குமுறையை ஒரு வரலாற்றுப் பாடமாக, சம்பூர் மக்கள் இங்கே படிக்கிறார்கள். அன்றாடம் சித்திரவதைகள் – பெண் வதைகள் – கொலைகள்.......

முகாமின் முற்றத்தில் நின்ற சறோ அக்கா நினைத்துப் பார்த்தாள்..... இந்த முகாமை ஒட்டினாற் போல் சம்பூர் வில்லுக்குளம். குளத்திற்கு மறுபக்கத்தில் – தூரத்தில் கூனித்தீவும் – அவள் வீடும். வீட்டில் பிள்ளைகள் என்ன செய்யுமோ......?

இரவாகி....... உலகம் இருண்டு போய்க் கிடந்தது. துப்பாக்கிகளோடு படை வெறியர்கள் அங்கும் இங்குமாக........

அப்போதுதான்........

அந்தக் கொடிய சிரிப்பை அவள் கேட்டாள். அறையிலிருந்து வெளியே எட்டிப்பார்த்த இந்தியப் படை மேஜர் அவளை உள்ளே வருமாறு அழைத்தான்........ பின்பு அவளுக்குத் தெரியும் – அவன்தான் மேஜர் 'கோர்'.

உள்ளே நடுங்கிக் கொண்டே போனாள் சறோ அக்கா. சாராயத்தின் நெடி மூக்கைத் துளைத்தது.

"சூடைக்குடா ராயப்பு யேசுராஜாவின் சாவீட்டுக்குப் போனாயா.....?

யாரோ ஒருவன் மேஜர் கோரின் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தான்.

அக்காவிற்கு இப்போது நிலைமை தெளிவாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவள் யேசுராஜாவின் சாவீட்டிற்குப் போய் வந்தாள். யேசுராஜா விடுதலைப்புலி அல்ல – ஆனால் இந்தியப்படையால் தேடப்பட்டவன். கொடுமையான சித்திரவதையின் பின்பு அவனைக் கொன்று பிணமாக வீசினார்கள். அண்மையில் திருமணமானவன் யேசுராஜா –மனைவிக்குச் சின்ன வயது. போய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூற வேண்டும் போல், சறோ அக்காவுக்குத் தவிப்பாய் இருந்தது. "யேசுராஜாவின் சாவீட்டிற்கு யாரும் போகக் கூடாது" என்று இந்தியப்படை போட்ட தடையையும் மீறி, அவள் அங்கே போனாள். அந்தப் பெண்ணின் கண்ணீரை முடிந்த வரை துடைத்து, ஏதோ ஒரு மன அமைதியோடுதான் அவள் வீடு திரும்பினாள். அதற்குள்......

"ஓம்...... போனநான்தான்...... சாவீடு எண்ட படியாத்தான் போனனான்......"

அக்கா ஒப்புக் கொண்டாள்.

மேஜர் கோர் இன்னொரு முறை அதிர்ந்து சிரித்தான் பின்பு –

அறையிலிருந்த மற்ற இந்தியப் படை ஆட்களை வெளியே போகச் சொல்லிவிட்டுக் கதவைப் பூட்டினான் அவன்.

அக்காவை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிக் கையால் காட்டிவிட்டு, முன்னால் ஒட்டினாற் போல் இன்னொரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான் அந்த மேஜர்.

விலங்குத்தனத்தின் இறுக்கமான பிடி....... கொடிய வெறியின் திணிப்பு....... மனிதத் தன்மையின் சமாதி......

அந்த இரவு கொடுமையானது.

எங்கே ஓட முடியும்?

காலையில் கதவு திறக்கப்பட்டதும் – "நீ போகலாம்" என்று சொன்னான்...... கோர்


அக்கா தெருவுக்கு வந்தாள்.

சினத்தோடு காறித் தெருவில் துப்பினாள்.

"இவனுவள் என்னதான் செய்தாலும் எண்ட தமிழீழ உணர்வை அழிக்க முடியாது" என்று உறுமினாள் அவள்.

∴ ∴ ∴ ∴

கூனித்தீவில் தண்ணீர்த் தாங்கிக்குப் பக்கத்தில்தான் சறோ அக்காவின் வீடு. இரண்டு அறைகளும் பாதி முன் மண்டபமும். வீட்டிற்குப் பின்னால் அழகான அந்த வில்லுக்குளம்.



தாயகத்தோடு ஒன்றிப்போன உணர்வுகள் – கணீரென்ற மிடுக்கான பேச்சு – கள்ளம் கபடமில்லாத சிரிப்பு – துணிச்சல் – கூனித்தீவில் அக்கா நிழல்மரம்.

"வாங்க ஆச்சி....... இருங்க........ சங்கத்து வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதுதானே? எப்படி அண்ணன் பானைகளை சூளையில வச்சிட்டீங்களா? கேள் புள்ளை....... சிங்கள 'ஆமி'க்காரனுகள் நம்மட பொம்புளையள படுத்துகிற பாட்டை கட்டுரையாக எழுதி வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த வேணும்......

வீட்டில் எல்லோரும் நிறைந்துபோய் இருப்பார்கள். அக்காவின் குரல் 'கணீர்' என்று ஒலிக்கும். மட்பாண்டச் சங்கத்தலைவி – மாதர் சங்கத் தலைவி – அன்னையர் முன்னணித் தலைவி– சைவ மங்கையர் கழகத் தலைவி – மக்கள் குழு உறுப்பினர் என்று கூனித்தீவில் எல்லாமே அக்காதான் என்பதால், அக்கா வீடு கலகலப்பாகவே இருக்கும்.

1984இல் அக்காவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகமானார்கள். புலேந்திரன், சந்தோசம், கணேஸ் – போன்ற திருகோணமலை மாவட்டப் புலிகள் தலைவர்கள் அக்காவை அடிக்கடி சந்தித்த நாட்கள்........ அக்கா புலிகள் இயக்கம் அல்ல – ஆனால் புலிகளின் பெரிய விடுதலை வேட்கையும் – ஈடிணையற்ற வீரமும் – அவர்களின் மாபெரும் உயிரிழப்புக்களும் அவள் நெஞ்சைத் தொட்டன.

சறோ அக்காவுக்கு 42 வயது. கணவனோடும் 7 பிள்ளைகளோடும் அவள் வாழ்க்கை. மூத்தவளுக்கு வயது 18. கடைசிப் பெடியன் இப்போதுதான் 6 வயதைத் தாண்டிக் கொண்டிருக்கிறான். இந்த நீண்ட வாழ்வில் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றை அவள் நன்கு அறிவாள். தமிழர் போராட்டத்தில் இயலாமைகள்– போலித்தனங்கள் – தொய்வுகள் எல்லாம் நிறைந்துபோன ஒரு காலத்தில்தான், விடுதலைப்புலிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனை பெரியது........!

தொலைவில் – எங்கோ காட்டில் நீண்ட ஒதுக்குப்புற வயல் வெளிகளில் அவர்கள் புல்லோடு புல்லாகப் படுத்திருப்பார்கள். அக்கா சோறும் கறியும் சமைத்துக் கொண்டு போய்க் கொடுப்பாள்.

"நீங்கள் எண்ட புள்ளையளைப் போல– இல்லையில்லை...... நீங்கள் எண்ட புள்ளையள்" என்பாள் அக்கா. வீட்டிலும் இப்படித்தான்...... அடுப்பில் எப்போதும் 'தேநீர்ப் பானை' கொதித்துக் கொண்டேயிருக்கும்.

காயப்பட்ட விடுதலைப் புலிகள் பல தடவை அக்கா வீட்டில் மருந்து கட்டியிருக்கிறார்கள். புலிகளுக்கு மட்டுமல்ல – கூனித்தீவுக்கே அக்கா வீடு ஒரு மருத்துவ நிலையம் போலத்தான். சிறீலங்காப் படைகள் வெறிக் கூத்தாடிய 1985–86–87 களில், சறோ

தொடர்ச்சி 15 ம் பக்கம்...

# தமிழீழ விடுதலைப்புலிகள் ''தேசிய விடுதலை இயக்கம்'' என்ற வரைவிலக்கணத்திற்கு பொருத்தமானவர்கள்.

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illimois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

**நீதிபதி:** நான் ஜெர்மனிய அரசு பற்றிச்சொல்லவில்லை. நாங்கள் ஐ.நாடுகள் ஒப்பந்தம் செய்வது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் அதுபற்றித்தான் நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தீர்கள்.

**சாட்சி:** நான் அறிந்தளவில் ஐ.நாடுகள் Baader-Meinhof வுடன் ஒப்பந்தம் எழுதவில்லை.

**நீதிபதி:** இல்லை. அது எனக்கு விளங்குகிறது.

**சாட்சி:** அல்லது செம்படை (Red Brigade)

**நீதிபதி:** காரணம் என்னவென்றால் அவர்கள் பயங்கரவாதிகள் எனக் கருதப்பட்டார்கள்.

தேசிய விடுதலை இயக்கம் எனக் கருதப்படவில்லை.

**சாட்சி:** காரணம் சர்வதேசச் சட்டத்தின் படியும் ஜெர்மனியச் சட்டப்படியும் அவர்கள் பொதுக் குற்றவாளிகள் எனக் கருதப்பட்டார்கள். பொதுக் குற்றவாளிகளோடு ஐ.நா.ஒப்பந்தங்கள் எழுதப் போவதில்லை.

ஆக நீங்கள் சொல்வது என்னவென்றால் ஐ.நா.பொதுக்குற்றவாளிகளோடு ஒப்பந்தங்கள் செய்யமாட்டாது என்பதாகும்.

"பயங்கரவாதிகள்" என்ற வார்த்தையைப் பாவித்தற்குப்பதிலாக, இப்போது நீர் சொல்கிறீர் "பயங்கரவாதிகள்" என்ற வார்த்தையை நீர் பாவித்திருக்கக் கூடாதென்று. காரணம் சர்வதேசச் சட்டப்படி "பயங்கரவாதிகள்" என்று யாரும் இல்லை "பயங்கரவாதிகள்" என்ற வார்த்தைக்குப் பதில் "பொதுக் குற்றவாளிகள்" என்ற வார்த்தையை நீர் பாவித்திருக்க வேண்டும் என்கிறீர்.

**சாட்சி:** நான் நினைக்கிறேன் அப்படிச் சொல்வது சரியான கூற்றாக இருக்கும்.

**நீதிபதி:** நன்றி

Msயக்மன் விசாரணை

**கேள்வி:** இப்போது நான் இதனைத் தொடர விரும்புகிறேன். ஐ.நா.பயங்கரவாதம் என்ற சொல்லை உபயோகிக்கிறது. இல்லையா?

**பதில்:** ஐ.நா. அந்தச் சொல்லை பாவிக்கிறது. ஆனால் அந்தச் சொல்லுக்கு வரைவிலக்கணம் இல்லை.

**கேள்வி:** சர்வதேச பயங்கரவாதத்தைத் தடுக்கும் தீர்மானம், செயற்பாடுகள், பொதுச்சபையின் தீர்மானம்...

**பதில்:** அவை பயங்கரவாதத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றன.

**கேள்வி:** சரி, அதற்கு வரைவிலக்கணம் செய்யாமல்?

**பதில்:** சரியாக வரைவிலக்கணம் செய்யாமல். அந்தந்த நாடுகளே வரைவிலக்கணம் செய்யுமாறு விடப்பட்டுள்ளன.

துரதிர்ஷ்டவசமாக நாங்கள் இந்த வார்த்தை துர்ப்பிரயோகம் செய்யப்பட்டு வருவதைக் காண்கிறோம். குறிப்பிட்ட போராட்டங்களை விரும்பாத சக்தி படைத்த அரசுகள் அவர்களைப் பயங்கரவாதிகள் என அழைக்கின்றன.

உதாரணத்துக்குச் சொல்லவேண்டும் என்றால் அமெரிக்க அரசு பலவருடங்களாக ஆபிரிக்க தேசியக் காங்கிரசையும், நெல்சன் மண்டேலாவையும் பயங்கரவாதிகள் என்றே அழைத்து வந்தார்கள். ஆனால் இன்று ஆ.தே.காங்கிரஸ் தென் ஆபிரிக்காவின் ஆளும் கட்சி. எனது எண்ணப்படி அது சரியான அல்லது திடமான கூற்று என்று நான் நம்பவில்லை.

உண்மையின்படி தமிழீழ விடுதலைப் புலிகளைப்போல் ஆ.தே.காங்கிரசும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஜெனிவா மரபுகளையும் ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொள்ளும் ஆவணங்களைக் கையளித்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் 1988இல் அப்படிச் செய்துள்ளது.

எனவே சர்வதேசச் சட்டப்படி யாரைப் பயங்கரவாதிகள் என ஒரு அரசு வரைவிலக்கணம் செய்யலாம் என்பதற்கு வரைமுறைகள் இருக்கின்றன.

**கேள்வி:** மிகவும் நல்லது. மேற்கொண்டு தொடருமுன் உங்கள் பதில்களில் இருந்து எழும் விடயங்கள் சிலவற்றையிட்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

**முதல் கேள்வி:** இவை பற்றிய பிரச்சனை சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?

**பதில்:** செஞ்சிலுவைச்சங்கத்தின் ஈடுபாடு, ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்களை அது மேற்பார்வை செய்யும் பாத்திரத்தைக் காட்டுகிறது.

எனவே செஞ்சிலுவைச்சங்கம் ஒரு மோதலில் சம்பந்தப்படும் போது மரபுகளிலும், ஒப்பந்தங்களிலும் எழுதப்பட்ட விதிமுறைகள் அவர்களது கணிப்பில் சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் க்வனிக்கிறார்கள் என்று அர்த்தமாகும்.

உங்களுக்குத் தெரியும். செஞ்சிலுவைச்சங்கம் பொதுக்குற்றங்கள் அல்லது அவை போன்ற குற்றங்கள் போன்றவற்றில் அவர்கள் சம்பந்தப்படுவதில்லை. அவர்கள் அப்படிச் சம்பந்தப்படும் போது முறையான அறிவித்தல் செய்வதில்லை. ஆனால் விதிமுறைகள் மீறப்படலாம் என அவர்கள் நம்பும்போது சம்பந்தப்படுத்திக் கொள்வார்கள். தமிழீழத்துச் சூழலில் அப்படிச் சம்பந்தப்படுத்திக் கொண்டார்கள். நான் நம்புகிறேன், அதற்கான காரணம் மனிதாபிமானச் சட்டம், மரபுகள், ஒப்பந்தங்கள் இவற்றில் உள்ள விதிமுறைகள் மீறப்படலாம் என்ற அவர்கள் முடிவு எடுத்திருப்பார்கள்.

**கேள்வி:** அமெரிக்காவுக்கு அண்மையில் நாங்கள் இருக்கிறோம். இதனால் எங்களது உலக பார்வையை அது பாதிக்கிறது. ஆனால் அமெரிக்கா தவறாக ஒரு அமைப்பைப் பயங்கரவாத இயக்கம் என முத்திரையிட்டால், ஐ.நா.வின் தீர்மானங்களின் குணாம்சத்தை எந்த விதத்திலும் மாற்றிவிடுமா?

**பதில்:** இல்லை.

**கேள்வி:** ஆனபடியால் அந்தத் தீர்மானம் இருக்கவே செய்யும்.

**பதில்:** உங்களுக்கு ஒரு யோசனை தருவதென்றால்.......

**கேள்வி:** ...எதுவாயிருந்தாலும் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிராகத் தீர்மானம் இருக்கலாம்?

**பதில்:** நிச்சயமாக. பயங்கரவாதம் என்ற வார்த்தையை எப்படி அமெரிக்கா துர்ப்பிரயோகம் செய்கிறது என்பதற்கு உங்களுக்கு ஒரு உதாரணத்தை என்னால் காட்ட முடியும். ஒரு முறை, ஒரு பெண்மணி தென் ஆபிரிக்கா தூதுவராலயத்துக்குச் சென்று "இனவொதுக்கல் பஞ்சமாபாதகம்" ("Apartheid is a bloody sin") என்ற வாசகத்தை அந்த தூதுவராலயச் சுவரில் வர்ணமாகத் தீட்டிவிட்டார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் நிபுணத்துவ சாட்சியம் அளிக்க நான் கூப்பிடப்பட்டிருந்தேன்.

இந்தப் பெண்மணி இதை மட்டுமே செய்திருந்தார். நான் நினைக்கிறேன், மற்றவர்களும் ஒத்துக்கொள்வார்கள். இனவொதுக்கல் பஞ்சமாபாதகத்தைவிட மோசமானது என்று. இனவொதுக்கல் மனிதத்துவத்திற்கு எதிரான குற்றமாகும்.

இந்தப் பெண்மணி விசேட பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார். அதாவது அவர் ஒரு பயங்கரவாதி எனக் கருதப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றத்தால் நான் ஒரு நிபுணன் என்ற முறையில் சாட்சியம் சொல்ல அழைக்கப்பட்டேன். இந்தச் சட்டம் பற்றிய விளக்கம் என்னிடம் கேட்கப்பட்டது. New York மரபின் அடிப்படையில் இப் பெண்மணியின் நடவடிக்கை இருக்கவில்லை.

இருந்தும் ஐந்து ஆண்டு சிறைவாசத்தை இவர் எதிர் நோக்கினார். நான் நினைக்கிறேன், நாங்கள் வழக்கறிஞர்கள் என்ற கோதாவில் இந்தப் பெண்மணியின் நடவடிக்கை ஒரு அடையாள எதிர்ப்பு மட்டுமே என்றுதான் கருதுவோம். அல்லது அவர் எழுதியதை கேலிச்சித்திரம் என்று சொல்லலாம். அமெரிக்கா நீதிமன்றங்களில் பயங்கர வாதம் என்ற பதம் பலமுறை துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி:** அமெரிக்கா பற்றி நாம் சொல்லிக்கொண்டிருக்கும் போது....

**பதில்:** மன்னிக்கவும். ஐ.நா. எதிர் அமெரிக்கா (UN Versus US) பற்றிய பிரச்சினை உங்களுக்குத் தெரியும். ஐ.நா.வின் எண்ணப்படி தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல் அரசே, குற்றவாளி எனக் கருதப்பட்டது. அந்த அரசே மானிடத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்துக் கொண்டிருந்தது.

**கேள்வி:** ஆனபடியால் அமெரிக்கா உலகக் கண்ணோட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்று எடுத்துக் கொள்ளலாம்.

**பதில்:** சில சமயங்களில், பிரச்சினைகள்..... சர்வதேச மட்டத்தில் அமெரிக்கா இரண்டு மூன்று சிறுபான்மை நாடுகளைச் சேர்ந்தது. இருந்தும் ஒப்பந்தம் 1ஐ வரைந்தபோது, அமெரிக்கா அதில் பங்குபற்றியது. ஆனால் அமெரிக்கா அதனை இன்னும் அங்கீகரிக்கவில்லை.

எனது அனுபவத்தில், எனக்கு இதைச் சொல்ல வருத்தமாக இருக்கிறது. அமெரிக்க அரசு பயங்கரவாதம் என்ற முத்திரையை தனக்குப்பிடிக்காத குழுக்களுக்குக் குத்துவதற்குப் பாவிக்கிறது.

இதனைச் சர்வதேசச் சட்டம், யதார்த்தம் இவற்றின் அடிப்படையில் இல்லாமல், தனது கொள்கைக்கு அமையச் செய்கிறது.

**கேள்வி:** இப்போது தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய பிரச்சினைக்குப் போவோம். தமிழ் மக்கள் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள், தேசிய விடுதலை இயக்கங்கள் என்ற வரைவிலக்கணத்துக்கு எப்படிப் பொருந்துகிறார்கள் என்ற உங்கள் முடிவுக்கு ஆதாரமாக பலவற்றைச் சொன்னீர்கள். ஐ.நா.அகதிகளுக்கான ஆணையாளர், மனிதாபிமான சட்டத்தை அங்கீகரிப்பதில் செஞ்சிலுவைச்சங்கத்தின் பங்கு இவற்றைக் குறிப்பிட்டீர்கள்.

இவற்றைவிட தமிழீழ விடுதலைப்புலிகள் தேசிய விடுத்லை இயக்கம் என்ற வரைவிலக்கணத்திற்குப் பொருந்துகிறார்கள் என்பதற்கு வேறு காரணங்கள் இருக்கிறதா?

**பதில்:** நான் நினைக்கிறேன், இதில் முக்கிய காரணம் சுயநிர்ணய உரிமை பற்றிய கேள்வியாகும். தமிழர்கள் சர்வதேசச் சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய மக்களாவர்•

(தொடரும்)

# போர்க்களத்தில் வீரன், பொதுமக்கள் தோழன்
# மாவீரர் கேணல் கிட்டு

"தமிழீழ விடுதலை வரலாற்றின் காலப்பதிவு" எனத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் கேணல் கிட்டுவை வர்ணித்தார். பொருத்தமான வார்த்தைப் பிரயோகம். மாவீரர் கேணல் கிட்டு ஒரு வரலாறு என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

வரலாறு என்றால் – நடந்து முடிந்துவிட்ட ஒன்று என்பது – எம்மில் பலரின் கணிப்பு. உண்மையில் வரலாறு என்பது வாழ்வதற்காக – எப்படி வாழ்ந்தோம், வாழவேண்டும் என நெறிப்படுத்தும் உந்துவிசை. இந்த உண்மையை உணர்ந்து வாழும் மக்கள், உலகில் என்றுமே தாம் வரலாறு ஆகிவிடாது வாழ்ந்து கொண்டேயிருப்பர். இந்த உண்மையை உணர்த்தும் தனி மனித வாழ்வுகளும் காலத்துடன் அழியாது காலத்துடன் வாழ்ந்து கொண்டேயிருக்கும். இதனால் தான் தமிழில் ஒருவரின் மரணத்தைக் கூறும்பொழுது, அவர் காலமாகி விட்டார் என்றார்கள். வள்ளுவரோ ஒருபடி மேலேபோய் ஒரு மனிதனின் வாழ்வின் பெறுமதி "அவரவர் எச்சத்தால்" எய்த்தப்படும் எனக் கூறியதும் அல்லாமல், 'மாண்புற்றார்' எனும் சொல்லை அர்த்தமுள்ள மரணத்திற்கு வழங்கினார்.

ஆனால், காலனித்துவம் புகுத்திய மேற்கத்திய கலாச்சார வெள்ளத்தில் எமது மாண்புகள் மட்டுமல்ல – எங்கள் அர்த்தமுள்ள தமிழ்ச் சொற்களும் மறைந்து – இறப்பு எனும் சொல் மரணத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகி விட்டது. ஆனால், காலனித்துவம் விளைவித்த அடக்கு முறைகளை – ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடும் தேசிய விடுதலை வீரர்கள் எம்மை விழித்தெழ வைத்துள்ளனர். அதனால் தான் *"வங்கக் கடலில் ஆன்மா பிளந்தது; பூகம்பமாய் அதன் அதிர்வலைக-ளால் தேசம் விழித்துக் கொண்டது"* என எங்கள் தேசியத் தலைவர் மாவீரர் கேணல் கிட்டுவின் ஈகம் குறித்து தெளிவுற எடுத்து விளக்கினார். ஆம்! மாவீரர் கேணல் கிட்டுவின் நினைவு எழும் நேரமெல்லாம் இட



மெல்லாம் தமிழீழத் தேசமக்கள் விழித்தெழுகின்றனர்; புதுத் தென்படைகின்றனர்.

குறிப்பாகப் புலம்பெயர் தமிழீழ மக்களிடையே மாவீரர் கேணல் கிட்டுவின் நினைவு – தேசவிடுதலைத் தீயாக கனன்று வீசுகின்றது. தனது அன்பு நெஞ்சத்தால் எம்மை எல்லாம் கட்டி அணைத்துத் தமிழீழத் தேசமக்களாக்கி, தம் வார்த்தைகளால் எம் கடமை – வரலாற்றுப்பணி உணர்த்தி தம்செயலால் வழிகாட்டி நெறிப்படுத்தி, தமிழீழத் தேசவிடுதலைப் பணிக்கு எம்மாலானதைச் செய்ய வைத்த கட்டளைத் தலைவன் மாவீரர் கேணல் கிட்டுவை நினைக்கும் போதெல்லாம் – அவர் எமக்கு இட்ட பணியினை அவர் நினைவின் துணையுடன் தொடரவேண்டும் எனும் நெஞ்சுறுதி பிறக்கிறது. ஒன்றாய் – தமிழீழத் தேசமக்களாய் – என்றும் தேசத் தலைவன் பிரபாகரன் தலைமையில் நாம் நம் மண்ணின் நம் மக்களின் விடுதலைப் பயணத்துக்குப் பக்கத் துணையாகி நிற்க வேண்டும் என்பதே தங்கம் நிகர்த்த தமிழ்த் தளபதி மாவீரர் கேணல் கிட்டுவின் எதிர்பார்ப்பு.


"அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன் அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தது. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சிய வாதியாக வாழ்ந்தான் போராடினான் அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது." எனும் மாவீரர் கேணல் கிட்டு குறித்து தலைவர் பிரபாகரன் அவர்களின் கருத்து, ஒவ்வொரு தமிழ் மக்களதும் அனுபவ உணர்வாக உள்ளது.

> "அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன் அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தது. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சிய வாதியாக வாழ்ந்தான் போராடினான் அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது." - தமிழீழத் தேசியத் தலைவர்

மாவீரர் கேணல் கிட்டு தேசியத் தலைவர் பிரபாகரனைக் குறித்து எழுதுகையில், *"சர்வதேசத்திலும் பலர் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரனை சுதந்திரத்தின் குறியீடாக கருதுவதாகக்"* கூறினார்.

ஆம்! தேசியத் தலைவர் குறித்து அவர் அருகிலிருந்து அவரின் ஆளுமையில் – வழிகாட்டலில் தோளோடு தோள் கொடுத்த மாவீரர் கேணல் கிட்டு மிக ஆழமான கருத்தைத்தான் கூறியுள்ளார் என்பதைத் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றினை அறிந்த எவருமே ஏற்பர். சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனுடனும் கூடப் பிறந்ததொன்று. ஒரு மனிதன் தன் முழு ஆற்றலையும் பிரயோகிக்கும் நிலை காணப்பட்டாலே அங்கு சுதந்திரம் நிலவுவதாகக் கூறலாம். ஒரு மனிதனுடைய ஆற்றலுக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் – ஒடுக்கு முறைகள், அதிலும் ஆயுத ரீதியாக அத் தடைகள் ஒருவரை நெருக்கும் பொழுது அவர் ஆயுத ஒடுக்கு முறைக்கு உள்ளாவார்.

தமிழீழ மக்கள் காலனித்துவக் காலம் முதல் ஏற்படுத்தப்பட்டு வந்த படைபல நெருக்கத்துடனான மேலாண்மை ஆட்சிகளாலும், காலனித்துவம் விட்டுச் சென்ற அடிமைத்தனமான சிந்தனைகளாலும் *'சுதந்திரம்'* என்பது *'பிறப்புரிமை'* என்பதை மறந்து வாழ்ந்தனர். *கேட்டுப் பெறுவது - கெஞ்சிப் பெறுவது - கொஞ்சிப்*



*பெறுவது என்றெல்லாம் பெறுவது தான் சுதந்திரம் என நினைத்தார்களே தவிர நிலைநாட்டப்பட வேண்டியது சுதந்திரம் என்ற உண்மையை மறந்துவிட்டனர்.*

இதனாலேயே, தமிழீழ மக்களை நாடற்றவர்களாகவோ அல்லது இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ மாற்றிவிடலாம் எனும் அரசியல் சதிவலை சிங்கள அரசுகளால் தொடர்ச்சியாகப் பின்னப்பட்டது. ஆனால், அந்த சதி–வலையைப் போராடி அறுத்தெறியாது, போற்றி அகற்றிக் கொள்ளலாம் எனத் முன்னைய தமிழ்த் தலைமைகள் எண்ணியமையே – போற்றுதலும் – ஏற்றுதலும் எள்ளி நகையாடப்பட்டு தூக்கி எறிபடலும் – தூற்றலும் மீளவும் போற்றுதல் சக்கரத்தை தொடங்குதலும் எமது இன வரலாறு ஆகிற்று. ஆதலால், வரலாற்றில் தமிழீழ மக்கள் தமது தாயகத்திலேயே இராணுவ ஒடுக்கு முறைகளைச் சந்திக்கும் துர்ப்பாக்கிய நிலைதான் பிரசவிக்கப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் சங்கத்து வீரமும், தமிழ்ப் பெரியார் தத்துவமாம் *"நாம் யார்க்கும் குடியல்வோம், நமனை அஞ்சோம்" எனும் விழிப்புணர்வு, மீளவும் தமிழ் மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தமிழீழத் தேசத்தின் தேசிய பாதுகாப்பு அரணாகக் கால் வைத்தது.* "தமிழர் படைதான் புலிப்படை. தன்மானம் ஒன்றுதான் அடிப்படை... அது வெல்லும் என்பது வெளிப்படை..... எனத் தமிழீழ மக்களுக்கு சுதந்திரத்தின் வலிமை கூறிப் புறப்பட்ட பெருந் தலைவன் தான், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவரின் அன்புத் தம்பியாய் – அருமைத் தளபதியாய் – நேசப் போராளியாய் – தேசமெங்கும் தேச விடுதலைக்காய் உழைத்த உத்தமர் தான் **கிட்டண்ணா எனும் சதாசிவம் கிருஸ்ணகுமார்.**

சதாசிவம் கிருஸ்ணகுமாரின் சலியாத உழைப்பின் சரித்திர வெற்றிதான் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் ஒன்றாய் –ஒருமைப்பாடாய் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தேச விடுதலை அணியின் பின்னால், *"ஓரணி இனித் தமிழணி"* என அணிவகுத்த அற்புத வரலாறு.

தமிழீழத் தேச மக்கள் எங்கு வாழ்ந்தாலும், எந்நேரத்திலும் அவர்கள் தமிழீழத் தேசத்தவர்களே என்ற உண்மையை எல்லோர் உள்ளத்திலும் உணர்வாக்கி, *"தேச விடுதலைக்கு உழைப்பது வரலாற்றுக் கடமை"* என்ற அழைப்பை விடுத்தவர் மாவீரர் கேணல் கிட்டு.

தமிழீழ மண்ணில் வாழ்ந்த காலத்திலும், தமிழீழப் புலம் பெயர் நெஞ்சங்களில் கோயில் கொண்ட வேளையிலும் தமிழீழத் தேசத்தின் தலைவன் பிரபாகரனின் சொல்லையும் செயலையும் மக்கள் செயலாக்கமாக மாற்றிய செயல் மறவன் மாவீரர் கேணல் கிட்டு.

நடுநிலைமை ஒன்று தமிழரிடை இருக்க முடியாது. ஓரணி தேச விடுதலைக்காய் உயிராயுதம் தாங்கி நிற்கும் தியாக மறவர் விடுதலைப் புலிகள் – எதிரணி ஆக்கிர

தொடர்ச்சி 16 ம் பக்கம்...

# போராட்டத்தை ஆரம்பித்த

1972 களிலேயே தோற்றம் பெற்ற தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் மாபெரும் திருப்பு முனையை, ஓர் புதிய சகாப்தத்தைப் படைத்தது, 1983 யூலை 23ம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற 13 இராணுவவீரர் மீதான தாக்குதலாகும். இம் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப் புலிகளில் பலர் (தலைவர் பிரபாகரன், அப்பையாண்ணை தவிர) இன்று எம்முடன் இல்லை. போராட்டத்தை ஆரம்பித்து வைத்த, இத்தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களான செல்லக்கிளி, பொன்னம்மான், விக்ரர், கணேஸ், ரஞ்சன், றெஜி, லிங்கம் ஆகியோரின் நினைவாக......... அன்று கிட்டண்ணா அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையே இது. திருநெல்வேலித் தாக்குதலில் பங்கேற்ற வரலாற்று நாயகர்களில் ஒருவரான கிட்டண்ணாவும் இன்று எம்முடன் இல்லை. அதனால் இங்கு, கிட்டண்ணாவின் நினைவாகவும் இக்கட்டுரை மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.

**1983**ம் ஆண்டு யூலை 23ம் திகதி இரவு 11 மணியளவில், திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓர் வெள்ளை நிற டெலிக்கா வான் வந்துகொண்டிருக்கிறது. வானை



கேணல் கிட்டு

செல்லக்கிளி செலுத்த, அவனை அடுத்து கையில் S.M.G உடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான். வானில் பின்பகுதியில் தம்பி மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி, வான் தபால்பெட்டிச் சந்தியில் நிற்க எல்லோரும் கீழே இறங்குகிறோம்.

அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

வான் நின்ற இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயல் சனங்கள் அரவம் கேட்டு வெளிவரத் தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் கதைத்தபடி றோட்டில் நடக்கத் தொடங்க, வெளியே எட்டிப் பார்த்த தலைகளைக் காணவில்லை. வெளிச்சம் போட்ட இருவீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டன. யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்து விட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர் செல்லக்கிளி, மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும் செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடிமருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்கமுடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி, (இறுகப் போடப்பட்ட தார்றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல) இவற்றையும்விட தாக்குதலின் போது சண்டையும் போடவேண்டும்.

எமது தகவலின்படி, சுமார் நள்ளிரவு 12 மணியளவில் பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ட்ரக் வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் 4 இராணுவத்தினரும் ட்ரக்கில் 10 பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே, யாழ் பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டைச் சந்திக்கும் இடமாகிய தபால் பெட்டிச் சந்தியில் கண்ணிவெடி புதைத்து, இரண்டாவதாக வரும் வாகனத்துக்குக் கண்ணிவெடி யால் தாக்க, முன்னால் வரும் வாகனத்தைச் சுட்டு மடக்குவது என்பது நாம் வகுத்த திட்டம். அதன்படி, திருநெல்வேலிச் சந்தியில் ஒரு வாக்கி ரோக்கி. அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும். விக்ரரும் செல்லக்கிளியும் அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில், மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து, தத்தமக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியைப் புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி, தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கின்றான். சுவர் அவனை விட. உயரமாக இருக்க, பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காகத் தெருவில் தேடி சில பெரிய கற்களை



லெப். செல்லக்கிளி

எடுத்து உள்ளே போட்டு, தன் உயரத்தைச் சரிப்படுத்திக் கொண்டு அந்தச் சுவரின் மறைவைக்கொண்டு தன் நிலையைச் சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக்கியைத் தோளில் வைத்து, இயக்கிப் பார்க்கும் விதங்களையும் துப்பாக்கியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரி பார்த்துக் கொள்கின்றான்.

தம்பி (பிரபாகரன்) தபால் பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப் பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்து, தாக்கு தலுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில் வாக்கிரோக்கி செல்லக்கிளியைக் கூப்பிடு கிறது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாகத் தன் வேலையை முடித்துக் கொண்டு, மீதி வேலையை அப்பையா அண்ணை யிடம் விட்டுவிட்டு, தனது நிலைக்குச் செல்கின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல், வெடிக்க வைக்கும் கருவியுடனும் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது. அப்பகூட வேலை முடியவில்லை. விக்ரர், "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது, கெதியாக மாறுங்கோ" என்று கத்த, அப்பையா அண்ணை வயர் றோல்களுக்கு ரேப் சுத்திக்கொண்டிருக்கையில் வாக்கி மீண்டும் அலறியது.

அம்மான் நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்தான். முன்னுக்கு ஜீப், பின்னால் ட்ரக் என்று அறிவித்தது. எனவே அம்மான் ட்ரக் வண்டிக்குக் கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில், வெளிச்சங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டு விட்டு, பின்னால் வரும் ட்ரக் வண்டியைக் கண்ணிவெடியால் தாக்கி, அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். ட்ரக் வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களைச் சுடக்கூடியவாறு விக்ரர் நிற்கிறான். விக்ரரையும் தாண்டுபவர்களைக் கவனிக்கத் தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர். வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்து கொண்டிருந்தது. நான் எட்டிப் பார்த்தேன். முன்னால் இருவிளக்குடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான இடை வெளியைக் கொண்டு அது ஜீப் என்று புரிந்து கொண்டேன். அடுத்து ட்ரக் மெல்ல வந்துகொண்டிருக்கின்றது.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்க, ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி, கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்தபோது, கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டு விடுகிறது. எமக்கு அதிர்ச்சி.......! ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப் வண்டியை விட்டு, பின்னால் வரும் ட்ரக் வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்க வைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி, அதை விளக்க எம்முடன் இல்லை. சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்கநேரமில்லை. உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத்தொடங்கினோம். ஜீப் வெளிச்சம் அணையவில்லை. எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை. என்னுடைய ஜி 3 ஆல் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். ஜீப்பின் விளக்கு உடைந்ததும் பின்னால் நின்ற ட்ரக்கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு, அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக்கூட்டில் போடப்பட்டு இருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க, விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது, விக்ரர் தன் தலையைச் சுவருக்கு உள்ளே இழுத்துக் கொண்டு நிற்கையில், மிகப் பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி



லெப் .கேணல் விக்ரர்

வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதி மண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடி வருவது தெரிய, அவனைக் குறி வைத்து விசையை அழுத்த சில குண்டுகள் ஓடிவந்தவனின் உடலிலே பாய, அவன் தூக்கியெறியப்படுகிறான். அப்படியே சுருண்டு எழுந்துவிட்டான். இன்னும் ஒருவன் ஓடிவர, அவனை நோக்கிச் சுட அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட, குண்டுகள் அவனை விழுத்தவில்லை. ஆனால் காயப்படுத்தின. ஆனால், அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின்வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திருப்பிச் சுட்டான். வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை. மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட, ஜீப்புக்குக் கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்தச் சுவாலையை மையமாக வைத்து சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அது அடங்கிவிட்டது. மேலும் ஒரு சில உருவம் தெரிய, அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கியது. போடப்பட்ட குண்டுகள் முடிந்துவிட்டது. குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச் சட்டத்தை மாற்றி மீண்டும் சுட்டான். அதேவேளை, பின்னால் வந்த் ட்ரக் வண்டியின் சாரதி வெடித்ததைப் பார்த்தான். அவன் உடன் சில்லிட்டது. பெரிய வெளிச்சத்தையும், ஜீப் மேலே தூக்கியெறியப்பட்டதையும் கண்ட சாரதி, தன்னை அறியாமலே பிரேக்கை இறுக அமத்தினான். ஏன் பிரேக் அழுத்தும் மிதி மீது ஏறி நின்றான் என்றே கூறலாம். ட்ரக்



றெஜி

# வரலாற்று நாயகர்களுக்காக...

பிரேக் போட்டு நின்றதும், ட்ரக்கின் பின்புறத்தில் இருந்த இராணுவத்தினர் தம் துப்பாக்கியைத் தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத்தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்தியிருக்க, இருவாகனங்களும் அவரைத் தாண்டுகிறது. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில், ஜீப் வண்டி கண்ணி வெடியை நெருங்கிக் கொண்டிருக்க, ட்ரக் அவருக்குச் சரியாக இருபதுயார் தூரத்தில் சென்றுகொண்டிருக்க கண்ணிவெடி வெடித்தது. ட்ரக் அவருக்கு மிகக் கிட்ட, கையில் எட்டிப் பிடிக்குமாப் போல் தூரத்தில் பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க, தான் எப்போதும் உடன்வைத்திருக்கும் அவருடைய ஜி3 எ3 வெடிக்கத்தொடங்கியது.

ட்ரக்கின் இருக்கையில் இருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில், தம்பியின் ஜி3 வெடிக்கத் தொடங்கியது.

ஜி3 எ3 யில் இருந்து புறப்பட்ட சூடான ரவைகள் தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத்தொடங்கியது.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட



லெப் .கேணல் புலேந்திரன், லெப். கேணல் சந்தோசம்,, லெப்.கேணல் பொன்னம்மான்

இந்தத்திருப்பம், தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்க வைத்துவிட்டது.

ஆனால், இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியைக் கையாழ்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம், ட்ரக்கில் வந்த ஒன்பது இராணுவத்தினரும் சிக்கினதே எமது முழுவெற்றிக்கும் வழிகோலியது.


ட்ரக் மிகக்கிட்ட நிற்பதால் இலகுவாகத் தம்பியால் அவர்களைச் சுடமுடிகிறது. வெடியின் அதிர்வில் தெருவிளக்குகள் அணைந்துவிட்டபோதிலும் மிகக் கிட்ட இருப்பதால் ஒவ்வொருவராகக் குறி வைத்துச் சுட்டார். ஆனால், மிக அபாயகரமான நிலை அவருக்கு. இராணுவத்தினரைப் பொறுத்தவரை தம்பி மிகக் கிட்ட நின்றார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நின்றார். ஆனால், தனது ஆளுமையால், ஆற்றலால் வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்த போதிலும், இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் ட்ரக்கிலிருந்து கீழே குதித்து, சில்லுக்குள் புகுந்து கொண்டு மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. இத்துடன், ட்ரக்கின் முன்புறத்திலிருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் ஜி3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால், தம்பிக்கு உதவிக்கு எவருமேயில்லை. நாம் எமது திட்டத்தின்படி, ஜீப்பை முன்னேவிட்டு ட்ரக் வண்டிக்குக் கண்ணிவெடித் தாக்குதல் செய்வதற்காக இருந்தோம். அத்திட்டத்தின்படி, தம்பியை மிகப் பின்னுக்கு வைத்தோம். ஆனால், இப்போ தனியாகவே ட்ரக்கைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டு விட்டார். இதேநேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டு இருந்த விக்ரர், தனக்கு 20 யார் பின்னே ட்ரக் நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன் இயந்திரத் துப்பாக்கியை ட்ரக்கை நோக்கித் திருப்பினான். ட்ரக்கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்குக் குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான்.

அப்போதுதான், சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது சாரதி தனது இருக்கையிலே ஸ்ரேறிங்கில் சாய்ந்து, வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன்னோக்கி, எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து "பஸீர் காக்கா" "றிப்பிட்டரால்" ஜீப்பை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்தார். றிப்பிட்டரில் தோட்டாக்கள் முடிவடையும் போது, அதை மாற்றி திருப்பித் தாக்கும் படி சொல்லி உட்சாக மூட்டிக்கொண்டிருந்தார், காக்காவின் அருகிலிருந்த அப்பையா அண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் S.M.G உடன் ஓடி வந்தான்.

"சுடு" என்ற அப்பையா அண்ணை, உடனே "கவனம் எங்கட பெடியளோ தெரியாது. பார்த்துச் சுடு" என்றார். றிப்பிட்டர் சத்தம் ஓய, வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது S.M.G ஐ அப்பையா அண்ணை எடுத்துக்கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய



கப்டன் லிங்கம்

லெப்ரினன்ட் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவப் பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதே நேரம், தம்பி தனிய நிற்பதை உணர்ந்து ரஞ்சனையும் இன்னொரு



கப்டன் ரஞ்சன் லாலா

போராளியையும் "தம்பியிடம் ஓடு" என்று துரத்தினேன். அவர்கள் அருகில் உள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால், ரஞ்சனும் சக போராளியும் தம்பியை நோக்கிச் சென்றடைந்த போது, ட்ரக்கிலிருந்த அனைத்துத் துப்பாக்கிகளையும் தம்பியின் தனி ஒரு ஜி3 ஓயவைத்து விட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ்வீரச் செயலை முடித்து விட்டு, அமைதியாக விட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழ் இருந்து, முடிந்த ரவைக்கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

மதிலேறிக் குதித்த ரஞ்சனும் மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக் கண்டு, ஆயுதத்தைத் தயார் நிலைக்குக் கொண்டு, வந்து "யாரது" என்றவாறு முன்னே வந்தனர்.

"அது நான்ராப்பா" என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி, இங்கே எல்லாம் முடிந்தது. உங்களுடைய பக்கம் எப்படி என்றார். "அண்ணை எங்கட பக்கம் பிரச்சனையில்லை" என்றான் ரஞ்சன்.

"இங்கையும் எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால், எனக்குச் சற்று முன்பாக எதிரே இருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டாங்களோ தெரியவில்லை. வா பார்ப்போம்" என்றவாறு, தன் பிரியத்திற்குரிய ஜி3 யைத் தூக்கிக் கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்கு முன், ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று, எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு ட்ரக்கின் கீழ் விழுந்து வெடித்து எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து, ரோட்டைத் தாண்டி புலேந்திரன், சந்தோஷத்தின் இடத்தை அடைந்தான். அங்கே புலேந்திரன், சந்தோஷத்தைக் காணவில்லை. எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள் எனக்கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன், தம்பியைப் பார்த்து அண்ணை அவன் "அனுங்கிறான்." மீண்டும் ஒருமுறை முழங்கிய ஜி3, அவனின் அனுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இதன்பின், ட்ரக்கை நொருங்கி ஆயுதங்களைச் சேகரிக்கத் தொடங்கினார். பின் தம்பி, வெளியே கிடந்த இராணுவத்தினரின் இறுதி அத்தியாத்தை ஜி3யால் எழுதிவைத்தார். ஜி3யின் வேகம் மண்டையோடுகளைப் பிளக்க வைத்தது.

இதேநேரம், பல்கலைக்கழக பின்வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை, இன்னோர் போராளி துரத்திச் சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்து விட்டு, பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் ட்ரக்கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

"கரையால் வாருங்கள்" என்ற தம்பியின் குரல் எம்மை வரவேற்றது. எல்லோரும் தம்பியைச் சூழ்ந்து கொண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன் இறந்து கிடந்த இராணுவத்தினரின் கெல்மெட்டைத் தலையில் போட்டுக்கொண்டு, ட்ரக்கின் கீழே இறந்துகிடந்த இராணுவ வீரர்களினது ஆயுதங்களைத் தேடி எடுத்துக் கொண்டான்.

இத்தாக்குதல் இரவுநேரமாதலால், எம்மையும் இராணுவத்தினரையும் வேறு பிரிக்க, நாம் கெல்மெட்டைத்தான் குறியீடாகப் பாவித்தோம். எனவே கெல்மெட்டுடன் ஓர் உருவம் நகர்வதைக் கண்ட தம்பி, உடனடியாகத் துப்பாக்கியைத் தயார் நிலைக்கு கொண்டு வந்து "யாரது" என்று வினவ, அம்மான் 'அது நான் தம்பி' என்றவாறு தன்தவறை உணர்ந்து கெல்மெட்டைக் கழற்றினார்.

பொன்னம்மானைச் செல்லமாகக் கண்டித்தவாறு எல்லாரையும் சரி பார்க்குமாறு தம்பி பணிக்க, அம்மானைக் காணவில்லை என்று விக்ரர் கத்தினான், விக்ரரும் புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். 'டேய் அம்மானுக்கு வெடி விழுந்திட்டுது' என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித்தது. எல்லோரும் அங்கே ஓட, நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும் போது,



மேஜர் கணேஸ்

அம்மானின் உடல் குளிர்ந்து விட்டது.

லிங்கம் இறுதியாக இராணுவத்தினரின் தலையில் போட, ரெஜி ஆயுதங்களைப் பொறுக்கினான்.

வான் புறப்படத் தொடங்க, மழையும் மெதுவாகத் தன் கரங்களால் வாழ்த்துத் தெரிவித்தது எமக்கு. செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும் மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த, வான் எமது முகாம் நோக்கிப் பறக்கிறது. ✳



# தாயகம் நோக்கிய பயணம்

"டேவிட் வீணாக வாதம் செய்யாதே சிலருக்கு நாம் பார்வையில் பட்டாலே வெறுப்பாயிருக்கிறது. திருமதி. பிறமென்ற் வெளியே போவதற்கு வழியைக் காட்டிவிடு."

கூடாரங்கள் அமைந்திருந்த பாதையொன்றில் கிற்றியும் டேவிட்டும் அருகருகாகச் சென்று கொண்டிருந்தனர். சிறிது பக்கவாட்டில் பார்த்தவளின் கண்களுக்கு, அரி தன் பின்புறத்தையே பார்த்துக்கொண்டிருந்தது தெரிந்தது. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இவ்விடத்தை விட்டகன்று மார்க்கிடம் போய்ச் சேர்ந்து துர்பாக்கியமான இந்த முழு விஷயத்தையுமே மறந்து விட வேண்டுமென்று துடி துடித்தாள்.

அவளுக்கருகே திடீரென கட்டுப்பாடுகள் எதுவுமற்ற சிரிப்பலைகள் பெரும் கூடாரமொன்றினுள் இருந்து வெடித்துக் கிளம்பியது. அந்த மகிழ்ச்சியாயிருக்கும் சிறுவர்களின் சிரிப்போசை கராலலொஸ் சூழ்நிலையோடு ஒத்துவரவில்லை. கிற்றி ஆர்வத்தினால் கூடாரத்துக்கு முன் நின்று கூர்மையாகக் கேட்டாள்.ஒரு பெண்பிள்ளை கதைஒன்றை வாசித்துக்

**லியோன் யூரிஸ்**

கொண்டிருந்தாள். அவள் குரல் மிகவும் இனிமையாக இருந்தது. இந்தப்பிள்ளை ஒரு வித்தியாசமான பெண். அவள் இந்தக் குழந்தைகளிடையில், வினோதமான முறையில் வேலை செய்கிறாள். இன்னொரு முறை சிரிப்பலைகள் அந்தக் கூடாரத்திலிருந்து கிளம்பியது.

கிற்றி கூடார வாசலுக்குச் சென்று, வாசல் சீலையை மேலே தூக்கினாள். அந்தப்பெண் தன் முதுகைக் கிற்றிக்குக் காட்டியபடி ஒரு மரப்பெட்டியின் மேல் அமர்ந்திருந்தாள். அவளைச் சுற்றி இருபது சிறுபிள்ளைகள் வியப்பினால் விரிந்த கண்களுடன் அமர்ந்திருந்தனர். டேவிட்டும் கிற்றியும் உள்ளே வருவதை தலையை உயர்த்திப் பார்த்தனர்.

அந்தப்பெண் வாசிப்பதை நிறுத்திவிட்டு புதிதாக உள் நுழைந்தவர்களை வரவேற்க எழுந்தாள். திறந்திருந்த கூடாரவாசலூடாக வீசிய காற்றில் அலைபாய்ந்த விளக்கின் ஒளியினால் சிறுவர்களின் உருவங்களின் நிழல்கள் நடனமாடுவது போல் இருந்தன.

கிற்றியும் அந்தப் பெண்ணும், ஒருவரை ஒருவர் நேராக நோக்கியபடி நின்றனர். கிற்றியின் கண்கள் அகலத்திறந்து அதிர்ச்சியை வெளிக்காட்டின. அவள் கூடாரத்துக்கு வெளியே விரைவாகச் சென்று, திரும்பிய வியப்புடன் நின்று கொண்டிருந்த அப்பெண்ணின் முகத்தை கூடாரவாசலூடாக நோக்கிக் கொண்டிருந்தாள். பலதடவைகள் அவள் பேச எடுத்த முயற்சிகள் தடுமாற்றமான மௌனத்தில் முடிந்தன.

"நான் அந்தப் பெண்ணைக் காணவிரும்புகிறேன். தனியாக கிசுகிசுக்கும் குரலில் கடைசியாகச் சொன்னாள்.

இந்நேரத்தில், அரி அவர்களுக்கு அருகாமையில் வந்து விட்டான். தலையசைத்தபடியே டேவிட்டை நோக்கி "அந்தப் பெண்ணை பாடசாலைக் கட்டிடத்துக்குக் கூட்டிக் கொண்டு வா. நாங்கள் அங்கே காத்திருக்கிறோம்." என்றான் அரி.

அரி, பாடசாலைக் கட்டிடத்தில் இருந்த லாம்பைக் கொழுத்தி விட்டு தங்களுக்குப் பின்னால் கதவைச் சாத்திவிட்டான். கிற்றி எதுவுமே பேசவில்லை. அவளது முகம் வெளுத்திருந்தது.

திடுதிப்பென அரி, "அந்தப் பெண் உனக்கு யாரையோ ஞாபகப்படுத்துகிறாளா?" என்றான். அவள் மறுமொழி கூறவில்லை. அவன் ஜன்னலூடாக நோக்கியபோது டேவிட்டும் அந்தப் பெண்ணும் வளாகத்தைக் கடந்து வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் கிற்றியைத் திரும்பி இன்னொருமுறை பார்த்துவிட்டு, அறையிலிருந்து வெளியே நடந்தான்.

அரி வெளியேறிக் கொண்டிருக்கும் போது, கிற்றி தன் தலையை அசைத்துக் கொண்டாள். இது பைத்தியக்காரத்தனம். இவள் ஏன் இங்கு வந்தாள்? அவள் திரும்பவும் தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அந்தப் பெண்ணை திரும்பவும் பார்க்க தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

கதவு திறக்கும் ஓசை கேட்டதும் கிற்றி பரபரப்படைந்தாள். அந்தப் பெண் மெதுவாக அறையினுள் வந்தாள். அந்தப் பெண்ணை தன் கரங்களில் அரவணைக்கும் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டே அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

அந்தப்பெண் கிற்றியை வியப்போடு பார்த்தாள். எதையோ அவள் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக அவளது பார்வையில் இரக்கம் துளிர் விட்டது.

"எனது பெயர் கத்தறின் பிறமென்ற்" சீரற்ற முறையில் சொன்ன கிற்றி மேலும் "நீ ஆங்கிலம் பேசுவாயா?" என்றாள்.

"ஆம்"

அந்தப்பிள்ளை மிகவும் அழகாக இருந்தாள். அவளுடைய கண்களில் ஒளி வெள்ளமிருந்தது. அவள் சிரித்துக் கொண்டே தன் கையை கிற்றிக்காக நீட்டினாள். கிற்றி அந்தப் பெண்ணின் கன்னங்களைத் தொட்டுவிட்டுக் கையைக் கீழே விட்டாள்.

"நான் ஒரு மருத்துவ தாதி. உன்னை நான் சந்திக்க விரும்பினேன். உன்னுடைய பெயர் என்ன?"

"எனது பெயர் கரேன்" சுரேன் கஞ்சன் கிளமென்ற் என்றாள். கிற்றி ஒரு தாழ்ந்த கதிரையில் அமர்ந்து கொண்டு அவளையும் அமரச் சொன்னாள்.

"உனக்கு எத்தனை வயதாகிறது?"

"இப்பொழுது எனக்குப் பதினாறு வயதாகிறது, திருமதி பிறமென்ற்"

"தயவு செய்து என்னைக் கிற்றி என்று அழை." சரி அப்படியே செய்கிறேன் கிற்றி."

"நீ பிள்ளைகளோடு வேலை செய்கிறாய் என்று அறிந்தேன்."

அவள் ஆமெனத் தலையை ஆட்டினாள்.

"மிகவும் நல்லது.. இங்கே பார்.. நான் சிலவேளை இங்கே வேலை செய்ய வரக்கூடும். அதனால் உன்னைப்பற்றி முழுதாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கு உன்னைப்பற்றிச் சொல்ல முடியுமா? சுரேன் சிரித்தாள். ஏற்கனவே, அவள் கிற்றியை விரும்பத் தொடங்கிவிட்டாள். அதேபோல் கிற்றி அன்புக்காக ஏங்குவதும், அன்பு தேவையாயிருந்ததும், அவள் உள்ளுணர்வுக்குத் தெரிந்தது.

எனது பூர்வீக இடம் ஜெர்மனியாகும். ஜெர்மனியில் கொலோனில் பிறந்தேன்....

"பயப்படாதே நான் உன்னோடிருக்கிறேன்...!
உன்னுடைய விதைகளைக் கிழக்கில் சேகரிப்பேன்...!
மேற்கில் உன்னைச் சேர்த்தெடுப்பேன்...!
விட்டுவிடு என்று வடக்கிற்கும்...
தொலைவிலிருந்து வரும் என் புதல்வர்களையும் ...
உலகின் முடிவிலிருந்து வரும் என் புதல்வர்களையும்...
தடுத்து வைக்காதே என்று தெற்கிற்கும் கூறுவேன்...!"

*இது வேதாகம வசனம் - இதில் நம்பிக்கை வைத்து ஆயிரக்கணக்கான மைல்கள், கால் நடையாக, பனி மலைகளுடாக, பாலைவனங்களுடாக, ஆறுகள், கடல்கள் கடந்து யாக்கோப்பின் மைந்தர்கள் - யூத மக்கள் தாயகம் நோக்கி வருகின்றார்கள்.*

அது வெகு காலத்துக்கு முன்— என்று ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் பதினொன்று

**கொலோன், ஜேர்மனி, 1938**

யாரும், ஒரு 7 வயதுப் பெண்ணாகவும், அவளுடைய, தந்தை பிரபலமான பேராசிரியர் ஜோஹான் கிளமென்ராகவும் இருக்கும் பட்சத்தில் வாழ்க்கை மிகவும் இனிமையாக இருக்கும். அத்தோடு அது கொலோனின் கேளிக்கைகள் (Carnival) நடக்கும் நேரம். கேளிக்கைக் காலங்களில் மட்டும் சில விடயங்கள் தனிப்பட்ட விசேடங்களாக இருக்கும். ஆனால், எப்போதுமே விசேடமான ஒரு விஷயம் உண்டு. அதுதான் தன் தந்தையுடன் நடந்து செல்வது. ஒன்றில் லின்டன் (Linden) மரங்களுக்குக் கீழால் றைன் நதிக்கரையோரமாக நடக்கலாம். அல்லது உலகிலேயே மிக உன்னதமான குரங்குக் கூண்டுகளைக் கொண்ட மிருகக்காட்சிச் சாலையூடாக நடக்கலாம். அல்லது பெரிய பேராலயத்தைக் கடந்து, வானத்தைக் கிழித்துச் செல்வது போல் ஐந்நூறு அடிக்கு மேல் உயரமாக கட்டப்பட்டிருக்கும் இரட்டைக் கோபுரங்களை ரசிக்கலாம், எல்லாவற்றையும் விட அருமையானது அதிகாலையிலேயே நகரசபைக் காடுகளூடாக தந்தையுடனும், மக்சிமில்லியனோடும் நடப்பதாகும். மக்சிமில்லியன் என்பது வினோதமான தோற்றம் கொண்டிருந்தாலும் ஒரு குறிப்பிடத்தக்க நாய் தான். ஆனால் மக்சிமில்லியனை மிருகக்காட்சிச் சாலையுள் செல்ல அனுமதிக்க மாட்டார்கள். சிலவேளையில் கான்ஸ்சையும் கூட்டிச் செல்வதுண்டு. ஆனால் தம்பிமார் சில வேளைகளில் குழப்படி செய்வதுமுண்டு.

இப்படியான அழகான சிறிய பெண்ணாக இருக்கும் பட்சத்தில் உன்னுடைய தாயாரையும் நேசிப்பாய். அவளும் கூட உன்னோடும், தந்தையோடும், ஹான்ஸ்சோடும், மிக்சிமில்லியனோடும் இந்த நடைப்பயணங்களில் வரவேண்டும் என விரும்புவாய். ஆனால், துரதிஷ்டவசமாக அந்நாட்களில் அவள் கர்ப்பமாக இருந்ததால், அசௌகரியப்பட்டுக் கொண்டிருந்தாள். பிறக்கப்போகும் புதிய குழந்தை தங்கையாக இருந்தால் நல்லது. ஏனெனில் ஒரு பெண்பிள்ளையால் ஒரு தம்பியை மட்டும் தான் சமாளிக்கலாம்.

வீட்டைப் பாதுகாக்க வேண்டி இருந்ததால், பின்தங்கி விடவேண்டிய பரிதாபத்துக்குரிய மக்சிமில்லியனைத்தவிர ஏனையோர் ஞாயிற்றுக்கிழமைகளில் காருக்குள் ஏறிக்கொள்ள, தந்தை அதை றைனின் நதிக்கரை ஓரமாய் ஓட்டிக்கொண்டு பொன்னில் உள்ள பேத்தியாரின் வீட்டுக்குச் செல்வார். சிறிய தாய் தந்தையரும், மாமா மாமிமாரும் மற்றும் அவர்கள் பிள்ளைகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு கூடுவார்கள். அவர்களுக்குக் கொடுக்கவெனவே பாட்டி நூற்றுக்கணக்கான தின்பண்டங்களைத் தயாரிப்பார்.

விரைவில் வந்துவிடும் முதுவேனிற் காலத்தில் ஒரு அற்புதமான உல்லாசப்பயணம், கடற்கரையோரமாக வடக்கே, கருங்காட்டினூடாகவோ, (Black Forest) அல்லது பேடன்–பேடனில் இருக்கும் ஊற்றுக்கள் அருகே இருக்கும் பிறெனர்ஸ் பார்க் கோட்டேலுக்கோ (Brenner's Park Hotel) இடம்பெறும் பேடன்-பேடன் எவ்வளவு வினோதமான பெயர்.

பேராசிரியர் ஜோஹானா கிளமென்ற் ஒரு மிகவும் முக்கியமான மனிதர்.

தொடரும்...

தமிழீழத்திலிருந்து வெளியாகும் "வெளிச்சம்" (வைகாசி 93) சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரை

கண்டி வீதியே அன்று கலகலத்துக் கொண்டிருந்தது.

குளிப்பாட்டி, நீறணிந்து, சந்தனக் குங்குமப் பொட்டுக்களிட்டு, கொம்பு

அனுபவிக்கும் ஆனந்தம்–

உறவினர் வீடுகளில் சில நாட்கள் தங்கி, வன்னிக்காற்றின் வருடலை அனுபவிக்கும் இன்பம்–

அற்புதத் திருக்கோவில் இது. அனைவரும் ஒன்றாகக் கூடிச் சமைத்துண்பதும், கலகலப்பும் சிரிப்பும் கும்மாளமுமாய் காடுகளுக்குள் பாலைப்பழம் தேடிச் செல்வதும், காலம் காலமாக வழங்கிவரும் எமது ஒருமைப்பாட்டு வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று.

கையசைப்பதும் வருடாந்த நிகழ்ச்சியாகும்.

கரவெட்டிப்பாணிக் காத்தவராயன், கொக்குத்தொடுவாயில் ஆடப்படுவதும், புதுக்குடியிருப்புச் சிந்துநடைக்கூத்து பருத்தித்துறையில் பேணப்படுவதும் எமது கலாபூர்வமான தொடர்புகளின் ஆணித்தரமான சான்றுகள். முள்ளியவளைக் கோவலன் கூத்தின் ஆட்ட மரபுகள், குறிப்பாக பிரசித்திபெற்ற பொற்கொல்லன் ஆட்டம் வட்டுக் கோட்டைக் கூத்துகளில் காணலாம். இது மட்டுமின்றி கரையூர், பாசையூரில் ஆடப்படும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் மன்னார் மாவட்டம் முழுவதுமே விரவிக்கிடக்கின்றன. இணுவில், வடமராட்சி, அளவெட்டி, காங்கேசன்துறை போன்ற இடங்களின் இசைநாடகக் கலைஞர்கள் வன்னிப்பகுதி முழுவதுமே சென்று நிகழ்ச்சிகளை நடாத்துவதும், பிரபல கலைஞர்கள் ஆங்காங்கே தமக்கு சிஷ்யர்களைக் கொண்டிருப்பதையும் காணலாம்.

# எங்கள் நினைவுகளும்

மாலை சுற்றப்பட்ட எருதுகள் இழுத்துச்செல்ல, "அரோகரா" கோஷங்களுடன் ஏழு வண்டில்கள் சென்று கொண்டிருக்கின்றன.

பாதையின் இருமருங்கிலும் சாவகச்சேரியில் இருந்து புளியம்பொக்கணை வரை மக்கள் கூட்டம். திவ்வியமான ஒரு உணர்வுச்சிதறல்கள் பாதையெங்கும் பரவிக்கிடக்கின்றன.

வேளை கட்டுவோர், அருச்சனை செய்வோர், நேர்த்திப் பொருட்கள் காணிக்கைகள் கொடுப்போர் எனத் தெருவே திருவிழாக்கோலம் பூண்டு நிற்கிறது.

அவலும், கடலையும், வாழைப்பழமும்,

**- நா.யோகேந்திரநாதன் -**

சர்க்கரைத் தண்ணீரும், தேனீரும் வெறும் உபசரிப்பாயன்றி உளமகிழ்வின் வெளிப்பாடாக அள்ளி அள்ளி வழங்கப்படுகின்றன.

புளியம் பொக்கணை நாகதம்பிரான் கோவிலில் இருந்து உரிய பூசைகள் முடித்து சூலம், கைப்பிரம்பு, கமண்டலம் ஆகியன காவலாக வர, இவ்வண்டில்கள் புறப்பட்டுச் சாவகச்சேரிச் சந்தையில் மடைப்பண்டங்கள் வாங்கிக்கொண்டு திரும்பி வருகின்றன.

பங்குனி உத்தரத்திற்கு நடைபெறும் பொங்கலுக்கு, மடைப்பண்டம் வாங்கப் புறப்படும் வைபவத்துடன் இப்

புதிய திருமணப் பேச்சுக்கால்கள் மூலம் மேலும் வன்னிக்கும் குடாநாட்டிற்குமான உறவுகளைப் பேணிவளர்த்தல்–

இப்படி, இப்படி இப்பொங்கல் எமது வாழ்வின் ஒரு பிரிக்க முடியாத வழமையாக, எமது பண்பாட்டுக் கோலத்தின் ஒரு வெளிப்பாடாக, கருவிலேயே ஊறிய உறவுகளின் சங்கமமையமாகத் திகழ்கிறது.

பாலம்பிட்டி, தட்சிணாமருதமடு ஆகிய வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க கிராமங்களின் அருகில் முதிரையும் பாலையும் வீரையும் ஓங்கி வளர்ந்த அடர்ந்த காட்டின் நடுவில்–

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த இடத்தில் ஒரு தனி இலையின் அசைவுகூட கேட்குமளவிற்கு அமைதி–

அந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு கம்பீரமான, தெய்வீகமான குரலின் தெட்டத்தெளிவான ஆராதனை–

அந்த ஆராதனையுடன் ஒன்றி, தம்மை மறந்து லயித்திருக்கும் மக்கள் வெள்ளம்–

இது மடுமாதா திருப்பதி!

இங்கே மதவேறுபாடுகள் இல்லை. பிரதேச வேறுபாடுகள் இல்லை. சாதி வேறுபாடுகள் இல்லை.

முழுவடதமிழீழ மக்களையும் வேற்றுமைக்கு அப்பாற்பட்ட ஒரு

ஒருபுறம் பரந்த நந்திக்கடல், மறுபுறம் விரிந்த மருதநில வயல் வெளிகள்–

வைகாசி விசாகத் திருநாள்–

காலம்காலமாக, தமிழ் மக்கள் மத்தியில் வழங்கிவரும் கண்ணகி வழிபாட்டின் தலைச்சின்னமாக விளங்கும் வற்றாப்பளை அம்மன் கோவில் மக்கள் வெள்ளத்தினால் திரண்டிருக்கிறது. எட்டுநாட்களுக்கு



முன்பே நந்திக்கடலில் நீரெடுத்து, முள்ளியவளை காட்டு விநாயகர் கோயிலில் விளக்கேற்றுவதுடன் ஆரம்பமாகும் இவ்விழா, விசாகத் திருநாளன்று அம்மன் பொங்கலுக்காக வன்னியையும், குடாநாட்டையும் ஒன்றாக்குகிறது. அந்த வெட்டவெளியில் கடலோர நிலவில், பொங்கல் செய்வதும் வழிபடுவதும், உறவுகளுடன் கூடிக் கதைத்துச் சிரித்து மகிழ்வதும், இதை வெறும் மதவழிபாட்டிற்கு அப்பால் உறவுகளைப் பேணும் சொந்தங்களை வளர்க்கும் எமது தேசியத்தை நிலைநிறுத்தும் சடங்காக ஆக்கி விடுகிறது. குடாநாட்டில் இருந்து இங்கு வருவோர், உறவினர் வீடுகளில் தங்குவதும் எட்டாம் மடைவரை சுற்றத்தார் வீடுகளுக்குச் சென்று கொண்டாடுவதும் திரும்பும்போது நெல், தேன், நெய், வேட்டை இறைச்சி

முருங்கன் படமாளிகை, குடாநாட்டு இசை நாடகக் கலைஞர்களின் குவிமையமாக இருந்து கலையால் வன்னியும் குடாநாடும் உறவாடிய வரலாற்றின் சான்றாகத் திகழ்கிறது.

வன்னிக்காடுகளில் வழிந்துவரும் மழைநீரால் தன்னை நிரப்பும் இரணைமடு, அருவியாற்றில் கரைபுரளும் நீரை ஏற்றுத்திகழும் கட்டுக்கரை, வளங்கொழிக்க வைக்கும் வவுனிக்குளம், இன்னும் அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும் சின்னஞ்சிறு குளங்கள் வன்னியை நீரால் மெருகேற்ற, வன்னியோ நெல்லாலும், உழுந்தாலும், பயற்றாலும் உணவளிக்கும் களஞ்சியமாகிறது. ஆனால் குடாநாடோ ஆழக்கிணற்றுநீரை உழைப்பின் உயர்வால் மேலேற்றி வெங்காயம், மிளகாய், வாழை என உபபயிர்களின் உற்பத்தித்தளமாகிறது. இளைஞர் குடியேற்றத் திட்டத்தின்

இது –

தமிழீழத்தின் தேவை; தமிழீழ தேசியத்தின் தேவை: தமிழீழம் வாழ் ஒவ்வொரு தனிமனிதனதும் தேவை.

பாதை திறக்கப்படுவதை நோக்கி, தடைகள் உடைக்கப்படுவதை நோக்கி ஒவ்வொரு தமிழரும் தமது நினைவுகளைத் திருப்ப வேண்டும். செயல் முறைகளை நகர்த்த வேண்டும்.

இது ஒரு தேசம் பரந்த எழுச்சியாக, ஒவ்வொருவரினதும் சிந்தனையிலும் செயலிலும் செறிந்துவிட்ட ஒரு இலட்சியமாக மாற்றமடைய வேண்டும். அதுவே எமது தேசியம் தொடர்ந்து பேணப்படக் காணப்படும் ஒரு வழிமுறையாகும்.

# இனியுள்ள தேவைகளும்

பொங்கலுக்கான தயாரிப்புக்கள் கோவில் சம்பந்தப்பட்டவர்களிடம் மட்டுமின்றி, முழு வடதமிழீழம் எங்கும் களைகட்ட ஆரம்பித்துவிடும்.

பொங்கலன்றோ–

பொங்கல் செய்வோர், நேர்த்திக்கடன் நிறைவேற்றுவோர், காவடி எடுப்போர், கரகமாடுவோர் என வடபகுதியின் பிரதிபிம்பமே அங்கு கோவில் சுற்றாடலை நிறைத்திருக்கும்.

இது ஒரு மத வைபவம் மட்டுமா?

இல்லை, இல்லவே இல்லை!

மரங்களின் கீழும், பரந்த வயல்வெளிகளிலும் கூடியிருந்து பாய்விரித்துக் கதைத்திருந்து, குதூகலித்து, கடலை சப்பிக் கச்சான் உடைத்துப் பரிமாறி, தூரத்து உறவுகளின் அந்நியோன்னியத்தைக் குடும்பங்கள் குடும்பங்களாக

உறவினால் பிணைத்திருக்கும் ஒரு தெய்வீகம் இங்கே திகழ்கிறது.

முருகபக்தன் முழங்காலில் நிற்கிறார். அம்மன் பக்தை ஆராதனையில் கலந்து கொள்கிறாள்.

பேசாக்குழந்தையைப் பேசவைப்பதற்கு, பருத்தித்துறைப் பெருமகன் ஒருவர் வெள்ளியில் நாக்குச் செய்து கொடுக்கிறார்.

தீராப்பிணியைத் தீர்ப்பதற்காகத் தின்னைவேலித் தியாகராசன் பெற்றபிள்ளையை விற்று வாங்குகிறார்.

மன்னார் மருசலீன் தன் எண்ணம் ஈடேற ஆளுயர மெழுகுதிரி கொழுத்தி அன்னையைத் தொழுகிறார்.

மன்னார் மாவட்டத்தில் ஏனைய வடதமிழீழ மக்களைக் கொண்டுவரும்

வத்தல்கள் என அன்பளிப்புக்களோடு புறப்படுவதும் எமது பாரம்பரிய பண்பாட்டு வழக்கங்கள்.

கதிர்காமத்திற்குக் கால்நடையாகச் செல்லும் பக்தர்கள், கந்தரோடை அங்கணக்கடவையில் இருந்து புறப்பட்டு, வற்றாப்பளை அம்மன் பொங்கலில் பங்குகொண்டு, பின்பே அங்கிருந்து புறப்படுவர். அன்றைய கதிர்காமக் கரைப்பாதை, அடர்ந்த காடுகளும் ஆபத்தும் நிறைந்ததாகையால் வற்றாப்பளையில் வைத்து உறவினர்கள் பிரியாவிடை கொடுப்பதும், அழுவதும், ஏக்கம் நிறைந்த விழிகளுடன்

தோற்றம், உபஉணவு உற்பத்திக்கான கதவுகளை வன்னியிலும் திறக்க குடாநாட்டின் இளைஞர்கள், விவசாயிகள் பலர் வன்னியை நோக்கி இடம் பெயருகின்றனர். இதனால் பெற்றோர் இங்கும். பிள்ளைகள் அங்குமாக நிலப்பரப்புக்கான தூரங்கள் மனோரீதியாகவும், உறவுகளாலும் மிகமிக நெருங்கிவிட்டன. குடாநாட்டில் தங்கையின் மகள் பூப்பெய்தினால், தலைக்கு நீர்வார்க்க வன்னியில் இருந்து அண்ணன் வருமளவிற்குத் தொடர்புகள்

தொடர்ச்சி 16 ம் பக்கம்...

# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## நெதர்லாந்தில் மாவீரர் நாள் 1996

நெதர்லாந்தில் உள்ள டென்காக் (Den Haag) நகரில் "Grole Kerk" மண்டபத்தில் 07-12-97 அன்று மாவீரர் நினைவு நாள் நடைபெற்றது. தேசிய மாவீரர்களுக்கும், இறந்த பொது மக்களுக்குமான அமைதி வணக்கத்துடன், மண்டபத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் உருவச் சமாதிக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வேக் கிளைப் பிரதிநிதி திரு. சர்வே அவர்களும், நெதர்லாந்துக் கிளைப் பிரதிநிதி திரு. அருமைநாயகம் அவர்களும் மெழுகுவர்த்தியினை ஏற்றி வைக்க, தொடர்ந்து பொதுமக்களும் மெழுவர்த்தியை ஏற்றி அஞ்சலி செய்தனர். வரவேற்புரையைத் தமிழில் திரு. அருமைநாயகம் அவர்களும், நெதர்லாந்து மொழியில் செல்வி. மதிவதனி இராமச்சந்திரன் அவர்களும் வழங்கினர். உரையை அடுத்து, தேசியத் தலைவரின் 1996 ஆண்டு மாவீரர் நாள் உரை ஒலி நாடாவில் ஒலி பரப்பப்பட்டது. அடுத்த நிகழ்ச்சியாக, நெதர்லாந்துப் பெண்மணியான திருமதி. காரன் வெசாட்டன் போப் அவர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களைத் தனது உரையில் எடுத்துரைக்க, அவ்வுரை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனையடுத்ததாக இடம்பெற்ற, பேவர்வைக் (Beverwijk) சேர்ந்த சுகுமார் மதன் என்ற சிறுவன், தனது மழலை மொழியில் ஆற்றிய உரை அனைவரினதும் பாராட்டைப் பெற்றது. தொடர் நிகழ்வுகளாக நாட்டிய நடனங்கள் மேடையேறின. டென்காக்கைச் சேர்ந்த செல்வி. பிரியதர்சினி "மாவீரர் யாரோ என்றால் ...." என்ற பாடலுக்கும், செல்வி சௌமி ஈஸ்வரன் "நள்ளிரவு வேளையில் நாத மணி....." என்ற பாடலுக்கும், திருமதி கௌரிதாசின் மாணவர்களான செல்விகள் ஸ்சுவாதி கௌரிதாஸ், அபிராமி கௌரிதாஸ், நிலானி சிவக்குமார், றஜித்தா ரவிக்குமார், செல்வன் கீர்த்தன் முரளி, செல்வன் சதீஸ் முரளி ஆகியோர் "கிழக்கு வானம் சிவந்தது......" எனும் பாடலுக்கு தீபாஞ்சலி நடனத்தையும், "புறம் ஒன்று தினம் பாடும்...." எனும் பாடலுக்கு செல்விகள் நிலானி சிவக்குமார், றஜித்தா ரவிக்குமார், அபிராமி கௌரிதாஸ், செல்வன் சதீஸ் முரளி ஆகியோரும், சிற்றாட் (Sittard)டைச் சேர்ந்த நடன ஆசிரியை திருமதி. ஜெயந்தி யோகராசா அவர்களின் மாணவி செல்வி. யாழினி அன்ரனி "புள்ளி மயில் ஆடுது பார்...." எனும் பாடலுக்கு நாட்டிய நடனத்தையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

அடுத்ததாக, "மரணத்துள் தொடரும் வாழ்வு" எனும் கவிதைப் போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள், வெற்றி பெற்ற தங்கள் கவிதைகளை வாசித்தனர். இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் முறையே செல்வி. றமீலா தாசியூஸ் (Zeist), திரு. அகிலன், திரு. சுகுமார் (Ilemskerk) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, எம்மண்ணின் நிகழ்வுகளையும் அந்நிய மண்ணில் வாழ்பவர்கள் எம் போராட்டத்துக்குச் செய்ய வேண்டிய நிதி உதவிகளையும் விளக்கி, "கவிதா நிகழ்வு" பெண்களால் நடத்தப்பட்டது. திருமதிகளான சிந்து ரவீந்திரன், ஜீவா தயாபரன், கமலராணி இராமநாதன் ஆகியோரும் செல்வி. மதிவதனி இராமச்சந்திரனும் இக்கவிதா நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வே கிளைப் பிரதிநிதி திரு. சர்வே அவர்கள் சிறப்புரை வழங்கினார். தொடர்ந்து, தமிழீழ விடுதலைப்புலிகளின் நெதர்லாந்துக் கிளை நிதிப் பொறுப்பாளர், புலம் பெயர் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக எம் தாய்நாட்டிற்குச் செய்ய வேண்டிய உதவிகளைக் குறிப்பிட்டுப் உரையாற்றினார்.

இடைவேளையைத் தொடர்ந்து, தமிழர் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரால் நெறிப்படுத்தப்பட்டு, அக் கலைஞர்களால் நடிக்கப்பட்ட



"குடி நிலம்" எனும் நாடகம் மேடை ஏற்றப்பட்டது.

நாடகத்தைத் அடுத்து, 1996 இல் நடாத்தப்பட்ட மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட, மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கான வெற்றிக் கிண்ணங்களையும் "மரணத்துள் தொடரும் வாழ்வு" என்ற கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூவருக்குமான பரிசில்களையும் நெதர்லாந்துக் கிளைப்பிரதிநிதி திரு. அருமைநாயகம் அவர்கள் வழங்கினார். இறுதி நிகழ்ச்சியாக, தமிழர் கலை பண்பாட்டுக் கலைஞர்கள் எழுச்சி இசை நிகழ்ச்சியினை வழங்கினர். இவ் இசை நிகழ்ச்சியில், "உலகத் தமிழினமே எண்ணிப் பார்...", "ஈழத் தமிழா இனியும் உறங்காதே...", "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது..." எனும் பாடல்களைக் கலைஞர்கள், மக்களுக்கிடையே வந்து நின்று பாடியது மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது.✷

### சுவிசில்
## கேணல் கிட்டு ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

கடந்த 22.12.96 அன்று சுவிசின் சூரிச் நகரில் முதன் முறையாக விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையினர், சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட ஒன்றியத்தின் ஆதரவுடன் கேணல் கிட்டு உட்பட ஒன்பது போராளிகளின் ஞாபகார்த்தமாக, சுவிஸ் நாடு தழுவிய உள்ளரங்கு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை மிகச்சிறப்பான முறையில் நடாத்தி முடித்தனர்.

காலை 8.00 மணியளவில் தமிழீழத் தேசிய கீதமிசைக்க, தமிழீழத் தேசியக் கொடியை திரு. நடராஜா முரளிதரனும், சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட ஒன்றியக் கொடியை அதன் உறுப்பினர் திரு. ஜீவாவும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஒரு மணித்துளி நேரம் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு களமாட இருந்த அணிகளை திரு. நடராஜா முரளிதரன் வரவேற்று போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

ஆறு பேர் கொண்ட மொத்தம் இருபத்தியிரண்டு கழகங்கள் சுவிசின் பல பாகங்களிலிருந்தும் இப்போட்டியில் பங்குபற்றியதுடன் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதித் தேர்விற்கு முன்னர் ஒவ்வொரு கழகங்களும் பதின்நான்கு நிமிடங்கள் விளையாடின. அதன் பின்னர் இறுதித் தேர்விற்காக பேர்ன் றோயல் விளையாட்டுக் கழகமும், பாசல் நீலப் பறவைகள் விளையாட்டுக் கழகமும் இருபது நிமிடங்கள் மிக விறுவிறுப்பாக விளையாடி பேர்ண் றோயல் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இச்சுற்றுப் போட்டிகளில் முதலாவது இடத்தை பேர்ண் றோயல் விளையாட்டுக் கழகமும், இரண்டாவது இடத்தை பாசல் நீலப்பறவைகள் விளையாட்டுக் கழகமும், மூன்றாவது இடத்தை லுசேர்ண் இளம் பறவைகள் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

சிறந்த விளையாட்டு வீரராக பாசல் நீலப்பறவைகள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. .மில்லரும், சிறந்த பந்துக் காப்பாளராக பேர்ண் றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. சந்திரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் 11.01.07 அன்று சூரிச் நகரில் நடைபெற்ற கேணல் கிட்டு ஞாபகார்த்த எழுச்சி விழாவில் வழங்கப்பட்டன.

மாலை ஏழு மணியளவில் போட்டிகளை நிறைவு செய்து நன்றியுரை நிகழ்த்திய திரு. நடராஜா முரளிதரன், போட்டியில் பங்கு பற்றிய கழகங்களுக்கும், வீரர்களுக்கும் மற்றும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட தேசபக்த மக்களுக்கும் தமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, அன்றைய போட்டிகளை சிறப்பாக நடாத்தி முடிப்பதற்கு தமது முழுமனதோடு ஆதரவளித்த சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட ஒன்றியத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்தார். அத்தோடு, சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட ஒன்றியம் கடந்த காலங்களில் வலுவிளந்து காணப்படுவதாகவும் இனிவரும் காலங்களில் இவ் ஒன்றியத்திற்கு அனைத்து விளையாட்டுக் கழகங்களும், வீரர்களும் ஒத்துழைத்து அதை மேலும் வலுவுள்ளதாக மேம்படுத்தி, அதனூடாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடாத்துவது மிகச் சிறப்பாக விருக்கும் என்றும் கேட்டுக் கொண்டார். ✷



மெல்பேர்ண், அவுஸ்திரேலியாவில் மாவீரர் நாள் 96 நிகழ்வின் போது, "ஓயாத அலைகள்" மூலம் கைப்பற்றப்பட்ட முல்லைத்தீவு இராணுவ முகாமின் மாதிரி அமைப்பை மக்கள் பார்வையிடும் காட்சி.

### இலண்டனில் மாவீரர் நாள் – 1996
## "துன்பப்படும் எம்மக்களுக்கு, சர்வதேச சமூகத்தின் மனிதாபிமான உதவிகள் நேரடியாகக் கிடைக்க வற்புறுத்த வேண்டும்.

சிறிலங்காவின் சிங்கள இனவாத அரசின் அடக்குமுறைக்குள் துயருறும் எம்மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை நேரடியாக வழங்குவதும், அந்த மக்களின் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரித்தல் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டதால், இவற்றைச் செயல்படுத்துமாறு புலம் பெயர் வாழ் தமிழீழ மக்கள், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையையும் அரச சார்பற்ற சர்வதேச அமைப்புக்களையும் வற்புறுத்த வேண்டும்" என, கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி லண்டனில் உள்ள Chalk Farm என்னும் இடத்தில் அமைந்துள்ள Round House மண்டபத்தில் நடந்தேறிய மாவீரர் நாள் வைபவத்தில் பிரித்தானியாவின் பல பாகங்களிலிருந்து உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள், வேற்று நாட்டு விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் – ஆதரவாளர்கள் மத்தியில் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியாக் கிளைப் பிரதிநிதி திரு. சாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்.

"நாம் இன்று ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு இருக்கின்றோம். இந்நாள் நமக்காக, தம்மையே தந்த மகத்தான மனிதர்களை, வீரத்தால் சாவையும் வென்றிட்ட வீரவேங்கைகளை, காலத்தால் அழிக்கப்பட முடியாத தமிழீழ தேசத்து வரலாற்றில் வாழப்பிறந்து விட்ட மரணமில்லா மனிதர்களை, எங்கள் வாழ்வுக்காய்

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

# சர்வதேச அரங்கில் தமிழர் விடுதலைப் போராட்டம்!

## சிறிலங்கா அரசின் அழுத்தங்களை மீறி பரந்து விரியும் விடுதலை உணர்வு

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைகளும், சிறிலங்கா அரசின் இன ஒடுக்குமுறைப் போக்கும் சர்வதேச அரங்கில் புதியதொரு அவதானிப்பை ஏற்படுத்தும் காலகட்டம் உருவாகியிருக்கிறது.

அண்மைக்காலமாக மேற்குலக அரசுகள் வெளியிட்டுவரும் அறிக்கைகளும், சர்வதேச நிறுவனங்களதும், தொண்டர் அமைப்புகளது கருத்துக்களும் – தனிபட்ட ரீதியில் வெளியுலக அரசியல் வாதிகள், சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் தரும் வகையில் பேசி வருவதும் – இந்த அவதானிப்பை உறுதி செய்கின்றன.

தமிழரது விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாத நடவடிக்கைகளாகவும், விடுதலைக்காகப் போராடும் புலிகளை பயங்கரவாத அமைப்பாகவும் சித்திரிக்க முற்பட்ட சிறிலங்கா அரசின் –. அரசியல் ரீதியான, ராஜதந்திர வகையிலான முயற்சிகள் அவற்றின் இலக்கினை எட்டத் தவறிய மையும் இதற்கு முக்கிய காரணமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் சிறிலங்கா வெளியுலகில் மேற்கொள்ளும் முயற்சிகளை நோக்கும் போது அது தனது முழுமையான தீவிரத்தை அம் முயற்சிகளில் ஈடுபடுத்தியதை – ஈடுபடுத்தி வருவதை தெளிவாக உணர முடியும்.

சிறிலங்காவின் ஜனாதிபதி முதல் வெளியுறவு அமைச்சர், தூதரகங்கள் எனப் பூரணமான அரச பலம் இவற்றில் இறக்கிவிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி மேற்கொள்ளும் வெளிநாட்டு விஜயங்களில் – அந்தந்த நாடுகளின் அரசுத் தலைவர்களை சந்திக்கும் உத்தியோகபூர்வ வைபவங்களில் கூட இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்களில், புலிகளின் செயற் பாடுகளைத் தடுக்குமாறு கோரும் விடயம் முக்கியமான இடத்தைப் பெறுவதாகவும் மாறிவிட்டது.

இவரைவிட ஒரு படி அதிகம் எனக் கூறத்தக்கதாக – சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் செயற்பட்டு வருகின்றார்.

சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சும் தனது எல்லாப் பணிகளையும் ஒதுக்கிவிட்டு, புலிகள் எதிர்ப்பு நடவடிக்கையை அவசியப் பணியாக முடுக்கி விட்டிருக்கிறது.

இதேவேளை, வெளிநாடுகளின் தலைநகரங்களிலுள்ள சிறிலங்காத் தூதரகங்களும், உயர்ஸ்தானிகராலயங்களும் – தினத்துகொரு அறிக்கையை வெளியிட்டுத் தமது 'கடமை'யைச் செவ்வனே செய்கின்றன.

ஆனால், இத்தகைய நடவடிக்கைகள் எந்தளவிற்கு வெற்றியைத் தந்திருக்கின்றன என்பது பெரும் கேள்விக் குறியானதே என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் ஏகோபித்த ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருப்பதனாலும், வெளியுலகில் புலிகளது செயற்பாடுகள் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருப்பதனாலும் சிறிலங்கா அரசின் முயற்சிகள் எதிர்பார்த்த வரவேற்புக் கிட்டாமல் போய்விடுவதாக அவ் அவதானிகள் மேலும் கூறுகின்றனர்.

*ஓர் அரசு என்ற ரீதியில் வலுமிக்கதான சிறிலங்காவின் செயற்பாடுகளை எதிர் கொள்வதென்பது சர்வதேச ரீதியில் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடிய விடயமல்ல என்பதும் இங்கு கவனிக் கத்தக்கது.*

இத்தகைய சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் – தமிழீழ விடுதலைப் போரின் நியாயத்தன்மையை சர்வதேசத்திற்கு உணர வைக்கும் விடுதலைப் புலிகளின் நுட்பமான பிரசார யுக்திகள் பற்றி இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

*அரசியல் மற்றும் ராஜதந்திர ரீதியில் ஓர் அரசுக்குள்ள வாய்ப்புக்களையும் சாதகத்தையும் ஈடுகொடுத்து - புலிகள் மேற் கொள்ளும் காய் நகர்த்தல்கள் பலரிடமும் வியப்பை ஏற்படுத்தியுள்ளன.*




போராட்டத்தையும், புலிகளையும் சர்வதேசத்திலிருந்து அந்நியப்படுத்த சிறிலங்கா அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் – ஒருவகையில் புலிகளின் சக்தியையும், போராட்டத்தின் தாற்பரியத்தையும் வெளியுலகிற்கு கொண்டுவர உதவியிருக்கிறது என்பதும் குறிப்பிடத் தக்கதொரு விடயமாகும்.

தமிழீழப் போராட்டத்தை ஓர் உள்நாட்டுப் பிரச்சினையென அடிக்கடி வலியுறுத்திக் கூறிவரும் சிறிலங்கா அரசு – இந்த உள் நாட்டுப் பிரச்சினையை வெளி நாடுகளில் வைத்து முக்கியத்துவம் மிக்க பிரச்சினையாக விவாதிக்கும் வேடிக்கையும் இவ்வாறே நடைபெறுகிறது.

ஒருபுறத்தில் இவ்வாறு நிலைமை இருக்க, மறுபுறத்தில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடமும் போராட்டம் பற்றிய புதிய உத்வேகம் எடுத்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

*தமிழீழத்தில் - சிறிலங்கா அரசு புரிந்துவரும் கண்மூடித்தனமான இன அழிப்பை வெளிக்கொண்டு வருவதில் இன்று உலகத் தமிழர்கள் தீவிரமாகச் செயற்பட்டும் வருகின்றனர்.*

இத்தகைய நிலைப்பாடானது – தனியே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் மட்டுமல்லாது, சர்வதேசத்திலும் தகுதி பெற்ற அறிஞர்கள், கல்வியியலாளர்கள், விடுதலை விரும்பிகள் மத்தியிலும் தோன்றி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

***ஒட்டுமொத்தத்தில் - வெளியுலகில் தோன்றி வரும் இந்த மாற்றம், விடுதலைப் போரிற்கான உத் வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.*** ◆

எழுதியவர்: பிரசாந்தி

# வில்லுக்குளத்துப் பறவை ....

அக்காவைச் சிங்களப்படைகள் வெறிகொண்டு தேடின. அப்போது சிலகாலம் மறைவாக அவள் வாழநேர்ந்தது. "உன்னுடைய பிள்ளையளுக்காக நீ மறைந்து வாழத்தான் வேண்டும்" என்று யாரோ அவளுக்கு அறிவுரை சொன்ன போது, அக்கா திருப்பிக் கூறினாளாம் – "பெற்ற பிள்ளைகளுக்காக மட்டுமல்ல – மற்றப் பிள்ளைகளுக்காகவும் தான் நான் தலைமறைவாகிறேன்."

ராஜீவ் – ஜே-ஆர் உடன்படிக்கையைத் தொடர்ந்து, சறோ அக்கா வெளிச்ச த்துக்கு வந்தாள். விடுதலைப் புலிகளின் மேடைகளில் மக்கள் அவளைப் பார்த்தார்கள். திலீபனின் இரங்கல் கூட்டங்களில் அவள் குரல் இடியாய் முழங்கியது.

அக்கா இந்தியப் படைக்கும் 'றோ' வின் கைக் கூலிகளுக்கும் அடிவயிற்றில் நெருப்பானாள்.

13.07.89 தான் அந்த நாள். காலையில் படுக்கை விட்டெழுந்ததும் சறோ அக்கா வழமைபோல் சுறுசுறுப்பானாள்.

எத்தனை துன்பங்கள்.87 ஒக்ரோபர் 10இல் இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் தொடங்கிய நாளிலிருந்து இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் அவளை இந்தியப்படை வெறியர்கள் முகாமுக்குக் கொண்டுபோய், என்ன பாடெல்லாம் படுத்திவிட்டார்கள்.

அக்கா நெருப்பில் நனைந்து நிற்கிறாள். எப்போதும் போல அடுப்பில் தேநீர்ப் பானை கொதிக்கிறது.

மனைவியின் துன்பங்கள் – அவளுக்கு ஏற்பட்ட கொடுமைகள் – எல்லாவற்றையுமே அமைதியோடு தாங்கிக் கொண்ட கணவனுக்கு ஆசையோடு தேநீர் போட்டுக் கொடுத்துவிட்டு, ஐந்தாவது பெண் மனாவைக் கூப்பிட்டு மடியில் வைத்துக் கொஞ்சினாள் அக்கா.

மனாதான் அக்காவுக்குச் செல்லப் பெண். நடுப்பகல் ஆயிற்று. சாப்பிட உட்கார்ந்த அக்கா சொன்னாள் – "காட்டிலையும் மேட்டிலையும் பிள்ளையள் என்ன பாடு படுகுதோ....?

எப்போதும் அக்காவுக்குப் புலிகளின் நினைவு தான். விடுதலைப் புலி லிங்கம் அடிக்கடி அக்கா வீட்டுக்கு வந்து போவான். அண்மையில்தான் இந்தியப் படையின் கைக்கூலிகள் அவனைப் பிணமாகப் போட்டார்கள். புலிகளின் மருத்துவப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவன் லிங்கம். அவன் அக்காவிடம் எப்போதும் சொல்லுவான் "கண்ட கண்ட ஆட்களை யெல்லாம் வீட்டுக்குள்ள எடுக்காத அக்கா.... யார் நல்லவன் – யார் கள்ளன் என்று கண்டு பிடிக்க முடியாத காலம்.

உண்மைதான்.... அக்காவின் வீட்டில் – நன்றாகப் பழகி சோறுண்டு சென்ற வர்களில் – இந்தியப் படையின் கையாட்களும் இருக்கவே செய்தார்கள்.

துரோகம் எங்குதான் இல்லை? விடுதலைப் புலிகளின் பெரிய உயிரிழப் புக்களையும் – வீரத்தையும் கண்முன் கண்டும் அவர்களைக் காட்டிக் கொடுக்கும் தலையாட்டிகள் எத்தனை பேர்....?

கொடிய உலகம்.... கொடிய மனிதர்கள்.... பின்னேரம் அக்கா அழகான அந்த வில்லுக் குளத்துக்குக் குளிக்கப் போனாள்.... பச்சைப் புற்கள்.... 'தளதள' என்ற தண்ணீர்.... கொக்குகள்.... மீன்....

ஒரு தொல்லையுமில்லாமல் – முழு விடுதலையைச் சுவைத்தபடி – வெள்ளைச் சிறகை நீள விரித்து – வானத்தில் பறந்த பறவையை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே இருந்தாள் அக்கா

இரவு ஆயிற்று. ஓ....! அந்த இரவு கொடியது. 7 மணி இருக்கும். சாவு அக்காவின் படலையைத் தட்டிய முரட்டுத் தனமான மணித்துளிகள்.

மனா, அம்மாவின் சேலையைப் பிடித்துக் கொண்டிருந்தவள் பதற்றத்தோடு கடப்படியைப் பார்த்தாள்.... இருளில் ஆட்களின் முகம் தெரியவில்லை.... ஆனால்.... நான்கைந்து பேர்.

"வெளியே வா....!" யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள். சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள். "ஐயோ எண்ட பிள்ளைகளே....!" என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள்.... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்....

ஒருவன் அக்காவின் கையை முரட்டுத் தனமாகப் பிடித்து – தெருவில் 'கொறகொற' என்று இழுத்தான். பதறி அடித்துக் கொண்டு தெருவுக்கு ஓடிவந்த பிள்ளைகளையும் கணவனையும்.... "யாரும் வெளியே வரக்கூடாது – தெரியுதா?" என்று ஒரு தடித்த குரல் எச்சரித்தது.

"ஐயோ.... மனா மனா...." என்று ஏங்கிக் கத்தினாள் அக்கா ஊர் மூலையில் நாய்களின் ஊளை....

அக்காவின் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளினாற் போல – அதே தெருவில் – அவள் உடலின்மீது கத்தி வீசப்பட்டது.

"நீயாடா பாவி....?" என்று அக்கா கூச்சலிட்டதைத் தெருவில் நின்றவர்கள் கேட்டார்கள். அறிமுகமானவர்களுக்கு அவன் முகம் கூடத் தெரிந்தது.

இந்தியப் படையின் அந்தக் கைக்கூலியை கூனித்தீவு முன்பே அறியும். அக்கா வீட்டுச் சோறுகூட அவன் உடலில் தசையாய்.... செந்நீராய்....

கத்திகளாலும், கோடரியாலும் அக்கா மாறிமாறி விறகுக் கட்டைபோல் பிளக்கப்பட்டாள்.

நொடிப் பொழுதில் – அந்தத் தாய் ஓவியம் தெருவில் கிழிந்து கிடந்தது.

அக்கா போய்விட்டாள்! ★

# போர்க்களத்தில் வீரன், பொதுமக்கள் தோழன் ...

மிப்புச் சிங்களப் படை. இது இரண்டுக்குமிடையிலான தர்மப் போரில் ஓரணியில்தான் எத் தமிழனாலும் பங்காற்ற முடியும் என்ற ஆழமான தத்துவத்தை மக்கள் சிந்தனை யாக்கி, ஒரே தேச இனமாக தமிழீழ மக்கள் தேசமெங்கும் வாழ வைத்த சிந்தனையாளன் மாவீரர் கேணல் கிட்டு.

இது விடுதலைப் புலிகள் நடாத்தும் போராட்டம் அல்ல. தமிழீழ மக்கள் நாளும் பொழுதும் வாழ்வதற்காக – தேசமாக எழுந்து, "தேகம் சிதைந்தாலும் வேகம் குறையோம்" எனும் அசைக்க முடியாத மன உறுதியுடன் நடாத்தும் தேசிய விடுதலைப் போராட்டமே, தமிழீழத் தேசிய விடுதலைப் போர். இதில் ஒவ்வொரு தமிழனும், பாகுபாடின்றி எவ்வித முரண்பாடுமின்றி சகல விடயங் களுக்கும் அப்பாற்பட்ட வகையில் தமது மேலான பணிவையும் பணியையும், தமிழீழத் தேசியத் தலைவ ருக்கு விசுவாசமாகவும் – தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு மனச்சுத்தியுடனும் நல்குதல் வேண்டு மென்பதே மாவீரர் கேணல் கிட்டுவின் இதய வேண்டுகோள்.

மாவீரர் கேணல் கிட்டுவின் நெஞ்சில் "தமிழ் மக்கள் அனைவரும் நெஞ்சமற நிறைந்து வாழ்ந்தனர். அவர் மக்களை நேசித்த மாமனிதர்" இதற்கு ஓர் சிறு உதாரணம்: ஒருமுறை வெளிநாட்டுக் கிளையொன்றில் பணியாற்றும் தொண்டர் ஒருவர், **"பேப்பர் கொண்டு போனால் சனமொண்டும் பேப்பர் வாங்குதில்லை. ஆனால் அவையளின்ரை வீடுகளில, ரீ.வி யென்ன,** ரேடியோ என்ன, வீட்டுச் சாமான் எல்லாம் குவிஞ்சு போய் கிடக்கு" என்று கிட்டண்ணாவிடம் மக்களைக் குறை சொல்வதுபோல் கூறினார். அடுத்த கணம் கிட்டண்ணாவின் முகம் இறுகியது. அது கோபத்தின் அறிகுறி. *"இஞ்ச பார், இவ்வளவு சமான்களையும் எங்கட சனங்கள் வைச்சு அனுபவக்கினம் என்டதை நினைச்சு சந்தோசப்பட வேணும்"* என்று கோபமாகக் கூறியவர், *"ஒருநாளும் எங்கட சனங்களைப் பேசக் கூடாது. நீ உன்ர திறமையைக் காட்டிப் பேப்பரை விற்கப் பார். அதற்காக சனத்தை குறை சொல்லாதை"* என்றார்.

அவ்வாறே *'செய்திக் கதிராக'* இருந்து வந்த பத்திரிகை, *'களத்தில்'* எனப் பெயர் கொண்டு இலண்டனில் இருந்து வெளிவரத் தொடங்கிய காலத்தில் கிட்டண்ணா கூறிய வார்த்தை –

*"இது தமிழ் மக்களின் தேசியப் பத்திரிகை. தமிழீழ மக்களின் பத்திரிகை. நாம் விடுதலைப் புலிகளுக் காகப் போராடவில்லை. தமிழ் மக்களின் விடுதலைக் காய் தான் போராடுகிறோம்".* இவ்வாறாக, முழுத் தமிழ்ச் சமுதாயத்தையும் நேசித்த நெஞ்சம் மாவீரர் கேணல் கிட்டு.

மாவீரர் கேணல் கிட்டு, தாயகத்தில் இருந்து வெளிவரும் *'ஈழநாதம்'* பத்திரிகையில், "நாம் இதுவரை பல வீரர்களைப் போரில் இழந்துவிட்டோம். இத்தனை இழப்புக்களுக்குப் பின்னரும் சுதந்திர தமிழீழம் என்ற எமது உயிருக்குமிரான நோக்கத்திலிருந்து நாம் அணு வளவேனும் விட்டுக் கொடுத்ததில்லை – விட்டுக் கொடுக்கப் போவதும் இல்லை. எமக்குத் தமிழ் மக்கள் தமிழீழத்தை மீட்கப் போரிடுமாறு ஆணை வழங்கி யுள்ளனர்.

எமது தலைவர் பிரபாகரன் முதல் – இயக்கத்தின் கடைசிப் போராளி வரை – எம் வாழ்வு நிரந்தரமென்று எண்ணிக் கொண்டு போர்க்களத்தில் குதிக்கவில்லை; எம் வாழ்வு நிச்சயமற்றது... நாம் தமிழீழ நாட்டை மீட்பதற்கு ஆயுதமேந்தியுள்ளோம். மானமுள்ள மக்கள் மாற்றானிடம் ஒருபோதும் சரணாகதியடைய மாட்டார்கள்" எனக் கூறியிருந்தார்.

இந்திய அரசு, கிட்டண்ணாவை சரணடையும்படி கேட்டு, தன்னை தமிழீழ மக்களின் 'மாற்றான்' என்பதை உறுதி செய்த நேரத்தில், வங்கக் கடலில் பூகம்பமாகக் கிட்டண்ணா உட்பட பத்து வேங்கைகளினதும் ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் தேசமே விழித்துக் கொண்டது. தலைவர் பிரபாகரன் கூறியதுபோல்,

*"கிட்டு, நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாக தமிழ் மக்களிடையே பிறந்திருக்கின்றாய்".*

அந்த மூச்சுத் தரும் புதிய சக்தியில் ஒன்றாய், ஓரணியாய் என்றும் எம் பணியைத் தமிழீழத் தேசத்திற்குச் செலுத்தி எம் மக்களின் விடுதலைக்கு நேசமுடன் உழைப்பது ஒன்றே - மாவீரர் கேணல் கிட்டுவுக்கு உன்னதமான வீரவணக்கமாக அமையும்.

- பற்றிமாகரன்

# எங்கள் நினைவுகளும் இனியுள்ள ...

இறுகியுள்ளன. வன்னியில் மழை பொழிந்தால்தான், வடதமிழீழத்தில் வயிறு நிறையும் எனும் அளவிற்கு உணவுற் பத்தியின் கேந்திரமாகிவிட்டது வன்னி. மாடுகள்! மாடுகள்! இவை எங்கே செல்கின்றன?

இந்த நீண்ட கண்டி வீதியில், ஆயிரக்கணக்கில், வெவ் வேறு மரபுக் குறிகள் கொண்ட இவை எங்கே அடையப் போகின்றன? இடைக்காடு, கோப்பாய், வடமராட்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவை அல்லவா இவைகள்!

வன்னியை நோக்கிய இவற்றின் இடப்பெயர்வு, இங்கே பயிர்ச்செய்கை ஆரம்பமாகும் காலத்தில் நடக்கிறது. வன்னியில் விதைப்பு ஆரம்பமாகும் வரை, கரைச்சியில் பரந்த வயல்வெளிகளே இவைகளின் மேய்ச்சல்காடு. மழைக்காலத்தில் திரும்பிவந்து இயக்கச்சியில் வைத்துப் பராமரிக்கப்பட்டு,

மீண்டும் மாரி முடிய சொந்த இடங்களை அடையும். வன்னி இவற்றின் மேய்ச்சல் களமாக இருப்பது மட்டுமின்றி, அங்கிருந்து கொண்டு வரப்படும் வைக்கோல், தவிடு ஆகியனவே தீவனத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மனித உணவுத் தேவை மட்டுமின்றி, கால்நடைகளின் தீவனத்தேவைகூட வன்னி–குடாநாட்டின் உறவுகளிலேயே தங்கியுள்ளது.

இங்கே சில புதிய வாடிகள் தோன்றியிருக்கின்றனவே? லொறிகளில் வள்ளங்கள், அரிசி மூடைகள், வலைகள் தொழிலாளர்கள் எனக் கொண்டுவந்து இறக்கப்படுகிறதே!

சோனகம் பெயர்ந்து விட்டது. மாத்தளன், பொக்கணை கடற்கரைகளில் வாடி அமைத்து மீன்பிடிக்க வல்வெட்டித்துறைச் சம்மாட்டிமார் வந்துவிட்டனர். வாடைக்காற்று வீசத்தொடங்கிவிட்டாலோ மன்னார் "சவுத்பார்" கடற்கரை, கரையூர் மீனவர்களால் நிறைந்து விடும்.

கடற்தொழில் பிணைப்புகள் மட்டுமின்றி, மன்னார் பனங்கட்டி கொட்டுக்கும், கரையூருக்குமிடையே திருமணப்பந்தங்களால் கூட, நெருங்கிய உறவுகள் உண்டு.

குடாநாட்டிற்கான உழவு எருதுகள், சவாரி மாடுகள் ஆகியன கொக்குத்தொடுவாய், மன்னார், நாவற்குளம் ஆகிய இடங்களிலிருந்தே பெறப்படுகின்றன. இந்தப் பட்டிகளின் மாடுகள் சிறந்த தொழில் புரியக்கூடியன வெனவும், இப்பகுதியின் சூழ்நிலைகளுடன் ஒத்துப்போகக் கூடியவை எனவும் கருதப்படுகிறது.

கலை பண்பாட்டு நடவடிக்கைகள், பொருளாதாரம், கல்வி உறவுகள் எனக் குடாநாடும் வன்னியும் பிரிக்கப்பட முடியாது பிணைக்கப்பட்டுள்ளன. இருபகுதிகளுக்கு மிடையிலான தொடர்புகள் காலம் காலமாக உருவாகி வளர்ந்தவை. ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படும் போது, மற்றது முற்றாக வலுவிழந்து நைந்து போகக்கூடிய அளவிற்கு நெருக்கமானவை. வன்னி வயல்வெளிகளில் ஓடி, குடாக்கடலில் வடியும் நீரைப்போன்றே குடாநாட்டின் பனங்கூடல்களைத் தாண்டி வரும் வெள்ளமும் ஆனையிறவுக் கடலிலேயே சங்கமமாகிறது.

ஆனால் இன்று– ஆலய வழிபாடுகளாலும், திருமண உறவுகளாலும் கலைபண்பாட்டு நடவடிக்கைகளாலும், பொருளாதாரத் தொடர்புகளாலும், கல்விப்பிணைப்புக் களாலும் பேணப்பட்ட உறவுகள் கேள்விக்குரியதாகி விட்டன. வயிறு நோக ஆரம்பிக்க வன்னியில் காரில் ஏற்றப்பட்ட கர்ப்பிணி, யாழ். பெரியாஸ்பத்திரியில் கொண்டு வந்து பிள்ளைபெறும் நிலைமாறி, வாரக்கணக்கில் காத்திருந்தும் வந்துசேரமுடியாத நிலையும், சுகதேகியாய் வரும் ஒருவரே நோயாளியாய் வருவாரோ, பிணமாய் வருவாரோ என்று அஞ்சி ஏங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

குடிபெயர்ந்துவரும் கூழைக்கிடாக்களும், பரந்த கடல்வெளியெங்கும் பறந்து திரியும் பறவை இனங்களுமாகக் காட்சியளித்த கொம்படிக் கடல் நீரேரியும் இறாலும், கொய்யும் விளைந்து கிடக்கும் ஆனையிறவுக் கடலும், திரளியும், காரலும், நண்டும் திரிந்து விளையாடும் கிளாலி நீர்ப்பரப்பும் எதிரியின் ஆக்கிர மிப்புக்கரங்களால் கவியப்பட்டு விட்டன. குடாநாடு ஒரு திறந்தவெளிச் சிறையாக மாற்றப்பட்டு விட்டது. இன்று பீரங்கிப்படகுகள்கக்கும் மரணதூதுவர்களுக் கிடையி லேயே, உயிருக்கே உத்தரவா தமற்ற நிலையிலேயே குடாநாட்டிற்கும், வன்னிக்கு மிடையிலேயே பயணம் செய்யவேண்டியுள்ளது. தந்தை இறந்தால் கொள்ள வைக்க பிள்ளைவரமுடியாதநிலை. ஆலய வழிபாடுகளும், நேர்த்திக்கடன்களும், உறவுபேணலும், கலைபண்பாட்டுத் தொடர்புகளும் அற்றுப்போகும் நிர்ப்பந்தம். வன்னியில் உற்பத்தியான நெல்லை விற்கமுடியாத நிலை. குடா நாட்டில் அரிசிக்கு ஆலாய்ப் பறக்கும் கொடுமை. வன்னியிலோ கல்வி நலிந்து செல்லும் நிலை. மக்கள் தேவைகளுக்கான அலுவல்களில் ஈடாட்டம்.

தேசத்தைக் குறுக்கறுத்து விரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்பு, காலங்காலமாக நிலைத்திருந்த எமது இழைகளை அறுக்கிறது.

தேசம் துண்டுதுண்டாக, எமது கலை பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பிறழ்ச்சியடைய வேண்டிய அபாயத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது வெறும் அரிசி, மாப்பிரச்சனை அல்ல! தமிழீழ தேசத்தின் வேர்களையே தாக்கும் பிரச்சனை. தொடர்புகள் துண்டிக்கப்படுவதன் விளைவு, எமது அடிப்படைகளையே அசைய வைக்கும் வல்லமை கொண்டது என்பதைக் கணக்கில் எடுக்க வேண்டும்.

பச்சிலைப்பள்ளியார் இல்லாத புளியம் பொக்காணைப் பொங்கலும், குடாநாட்டினர் செல்லாத மடுத்திருநாளும், யாழ்ப்பாணத்தார் இல்லாத வற்றாப்பளை அம்மன் விழாவும் எத்தனை வெறுமையானது.

வன்னியின் நெல்லும், நெய்யும், தேனும் இல்லாத யாழ்ப்பாணம் எத்தனை அரைகுறையானது. குடாநாட்டுத் தொடர்பற்ற வன்னியின் கல்வி எவ்வளவு பற்றாக்குறையானது! யாழ்ப்பாணத்து நாதஸ்வரக்கச்சேரி இல்லாத- தான் தோன்றீஸ்வரர் கோவில் திருவிழாவும், வன்னிமண்ணின் நாட்டார் பாடல்கள் இல்லாத குடாநாட்டு மேடைகளும் திருப்திகரமானவையா?

பாதையை மறைத்திருக்கும் பகைவன் அகற்றப்பட வேண்டும். அங்கும் இங்கும் ஏரிப்பரப்பில் அலைந்து திரியும் பீரங்கிப்படகுகள் நொருக்கப்படவேண்டும். எமது தொடர்புகள் மீண்டும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

இது–

தமிழீழத்தின் தேவை: தமிழீழ தேசியத்தின் தேவை: தமிழீழம் வாழ் ஒவ்வொரு தனிமனிதனதும் தேவை.

பாதை திறக்கப்படுவதை நோக்கி, தடைகள் உடைக்கப்படுவதை நோக்கி ஒவ்வொரு தமிழரும் தமது நினைவுகளைத் திருப்ப வேண்டும். செயல் முறை களை நகர்த்த வேண்டும்.

இது ஒரு தேசம் பரந்த எழுச்சியாக, ஒவ் வொருவரினதும் சிந்தனையிலும் செயலிலும் செறிந்து விட்ட ஒரு இலட்சியமாக மாற்றமடைய வேண்டும். அதுவே எமது தேசியம் தொடர்ந்து பேணப்படக் காணப்படும் ஒரு வழிமுறையாகும்.

பாதை திறப்பதென்பது, இன்னமும் அந்நியன் கடலே ரிக்கரையில் குந்தியிருக்க வரிசையில் நின்று,

வெயிலில் கருகி, அடிகளையும் உதைகளையும் வசவுகளையும் வாங்கிக்கட்டி, கூனிக்குறுகிப்போகும் வழிமுறையல்ல.

எங்கள் உறவுகளுக்கும் தொடர்புகளுக்கும் இடைநடுவே சூரைப்பற்றையாக நிற்கும் படைமுகாம்கள் துடைத் தெறியப்பட வேண்டும். எங்கள் பாதையில் நாங்களாக நெஞ்சை நிமிர்த்தி அச்சமின்றி உலவும் நிலை வரவேண்டும்.

நன்றி - வெளிச்சம்

*எங்கள் உறவுகளுக்கும் தொடர்புகளுக்கும் இடைநடுவே சூரைப்பற்றையாக நிற்கும் படைமுகாம்கள் துடைத்தெறியப்படவேண்டும். எங்கள் பாதையில் நாங்களாக நெஞ்சை நிமிர்த்தி அச்சமின்றி உலவும் நிலை வரவேண்டும்.*

# செச்சினிய மக்கள் யெல்சினுக்கு படிப்பித்த பாடத்தை தமிழ் மக்கள் சந்திரிகாவிற்குப் படிப்பிப்பார்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் புகழ் மணக்கும் இருபது ஆண்டு வரலாற்றில் ஒரு அத்தியாயம் – வேங்கைகளின் செந்நீரால் எழுதப்படுகின்ற அத்தியாயம் – முடிவுக்கு வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்று மே மாதம் 5ஆம் திகதி 1996ஆம் ஆண்டுடன் இருபது ஆண்டுகள் நிறைவெய்தியது.

1972ல் **புதிய தமிழ்ப் புலிகள்** என்ற பெயரோடு தோற்றம் கண்ட அமைப்பு, 1976இல் **தமிழீழ விடுதலைப் புலிகள்** என்ற பெயரினைச் சூடிக்கொண்டது.

அன்று முதல் இன்றுவரை தமிழீழ விடுதலைக்கான போரை முன்னெடுப்பதில் விடுதலைப்புலிகள் தீரத்தோடும், அசைக்க முடியாத நம்பிக்கையோடும் – மனவுறுதியோடும், மனச் சுத்தியோடும் போராடி வருகிறார்கள்.

தமிழீழத்தை அந்நிய சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து முற்றாக விடுவிப்பதில் அளப்பரிய தற்கொடையை விடுதலைப்புலிகள் செய்திருக்கிறார்கள் – செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான வேங்கைகள் விடுதலைக்கான வேள்வித்தீயில் ஆகுதியாகி இருக்கிறார்கள்.

முந்திய ஆண்டுகளைப் போலவே ஈழப்போர் 3இன் இரண்டாவது ஆண்டும் (1996) சோதனை, வேதனை, சாதனை படைத்த ஆண்டாகும்.

சூரியக்கதிர் (ஒக்ரோபர்1995) இராணுவ நடவடிக்கையை அடுத்து சூரியக்கதிர் 2 (ஏப்ரல் 1996) 3 (மே 1996) இராணுவ நடவடிக்கைகள் மூலம் சிறிலங்கா இராணுவம், தென்மராட்சி, வடமராட்சி

**வீரம் செறிந்த செச்சினிய மக்கள் யெல்ட்சினுக்குக் கற்றுக்கொடுத்த பாடத்தை, தமிழ் மக்கள் சந்திரிகாவுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். இது நிச்சயம்!**

ஆகிய இரண்டு பிரதேசங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

இதேபோல் சத்ஜெய (யூலை 1996) இராணுவ நடவடிக்கை மூலம் பரந்தன் பகுதியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டதை பெரிய சாதனையென பிதற்றிக் கொண்ட, சிறிலங்காவின் பாதுகாப்புத் துணையமைச்சர் அநுருத்த ரத்வத்த, "தமிழ் மக்களது தலைவர்கள் நாங்கள் என்று கூறிய விடுதலைப்புலிகளை, தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள்" என்றுகூட தான்தோன்றித்தனமாக பாராளுமன்றத்தில் கூறினார்.

அதுமட்டும் இல்லாமல், "விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தோற்கடித்து விட்டோம்..." என்றும் பாராளுமன்றத்தில் கொக்கரித்தார். போரில் தாம் 80 விழுக்காட்டை வென்றெடுத்து விட்டதாகவும், இன்னும் 20 விழுக்காடே இருக்கிறது என்றார். இவர் மட்டுமல்ல, சிறிலங்கா முப்படைகளுக்கும் பொறுப்பாய் இருக்கும் – பொறுப்பற்றவரான சந்திரிகா அம்மையார் கூட, "தமிழ் மக்களை விடுதலைப் புலிகளது பிடியில் இருந்து விடுவித்துவிட்டோம். அவர்கள் இனி எதற்கும் பயப்படத் தேவையில்லை" என்று மார்தட்டிப் பேசினார்.

தமிழ் மக்களுடன் நேரில் பேசி சமாதானத் திட்டம் ஒன்றை அமுல் செய்யப் போவதாகவும், அந்தச் சமாதானத் திட்டத்தின் மூலம் 13 ஆண்டு காலமாக நடைபெற்றுவரும் இன மோதலை முடிவுக்குக் கொண்டுவரப் போவதாகவும், சந்திரிகா தேர்தல் கால வாக்குறுதிகள் போல் அள்ளி வீசினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடிசார் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், போரினால் சீரழிந்து போன யாழ்ப்பாணக் குடாநாட்டை புனர்நிர்மானம் செய்யத் தேவைப்படும் பல கோடி ரூபாய்களை, நட்பு நாடுகளும் – சர்வதேச நிதி நிறுவனங்களும் கொடுத்து உதவ வேண்டும் என்றும் சனாதிபதி சந்திரிகா பகிரங்கமாக ஓர் வேண்டு கோளை விடுத்தார்.

விடுதலைப் புலிகளுடன் எந்தவிதப் பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடப்போவதில்லை என்றும், விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை கீழே வைத்து சரணாகதி அடைந்தால் மட்டுமே அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்றும் பேரினவாத – கண்டிச் சிங்களத் திமிருடன் பேசினார்.

அத்துடன், இறுதியாக 1997ம் ஆண்டு முடிவதற்குள் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துவிடப் போவதாகவும் காலக்கெடு வைத்தார்.

சனாதிபதி சந்திரிகா அம்மையாரும், அவரது மந்திரியும் மாமனுமான அநுருத்த ரத்வத்தையும், யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி நாட்டிய குதிப்பில், வெற்றிக்களிப்பில் கூறிய வார்த்தைகள் – விடுத்த வேண்டுகோள்கள் – எடுத்த சூளுரைகள், இன்று ஏழுமாதங்கள் கழித்து என்னவாயிற்று? அரசியல் – பொருளாதார – இராணுவ மட்டங்களில் இன்றைய யதார்த்தம் என்ன? இவை ஒவ்வொன்றையும் சற்று சுருக்கமாக ஆராய்வோம்.

அரசியல் ரீதியில் "போரின் மூலம் சமாதானம்" அல்லது "சமாதானத்துக்கான போர்" என்பதே சந்திரிகாவின் கோட்பாடாகும்.

அதாவது, போரின் மூலம் விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்டு தான் முன்வைத்திருக்கும் 'அரசியல் பரவலாக்கல்' மூலம் தமிழர்களுக்கு அரைகுறைத் தீர்வுடைய ஓர் சுயாட்சியைக் கொடுத்து, வட–கிழக்கில் தனது படைகளை வைத்து இராணுவ நிர்வாகத்தை ஏற்படுத்திவிட்டால் நாட்டில் சமாதானம் பிறந்துவிடும் என சந்திரிகா நம்புகிறார்.

உலக நாடுகளின் பார்வையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எனக் கூறிக் கொண்டு, அப்பாவித் தமிழ் மக்களை அழிக்கும் போரை நியாயப்படுத்தவும் சந்திரிகா இந்தத் தீர்வுத்திட்டத்தை பயன்படுத்துகிறார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார் என்பதற்கு – சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகள் 960 மில்லியன் டொலர்களை 1997ஆம் ஆண்டில்



ஒருசில நிபந்தனைகளுக்கு இணங்கக் கொடுக்கப்போவதாக – விடுக்கப்பட்டிருக்கும் அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

மேற்குலக நாடுகள், யப்பான் உட்பட தங்களது வர்த்தக பொருளாதார நலன்களுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன.

உலக சமாதானம், மனித உரிமைகள் பற்றி ஆசை வார்த்தைகளை வெளிக்குச் சொல்லிக் கொண்டாலும், உள்ளூர இந்த நாடுகளது குறி – தங்களது சொந்த நலன்களைப் பேணுவதிலும் அவற்றைக் கட்டிக் காப்பதிலுமே இருக்கின்றன.

சமாதானம் பற்றி வானளாவப் பேசும் இந்த நாடுகள்தான் ஆயுத உற்பத்தியிலும், ஆயுத ஏற்றுமதியிலும் முன்னணி வகிக்கின்றன.

இப்படியான தங்கள் இரட்டை வேடம் களைந்துவிடக்கூடாது என்பதற்குத்தான், அவ்வப்போது சமாதானம் பற்றியும் – சமாதானப் படைகளை அனுப்புவது பற்றியும் பேசி – தங்களுக்கு வேண்டிய நாடுகள் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் போது கண்டும் காணாதது போல் இருக்கின்றன. வேண்டாத நாடுகள் மனித உரிமைகளை மீறும் போது கண்டிப்போடு நடந்து கொள்கின்றன.

சிறிலங்காவில் அத்துமீறிய மனித உரிமைகள் மட்டுமல்ல, இரு இனத்திற்கிடையிலான போரே நடைபெறுகிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்கள், பல கோடி பெறுமதியான சொத்து இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன – ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும், தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் இந்த நாடுகள் தங்கள் சொந்த நலன்களுக்காக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டொலர்களை சிறிலங்காவிற்கு நிதியுதவியாகக் கொடுத்து உதவுகின்றன. இந்த நிதியுதவி தமிழீழத்தின் மீதான ஆக்கிரமிப்புப் போருக்கு நெய் வார்க்கிறது.

எனவேதான், சந்திரிகா முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்டத்தை "சமாதானத்திற்கான முன்னெடுப்பு" என்றும், "தனிமனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் சிறிலங்கா அரசில் முன்னேற்றம் காணப்படுவதாக" இந்த நாடுகள் சார்பாக உலக வங்கி அறிக்கை விட்டிருப்பது கொஞ்சமும் ஆச்சரியப்பட வேண்டிய விடயமல்ல.

சந்திரிகாவின் அரைகுறைத் தீர்வுத் திட்டம், தமிழ் மக்கள் மீதும் தமிழ் நிலத்தின் மீதும் இப்போது செலுத்திவரும் சிங்கள மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துமாறு வரையப்பட்டுள்ளது.

இத் தீர்வுத்திட்டத்தால், கடந்த அரைநூற்றாண்டு காலமாக, வடக்கு – கிழக்கில் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்களிலும், அதனால் ஏற்பட்ட பாரிய மக்கள் தொகை மாற்றங்களிலும் எந்தவித மாற்றமும் இருக்காது.

சரி, இந்த அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைக் கூட பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சிங்கள–பௌத்த பேரினவாதம் அடியோடு மறுக்கிறது.

இதுவரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கருத்து வேற்றுமைக்கு அப்பாற்பட்ட விடயங்களிலேயே இணக்கம் காணப்பட்டுள்ளது. முக்கிய விடயங்களில் எந்தவித இணக்கமும் இல்லை.

சிறிலங்காவின் அரசியல் யாப்புவிதி 76 (ஒற்றையாட்சி) திருத்தப்பட வேண்டும் என்பதில் இணக்கம் இல்லை. இதேபோல் வடக்கு – கிழக்கு இணைப்புப் பற்றியும் எவ்வித இணக்கமும் இல்லை.

ஐ.தே.கட்சி, யாப்புவிதி 76 திருத்தப்படுவதையோ, வடக்கு–கிழக்கு மாகாணங்களின் இணைப்பையோ அங்கீகரிக்கப் போவதில்லையென – முன்னாள் நிதியமைச்சரும் இன்னாள் ஐ.தே.பாராளுமன்ற உறுப்பினருமான றொனி டி மெல் தெரிவித்திருக்கிறார்.

எனவே, "ஊசிக் கண்ணுக்கு உள்ளால், ஒட்டகம் நுளைந்தாலும்" பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்டம் நிறைவேறப்

**- நக்கீரன் -**

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

# செச்சினிய மக்கள் யெல்சினுக்கு படிப்பித்த ...

போவதில்லை.

காலத்தைக் கடத்தவே சந்திரிகா இந்தத் தீர்வுத்திட்டம் என்ற மாயமான உபயோகப்படுத்துகிறார். தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறப் போவதில்லை என்பது சந்திரிகாவுக்கும் தெரியும். ஆன காரணத்தினால் தான் அரசியல் தீர்வு என்று வெளிக்குச் சொல்லிக்கொண்டு இராணுவத் தீர்வைத் தீவிரப்படுத்துகிறார்.

1995இல் 3900 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு, 1996ல் 5000 கோடி ரூபாவாக அதிகரித்ததை இது உறுதிப்படுத்துகிறது.

படைப்பலத்தை அதிகரித்து, நவீன இராணுவத் தளபாடங்களையும் போர்க்கரு விகளையும் வாங்கிக் குவித்து விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட சந்திரிகா கடும் முயற்சி செய்கிறார்.

ஆனால், சிங்கள இராணுவம் சந்தித்துவரும் இராணுவத் தோல்விகள் - விடுதலைப் புலிகளை அழிப்பது இருக்கட்டும், அதற்கு முதல் தம்மை எவ்வாறு காப்பாற்றலாம் என்ற நிலைக்கு சிறிலங்கா இராணுவத்தைத் தள்ளியு ள்ளது.

"விடுதலைப்புலிகளின் முதுகெலும்பை உடைத்து, அவர்களை வன்னிக் காட்டுக்குள் துரத்திவிட்டோம். அவர்களால் இனி பெருமெடுப்பிலான தாக்குதல்களை மேற்கொள்ள முடியாது" என்று சிறிலங்கா இராணுவத் தளபதியில் இருந்து சந்திரிகா அம்மையார் வரை கனவுலகச் சிந்தனையில் இருந்தபடி தொடர்புசாதனச் செவ்விகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் கூறி வந்தனர்.

இவ்வாறு இறுமாந்திருந்த வேளை யிலேயே, முல்லைத்தீவு முகாம் முற்றாக துடைத்து அழிக்கப்பட்ட செய்தி இவர்களின் தலையில் இடியாய் இறங்கியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

13 ஆண்டுகால இப்போரில், ஒரு பாரிய சிங்கள இராணுவம் முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

முல்லைத்தீவில் ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினரையும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான இராணுவத் தளபாடங்களையும் சிங்கள இராணுவம் இழந்தது.

விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த முகாமை, கைப்பற்ற சிறிலங்காவின் முப்படை யினராலும் ஒருவாரகாலமாகக் எடுக்கப் பட்ட முயற்சி - விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது - விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறதே தவிர, அதன் தேய்வைக் காட்டவில்லை. இதுமட்டும் அல்லாமல் சிங்களப் படைகளைக் குவித்து யாழ்ப்பாணக் குடாநாட்டையும், பரந்தன் - கிளிநொச்சிப் பிரதேசத்தை பிடிக்கப்போய் தென்தமிழீழத்தின் நிலப்பரப்பில் 80 விழுக்காட்டை விடுதலைப் புலிகளிடம் இழந்துள்ளது.



தமிழ் மண்ணை சிங்கள இராணுவம் கைப்பற்றுவதும், ஆக்கிரமிப்பதும் வேறு - அதனை தக்கவைப்பதும் அங்கே நிலைகொள்வதும் வேறு

யாழ்ப்பாணக் குடாநாடு இதற்கு நல்ல ஓர் உதாரணம். இன்று யாழ்ப்பாணக் குடாநாடு முள்வேலிகள், காவல் அரண் தொடர்கள், மண் மூட்டைச் சுவர்கள் கொண்டு எழுப்பப்பட்ட திறந்தவெளிச் சிறைச்சாலையாகக் காட்சியளிக்கிறது.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களிலிருந்து தப்பவே, சிங்கள இராணுவம் தற்பாதுகாப்புக்காக இராணுவ வேலிக ளையும், சுவர்களையும் எழுப்பி அவற்றின் பின்னால் ஒழிந்து கொள்கிறது.

"விடுதலைப் புலிகளது பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவித்து விட்டோம்....." என்று சந்திரிகா சொல்வது உண்மையானால், சிங்கள இராணு வத்துக்கு பாதுகாப்பு அரண்கள் தேவைப்படாது; நிர்வாகத்தை அரசுப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து குடிசார் நிர்வாகத்தை உருவாக்கிவிட்டு, சிங்கள இராணுவம் முகாம்களுக்குத் திரும்பியி ருக்கலாம்.

ஆனால், ஆண்டு ஒன்று முடிந்தும் யாழ் குடாநாட்டில் எவ்வித நிர்வாகத்தின் சாயலையே காணோம். பரந்தன் - கிளிநொச்சி பிரதேசம் வெறிச்சோடிக் கிடக்கிறது.

வன்னிப் பிரதேச மக்களும், வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்களும் பரந்தன் - கிளிநொச்சிப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்து இருக்கலாம்; விடுத லைப்புலிகளால் மீளக்குடியமரச் செல்லும் தமிழ் மக்களைத் தடுத்திருக்கவே முடியாது; அது இயலாத காரியம்; அப்படி இருந்தும் யாரும் குடியமரவில்லை. காரணம்?

சிறிலங்கா அரசுக்கும் அதன் ஆக்கிரமிப்புச் சின்னமாக விளங்கும் சிங்கள இராணுவத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் காணப்படும் அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்பட வில்லை; அவை சிறிதளவும் மாறாமல் இருந்த, இருந்தபடியே இருக்கின்றன.

சிங்கள இராணுவம் விடுதலைப் புலிகளை மட்டுமல்லாமல், ஒட்டு மொத்தமாக எல்லாத் தமிழர்க ளையும் எதிரிகளாகவே பார்க்கிறது. இரண்டாம் தரக்குடி மக்களாகவே பார்க்கிறது. தமிழ் மக்களும் சிங்கள இராணுவத்தை ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவமாகவே பார்க்கிறார்கள்.

சிங்கள இராணுவத்தின் அடிப்படை நோக்கிலும் -அணுகுமுறையிலும் எள்ளளவு மாற்றமும் இல்லை என்பதனை - யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் கைது, சித்திரவதை, பாலியல் வன்முறை, கொலை, காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

எண்பதுகளில் சிங்கள இராணுவம் விட்ட அதே தவறை, இப்போதும் அது மீண்டும் விடுகின்றது.

எண்பதுகளில் இளைஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு தென்னிலங்கைத் தடுப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அடைத்து வைக்கப்பட்டு கொடிய சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்ப ட்டும், காணாமல் போனோர் பட்டியலிலும் இடம்பெற்றனர். அதே நட வடிக்கையினையே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சிங்கள இராணுவம் இன்றும் செய்கிறது.

தமிழ் இளைஞர்கள் இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டால் ஆயுதப் போராட்டத்தை மழுங்கடித்து விடலாம் என்பது ஆட்சியில் இருந்த - இருக்கின்ற சிங்கள அரசுகளின் சித்தாந்தமாகும். அதனையே சிங்கள இராணுவம் நடைமுறைப்படுத்துகிறது.

எனவே, சிங்களத் தேசியத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டால் ஒழிய, இரு இனங்களுக்கும் இடையில் சமாதானம் நிலவ வழியே இல்லை.

இதனை வேறுவிதமாகக் கூறினால், விடுதலைப் புலிகள் ஆயுதம் தூக்க நிர்ப்பந்திக்கப்பட்ட காரணிகளை நீக்கினால் ஒழிய, தமிழீழத்தில் மட்டும் அல்ல சிறிலங்காவிற்கும் அமைதியோ சமாதானமோ பிறக்க வழியே இல்லை; கொழும்பு முற்றுகையிடப்பட்ட நகரமாகக் காட்சியளிப்பது இதனை நிரூபிக்கிறது.

சிங்கள இராணுவத்தினால் அழிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டை மீளப் புனர்நிர்மானம் செய்து, தமிழ் மக்களுக்கு மின்சாரம் - தொலைபேசி - வங்கிகள் - பாடசாலைகள் -மருத்துவமனைகள் இவை போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து விட்டால் சமாதானம் பிறந்துவிடும் என்று சந்திரிகா தப்புக்கணக்குப் போடுகிறார்.

தமிழீழ விடுதலைக்கான அகிம்சைப் போராட்டம் கூட, இந்த வசதிகளும் - வாய்ப்புக்களும் இருந்த கால கட்டத்திலேயே ஆரம்பமாகியது. இதனை சந்திரிகா இலகுவாக மறந்துவிடுகிறார்.

ஆதிக்கக்காரர்களும் - ஆக்கிர மிப்பாளர்களும், விடுதலைக்குப் போராடும் மக்களின் தேசிய எழுச்சியைப் 'பயங்கரவாதம்' என்று முத்திரை குத்திப் படைபலம் கொண்டு அடக்கிவிட எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. இதற்கான சாட்சி யங்களை உலகவரலாறு பலவற்றில் காணலாம்.

நேற்றுவரை உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்கிய ரசியா, செச்சினியா விடுதலையை ஆயுதபலம் கொண்டு நசுக்கிவிட எடுத்த முயற்சி படு தோல்வியில் முடிந்துள்ளது. இது மிக அண்மைக்கால வரலாற்று நிக ழ்ச்சியாகும்.


எண்ணிப் பன்னிரண்டு லட்சம் மக்களைக் கொண்ட செச்சினியா, 25 கோடி ஆட்பலமும் - பிரமாண்டமான ஆயுதபலமும் கொண்ட ரசியாவைப் புறமுதுகு காண வைத்துள்ளது. ரசியா வீரத்தைக் சண்டைக் களத்தில் விட்டுவிட்டு எஞ்சிய படையோடும் ஆயுதங்களோடும் வெற்றிகரமாகப் பின்வாங்கி உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா புத்திசாலியாக இருந்தால் - அரசியலை ஒரு பாடமாகப் படித்திருப்பது உண்மை யானால் - ரசியா கஸ்ரப்பட்டு ஆள் - ஆயுத இழப்பின் பின் கற்றுக்கொண்ட பாடத்தைப் படித்திருக்கலாம்; ஆனால் அவர் படிக்கவில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மையை தமிழ் மக்கள் மீதும், தமிழ் மண்ணின் மீதும் திணிக்க முன்னைய சிறிலங்கா ஆட்சியாளர்கள் போலவே, சனாதிபதி சந்திரிகாவும் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்.



இதில் சந்திரிகா வெற்றிபெறப் போவதில்லை. வீரம் செறிந்த செச்சினிய மக்கள் யெல்ட்சினுக்குக் கற்றுக்கொடுத்த பாடத்தை, தமிழ் மக்கள் சந்திரிகாவுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். இது நிச்சயம்! ✷

# "எப்படி மறப்போம் நாம்?"




ஞானியர் தவழ்ந்த ஞானபூமியின்
மேனியின் துகிலை யுரியும் பாவியர்
மானமே யுயிராய் வாழும் மக்களின்
சேனைத் தலைவனைத் தடுத்து மறித்ததும்.....

ஈனரின் இழிசெயல் கண்டு வாய் பொத்தி
ஏனிது நடந்ததோ என்றே மலைத்து
வானமும் கடலும் வழிவந்த காற்றும்
மோனமாய் அதிர்ச்சியில் மூர்ச்சித்து நின்றதும்.....

கானமோர் நாடாய்க் கருத் தெலா மினமாய்ப்
பானமோர் தாயக விடுதலைப் பணியாய்
வானுயர் தலைவனின் வழியதே வேதமாய்
தேனுமிழ் தமிழும் கலைகளும் பொருளாய்
துய நல்லன்பினிற் தோய்ந்தெழ சிரிப்புடன்
ஞாலப் பரப்பினில் உயர்வுடன் பறந்த
வானம் பாடியை மானிடத் தோழனை.....
வங்கக் கடலிலே வளைத்துப் பிடித்ததும்.....

தானையின் தலைவனை தழுவி வளர்ந்தவன்
சாதனை வீரராய் களத்தில் கனிந்து தாம்
போன திசையெலாம் பகைவனை பொருதிய
ஏனைய ஒன்பது வேங்கையருடனே
எடுத்த முடிவினை ஏற்றுத் துணிவுடன்
தானொரு தீப்பிழம்பாகி எம் கிட்டு
தாயக வேள்வியில் சங்கமமானதும்
வானொலிச் செய்தியை வாங்கிய செவிகள்
வெப்பு நெய்பட்டு வெந்து துடித்ததும்
கானக வேடனின் கூரிய அம்பதைக்
கண்ணிலே ஏந்திய மானென மக்கள்
தாயக மண்ணிலே தாங்கொணாத் துயரில்
தரையிலே நீந்திக் குருதி சொரிந்ததும்.....

கூனற் தமிழரும் கொலை வெறிச் சிங்கள
வானரப் படைகளும் வாய்விட்டுச் சிரித்ததும்
ஆணியாய் எங்கள் ஆத்மாவில் எழுதிய
அழியா நிகழ்வுகள் ஆறாத புண்களாம்!

ஆண்ட அனுபவம்;அங்கு போர்க் களத்திலே
தீண்டு பகைதனைத் துரத்திய அனுபவம்
துண்டு தலைவனாய்த் தோழனாய் அண்ணனாய்ப்
பூண்ட உறவிலே பூத்த பேரனுபவம்......
கூண்டு வாழ்விலே கூசிய தமிழரைத்
தாண்டி நெஞ்சினுள் தாயக உணர்வினைத்
தோண்டி யூற்றினைத் தொட்ட நல்லனுபவம்.....
மீண்டும் மண்ணிலே மிதித்திடும் வேளையில்
மூண்ட தீயிலே மூர்த்தமாய்ச் சமுத்திரக்
காண்ட மானதை காவியமானதை
நீண்ட பேரதன் நிகழ்வெனச் சொல்வதோ?
ஈண்டு தமிழனின் தொல்விதி யென்பதோ?
ஆண்டு ஆயிரம் ஆயிரம் போயினும்
சான்றதாய் இவன் சரித்திரம் நிற்குமாம்!
வேண்டியாகங்கள் எத்தனை யாக்கினும்
தோன்றுமோ அந்தத் துணிவுகொள் உருவமே!

சொந்த மண்ணிலே சுதந்திரக் காற்றிலே
வந்திறங்குவான் வாஞ்சயாய்த் தலைவனைத்
தந்தையே எனத் தழுவி மகிழுவான்
தனது மக்களைக் கண்களாற் கழுவுவான்!
என்று நாமெலாம் எண்ணியிருக்கையில்
எந்தக் காரியம் எமனென நின்றது!
இந்தியாவது இயற்றிய வஞ்சகம்
குந்தகங்களிற் குன்றென நின்றதே!

கப்பலேறிய கணங்களைக் குறித்தொரு
காக்கை வன்னியன் கண்களைக் காட்டினான்!
துப்பலேந்தியே தேசத்தை விற்றிடும்
துரோகப் பாடலைத் தோத்திரமாக்கினான்!
அப்பலாம் என அரக்கனாய்க் கடலிலே
ஆழ நீரிலே இந்தியம் நின்றது!
ஒப்பிலா ஒரு வீரனை உறுதிகொள்



உயர்ந்த உள்ளத்தை அலையிலே சிந்தினோம்.

எப்படி மறப்பம் நாம் ஏந்தல் கிட்டுவை!
அற்புத உறவினால் அணைத்த கீற்றினை
சொற்ப நாள் பழகினும் சொந்தமாகியெம்
உட்புகுந்தொலித்த நல் உதய கீதத்தை!

கிட்டுவைக்.....
கண்ட நாளின்னும்..... கண்களில் நிழலிட
நொந்த நெஞ்சுடன் நினைத்துப் பார்க்கிறோம்!

லண்டனிற் கிட்டு
என்றனர்; சென்றோம்!
வந்தனம் கூறியே!
வதனம் ஓர் மதியென
நின்றனன். நேரிய
நோக்கினை யுணர்ந்தோம்!
அந்தத் தலைவனின்
அநுமன் நாளென்னும்
அந்தப் பாடலைச்
சாந்தமாய் ஒலித்தான்.....
வந்த பாதையை
மறந்து வாழ்ந்திடும்
மந்தைகள் மத்தியில்
வந்த ஓர் வேதியன்.....
முந்தையோர் நினைவினை
மூடியே மறைத்திடும்
அந்தகர் நடுவிலே
அறிவென விளங்கினான்!

பாலையில் ஒரு பாரிசாதமாய்
பாழ்வனத்திலே பர்ணசாலையாய்
காலை வெய்யிலின் கருணை வெப்பமாய்
காட்சி தந்தெமைக் கட்டி மோந்தனன்!

தேடி வந்த அத்தெய்வ உள்ளத்தைத்
திரும்பி ஓடெனச் சொன்ன பான்மையில்
நாடிலாத ஓர் நீசப்பிள்ளையாய்
நாம் துரத்தினோம்! நாவினை நறுக்கினோம்!

நம்மை விட்டவன் தேவனாகியே
நான்கு ஆண்டுகள் உருண்டு போயின!
தம்மைத் தாயக மீட்பிற் தந்திடல்
தகுந்த தாமெனும் தாமமாகினான்!
பொய்மை போயொரு புதிய வீச்செனப்
புகுந்து நம்முளே போரில் நிற்கிறான்!
உண்மையாம் அவன் உயிரெம் மண்ணிலே
உந்து மாவிசையாகி நின்றதே!

சிங்களப் படை சிதறி ஓடிட.....
சிறுமை கொண்டவர் பதறி ஆடிட.....
எங்களின் படை வெல்லும் நாள் வரும்!
எமது மக்களின் விடிவு தானெழும்!
பொங்கல் நாளது பிறக்கும் நம்மவர்
பூரித்தாடுவர், புகழைப் பாடுவர்!
அங்கு தன்முகம் காட்டுவன் உயர்
அமர வீரனாய் எங்கள் கிட்டுவே !

- புலவர் சிவநாதன்



சிறகை விரித்து
உறவை நினைத்து
கூடு
திரும்பிய குருவிகளே!
பாரத அரசின்
பாரிய சதியால்
பாதியில்
கதையை முடித்தீரே.
கடலின் மடியில்..
மெழுகாய் உருகி
உலகை
வியக்கச் செய்தீரே
தமிழன் மானம்
உயிரை விடவும்
பெரிதே
உணர வைத்தீரே..
4 ஆம் ஆண்டு நினைவாக...